தாயுமானவர் இயற்றிய

கருணாகரக்கடவுள்

प्रज्ञानं ब्रह्म

விளக்கியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

தாயுமானவர் இயற்றிய

கருணாகரக் கடவுள்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களின்
விரிவுரையுடன்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை - 639115, எலமனூர் ஸ்டேஷன்
திருச்சி ஜில்லா
1973

தபோவனத் தொடர் 58

திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

தாயுமானவர் இயற்றிய

கருணாகரக் கடவுள்

விரிவுரையுடன்

நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விஷய கைவல்யமா
நிஷ்கள அசங்கசஞ் சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்தமுக்த
தற்பரவிஸ் வாதீத வ்யோமபரி பூரண
சதானந்த ஞானபகவ
சம்புசிவ சங்கர சர்வேச என்றுநான்
சர்வகா லமும்நினைவனோ
அற்புத அகோசர நிவிர்த்திபெறும் அன்பருக்
கானந்த பூர்த்தியான
அத்துவித நிச்சய சொரூபசா க்ஷாத்கார
அநுபூதி யநுசூதமுங்
கற்பனை யறக்காண முக்கணுடன் வடநிழற்
கண்ணூ டிருந்தகுருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

கடவுள் தத்துவத்தை எவ்வளவுதான் விளக்கிக் கொண்டு போனாலும் அவருடைய மகிமையைச் சொற்களைக் கொண்டு அளந்துவிட முடியாது. அப்படியானால் அவருடைய பெருமையைப் பகருதற்கு மொழி பயன்படுவதில்லையா என்னும் கேள்வி எழுகிறது. ஒரு சிறிதளவுக்கு மொழி பயன்படுகிறது. அதற்குமேல் மனதில் உதிக்கிற

உணர்வு அவருடைய மகிமையை இன்னும் நன்ருக விளக்குகிறது. அந்த உணர்வுக்கு மேல் சுவானுபவமே அவரை உள்ளபடி அறிதற்கு உற்ற உபாயமாகும். மொழியின் மூலம் அவரை அறிய முயலுதல் கடைத்தரமான உபாயம் ஆகிறது. எனினும் அவ்வுபாயத்தை நாம் புறக்கணிக்க முடியாது. தெள்ளியெடுத்த சில சொற்களைக்கொண்டு தாயுமானவர் கடவுளை விளக்க முயலுகிருர். அவர் பகர்வதன் உட்கருத்தை கிரகிக்க நாம் முயலுவோம்.

பரம்பொருளை அவர் நிர்க்குணன் என்கிருர். குணம் இல்லாதவன் என்பது இச்சொல்லின் பொருள். நல்ல குணமுடைய ஒருவனைக் குணவான் என்கிருேம். கெட்ட குணமுடையவனைக் குணக்கேடன் என்கிருேம். நிர்க்குணன் என்று சொல்லுமிடத்து கடவுளைக் குணக்கேடன் அல்லது கெட்ட குணமுடையவன் என்று பொருள்படுத்துவதா? அல்ல. நிர்க்குணன் என்பதற்கு வேறு பொருள் உண்டு. இயற்கை முழுதும் முக்குணங்களால் ஆகியிருக்கிறது. சத்வம், ரஜஸ், தமஸ் என்பன அம்முக்குணங்கள். மூன்று குணத்துக்கும் மூன்று நிறங்களிருக்கின்றன. சத்வம் வெண்மையானது. ரஜஸ் சிவப்பானது. தமஸ் கருப்பானது. தண்ணீர் கார்மேகமாக இருக்கிறது. அதைத் தமஸோடு ஒப்பிடலாம். சூரிய வெளிச்சம்பட்டு அது செம்மேகமாக இலங்குவதுண்டு. அந்நிலையை ரஜோ குணத்தோடு ஒப்பிடலாம். பனிக்கட்டியாக அந்நீர் மலையின்மீது வீழ்ந்து கிடப்பதுண்டு. அப்பொழுது அது வெள்ளை வெளேரென்று ஒளிர்கிறது. அந்நிலையில் அது சத்வ குணத்திலிருக்கிறது. அப்பனிக்கட்டி உருகி நன்னீர் ஆகின்றபொழுது அதற்கு ஒரு நிறமும் இல்லை. அதை நிறமற்றது என்கிருேம். பரம்பொருள் அத்தகைய நிலையில் இருக்கிருர். பிரபஞ்சத்தி

லுள்ள யாவும் முக்குணமயமானவைகள். கடவுளோ இயற்கைக்கு அப்பாற்பட்டவர். ஆதலால் அவர் நிர்க்குணன் என இயம்பப்படுகிறார்.

மேலும் நிராமயன் என்னும் அடைமொழி அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆமயன் என்னும் சொல் நோய் வாய்ப்பட்டவன் என்று பொருள்படுகிறது. யார் நோய் வாய்ப்படுவதில்லையோ அவன் நிராமயன். இச்சொல் கடவுள் ஒருவருக்கே பொருந்தும். அவரைத் தவிர ஏனைய இயற்கைப் பொருள்களெல்லாம் நிலைகுலைந்திருப்பதுண்டு. உயிர்வகைகள் தத்தம் நிலைகளினின்று வழுவித் துன்பம் துய்ப்பனவாகின்றன. அப்பொழுது அவைகளை நோய்வாய்ப்பட்டவைகள் என்கிறோம். ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய உயிர்களனைத்தும் சிற்சில வேளைகளில் நோய்க்கு உட்படுகின்றன. உயிர்களனைத்துக்கும் உயிராயிருக்கிற இறைவன் நிறைமையே வடிவெடுத்தவர். குலைவு ஒன்றும் அவருக்குண்டாவதில்லை. குறை ஒன்றும் அவருக்கில்லை. எனவே அவர் ஒருவரே நோய்க்கு ஆளாகாதவர். ஆதலால் அவரை நிராமயன் என்று நவிலுவது முறை.

பரம்பொருள் நிரஞ்சனன் என அழைக்கப்படுகிறார். அஞ்சனம் என்பது மை அல்லது கறை. அதற்கு எதிரிடையாயிருப்பது நிரஞ்சனம். வெள்ளைத் துணியின்மீது மை விழுந்தால் அது பார்வைக்கு நன்கு விளங்குகிறது. வெள்ளைத் துணியின்மீது அமைந்துள்ள களங்கமாக அது தென்படும். பூமியைக் களங்கமுடையதாக நாம் செய்துவிடலாம். காற்றினிடத்தும் அத்தகைய குறையை உண்டுபண்ண நமக்கு இயலும். தீ எரித்துப் புகையை உண்டுபண்ணினால் அது காற்றின்மீது களங்கத்தை உண்டுபண்ணிவிடுகிறது. அத்தகைய களங்கமான காற்று நிறைந்த வெட்ட வெளியும்

களங்கமாக்கப்பட்டது போன்று காட்சி கொடுக்கிறது. ஆனால் பூமிக்கு அப்பால் பல மைல் தூரம் போய்விட்டால் ஆங்கு இருக்கும் வெட்ட வெளியை அழுக்காக்குதற்கு ஆங்கு ஒன்றுமில்லை. அப்பரந்த வெளியோடு பரம்பொருளை ஒப்பிடலாம். அவர்மீது மாசு படியும்படி செய்வதற்கு அவருக்கு அந்நியமாக வேறு பொருள் ஒன்றுமில்லை. தோன்றியுள்ள பொருள்களனைத்தும் அவரிடத்திருந்து வந்தவைகள். பின்பு அவரே தோற்றத்துக்கு அப்பாற்பட்டவராக இருக்கிறார். அத்தகைய பெருநிலையில் அவருக்கு அந்நியமாக ஒன்றும் கிடையாது. முற்றிலும் அவரே அவர் மயமாயிருப்பதால் அவரை நிரஞ்சனன் என்று இயம்பலாம். களங்கமற்றவர் என்பது அதன் பொருள்.

இறைவனுக்கு நிராலம்பன் என்பது மற்றோர் அடைமொழி. ஆலம்பம் இல்லாதது எதுவோ அது நிராலம்பம். ஆலம்பம் என்னும் சொல் பற்றுக்கோடு என்று பொருள் படுகிறது. நீண்டு வளர்ந்து வருகிற கொடி ஒன்றுக்கு பற்றுக்கோடு அல்லது ஆதரவு வேண்டியிருக்கிறது. சமய வாதிகள் சர்வேசுவரனை கைலாசம் அல்லது வைகுண்டத்தில் வீற்றிருப்பவராக விளக்குகின்றனர். அத்தகைய பரமபதத்தில் அவர் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதாகவும் இயம்புகின்றனர். சிம்மாசனத்தில் அவர் அமர்வாராகில் அது அவருக்குப் பற்றுக்கோடு ஆகிவிடுகிறது. சிம்மாசனத்தை நீக்கிவிட்டால் அவருக்கு இருக்க இடமில்லாது போய்விடுகிறது. எழுந்து நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு வந்து விடுகிறது. அப்படி நின்று கொண்டிருக்கிற பொழுது அப்பரமபதமே அவருக்குப் பற்றுக்கோடு ஆகிவிடுகிறது. தங்குதற்கேற்ற இடம் என்பது அதன் பொருள். எதை ஆலம்பமாக அல்லது பற்றுக்கோடாக வைத்துக்

கொண்டு கடவுள் இருக்கிறார் என்னும் கேள்வியை எழுப்பலாம். அகண்டமாய், நுண்ணியதற்கும் நுண்ணியதாயிருக்கிற அப்பரம புருஷனுக்கு அவரையன்றி வேறு பற்றுக்கோடு ஒன்றுமில்லை. அண்டங்களனைத்துக்கும் ஒரு விதத்தில் அவர் பற்றுக்கோடு ஆகிறார். நீக்கமற நிறைந்திருக்கிற அவருக்குப் பற்றுக்கோடு ஒன்றும் தேவையில்லை. எனவே அவர் நிராலம்பன் என்று அழைக்கப்படுகிறார். அவர் எழுந்தருளியிருக்கும் சொர்க்கம், கைலாசம், வைகுண்டம் என்பனவெல்லாம் மனிதனுடைய சிற்றறிவுக்கு விளங்குதற்பொருட்டு மனிதனால் கற்பிக்கப்பட்ட பெருநிலங்களாம். அவை யாவுக்கும் அப்பாற்பட்டவராகவே அவர் இருக்கிறார்.

தெய்வம் நிர்விஷயன் என நவிலப்படுகிறார். விஷயமாகாதவர் என்பது அப்பதத்தின் பொருள். ஓசை காதுக்கு விஷயமாகிறது. ஒளி அல்லது வடிவம் கண்ணுக்கு விஷயமாகிறது. சுவை நாவுக்கு விஷயமாகிறது. தொட்டு உணர்தல் மேனிக்கு விஷயமாகிறது. மோத்தல் மூக்குக்கு விஷயமாகிறது. எண்ணுதல் மனதுக்கு விஷயமாகிறது. பரம்பொருளோ இவையாவுக்கும் அப்பாற்பட்டவர்.எனவே அவரை அறிதற்கு ஐம்பொறிகள் உதவமாட்டா. மனதும் அவரை உணர்தற்கான கருவியாகாது. கடவுளைக் காணுதல் என்பதும், அவருடைய உத்தரவைக் கேட்பது என்பதும் மனிதனால் கற்பிக்கப்பட்ட பிரபஞ்ச சம்பந்தமான அனுபவங்களாகின்றன.ஆனால்கடவுளோஅப்படி கருவிகரணங்களுக்கு விஷயமாகமாட்டார். கருவிகரணங்களற்ற அதீத நிலையில் உள்ளது அவருடைய சாந்நித்தியம். ஆதலால் அவர் நிர்விஷயன் என்று பகரப்படுகிறார்.

கைவல்யம் என்னும் சொல் கடவுளுக்குச் சாத்தப்படுகிறது. முற்றிலும் பரிபக்குவம் அடைந்தான பிறகு ஜீவர்

கள் கைவல்ய முக்தி பெறுகிருர்களென்றும் பகர்வதுண்டு. கைவல்யம் என்னும் சொல்லுக்கு நாம் விளக்கம் கண்டு பிடிக்கவேண்டும். ஒரு கடம் அல்லது பானைக்குள்ளேயிருக் கிற வெளியைக் கட ஆகாசம் என்கிறோம். நாலாபக்கமும் அதைச் சூழ்ந்திருக்கிற பெருவெளியை மகா ஆகாசம் என் கிறோம். கட ஆகாசம் அந்தக் கடத்துக்குள்ளே கட்டுப் பட்டது போன்று தென்படுகிறது. அந்தக் கடத்தை உடைத்துவிட்டால் கட ஆகாசம் மகா ஆகாசத்தில் கைவல்ய மாய்விடுகிறது. எல்லையிலடங்கியது போன்று தென்பட்டுக் கொண்டிருந்த கட ஆகாசம் கடம் என்னும் எல்லையை உடைத்துத் தள்ளிவிட்டு மகா ஆகாசத்தில் ஒன்றுபட்டு விடுகிறது. அப்பொழுது அது அடைகிற நிலை கைவல்யம். கடவுளுக்கு எல்லை கட்டுவதற்கு அவருக்கு அந்நியமாக வேறு ஒரு பொருளுமில்லை. அத்தகைய பெரிய பொருளை ஒரு விக்கிரகத்துக்குள் ஆவாஹனம் பண்ணிவைத்திருப்ப தாக மனிதன் கற்பித்துக்கொள்கிருன். அந்த விக்கிரஹத் துக்குப் பழுது ஏதாவது ஏற்பட்டு விட்டால் கடவுளின் சாந் நித்தியம் அதைவிட்டு அகன்று போய்விட்டது என்றும் அவன் எண்ணிக்கொள்கிருன். அத்தகைய எண்ணம் கடவு ளின் நிஜசொருபத்தை அறிந்துகொள்ளாமையினுல் வரு கிறது. அவரைக் கைவல்யன் என்று அறிந்துகொள்கிறவர் கள் அவரை எதிலும் கட்டுப்படுத்த முடியாதென்பதை அறிந்துகொள்கின்றனர். கடவுள் ஒருவர்தான் கைவல்யப் பொருள் ஆகின்ருர். நித்யமுக்தனுய் அவர் இருக்கிரு ரென்றும் அவருடைய கைவல்யத்துக்குப் பொருள் சொல்ல லாம்.

பரம்பொருள் நிஷ்களன் எனப் பகரப்படுகிருர். பகுக் கப்படாதவர் என்பது அதன் பொருள். எது ஒன்று பகுக்

கப்படுகிறதோ அதற்கு வடிவம் உண்டு. எது பகுக்கப் படுவதில்லையோ அதற்கு வடிவம் கிடையாது. ஐம்பெரும் பூதங்களுள் ஆகாசம் பகுக்கப்படாதது. எனவே அதற்கு ரூபம் ஒன்றுமில்லை. கடவுளுக்கு வடிவமிருப்பதாக மனிதன் கற்பிக்கிருன். அத்தகைய கற்பனை அவனுக்கு முற்றிலும் அவசியமானது. ஏனென்ருல் ஒரு வடிவத்தின் மூலமாக வன்றி ஒரு பொருளைக் கிரஹிக்க மனிதனுக்கு இயலுவ தில்லை. உருவமற்ற பொருளை உருவமுடையதாக எண்ண வேண்டிய நிர்ப்பந்தம் மனிதனுக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஒரு உருவம் படைத்திருப்பதாக எண்ணுவதற் கிடையில் கடவுள் உண்மையில் நிஷ்களன் அதாவது உருவ மற்றவர் என்பதை ஆத்ம சாதகன் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அசங்கன் என்பது கடவுளுக்கு நாம் கொடுத்திருக்கிற மற்ருெரு அடைமொழி. எதனேடும் கூடாதவர் என்பது அதன் கருத்து. பல பேர் கூடியிருப்பது சங்கம். அடியார் களுடனும், தமது கணங்களுடனும் தெய்வம் கூடியிருக் கிருர் என்று நாம் கருதி வருகிறேம். அத்தகைய திருக் கூட்டத்தில் தேகத்தை உகுத்தான பிறகு நாம் போய்ச் சேரவேண்டுமென்றும் எண்ணிவருகிறேம். நமது திருப்தி யின் பொருட்டு அத்தகைய சைவத் திருக்கூட்டத்தை அல்லது வைஷ்ணவத் திருக்கூட்டத்தைப் பற்றி நாம் எண்ணி வருகிறேம். கைவல்ய நிலையில் கடவுளுக்கு அந்நியமாக வேறு வியக்தி ஒன்றுமில்லை. அவர் தனிப் பொருளாக இருக்கிருர். ஆதலால் அவர் அசங்கன் என்று அழைக்கப்படுகிருர். கூட்டமில்லாத தன்னந்தனிப்பொருள் என்பது அதன் கருத்து.

சஞ்சலரகிதன் என்று பரம்பொருள் பகரப்பெறுகிருர். அசைவு அற்றவர் என்பது அதன் பொருள். ஓர் இடத்தி

லிருந்து மற்றோர் இடத்துக்குப் போவதை அசைதல் என்று சொல்லுகிறோம். எது அசைகிறதோ அது எல்லையிலடங்கிய சிறிய பொருள். நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிற பொருள் அசைவதில்லை. அவர் இல்லாத இடம் கிடையாது. எனவே அவர் எப்படி அசைய முடியும்? அசையாமையினால் அவர் சஞ்சலரகிதன் என்று சொல்லப்படுகிறார். கடவுள் நிர்வசனன். சொல்லில் அடங்காதவர் என்றும், சொல் ஒன்றும் சொல்லாதவர் என்றும் இப்பதம் பொருள்படுகிறது. ஓசைக்கெல்லாம் அப்பாலிருக்கும் பொருளிடத்திருந்து ஓசையை எதிர்பார்க்கலாகாது. ஆங்கிருப்பது மௌனம். அதுதான் அவரைப்பற்றிய உண்மை.

நிர்த்தொந்தன் என்றும் அவர் இயம்பப்படுகிறார். தொந்தம் என்னும் சொல் இரண்டு எனப்பொருள்படுகிறது. கடவுளோ இரண்டற்றவர். அவர் சக்தி சமேதனாய் இருக்கிறார் என்கின்ற விளக்கம் கீழ்நிலையில் வருகிறது. மஹாவிஷ்ணு லக்ஷ்மியை மார்பில் வைத்திருக்கிறார் என்று சொல்வதும், சிவனார் மாது ஒருபாகம் ஆனவர் என்று சொல்வதும் கீழ்நிலையிலுள்ள விளக்கங்கள் ஆகின்றன. முடிந்த நிலையிலோ சிவமும் சக்தியும் ஒன்றே. திருமாலும் திருமகளும் ஒன்றே. அவரை நிர்த்தொந்தன் என்றே இயம்பவேண்டும். நித்தன் என்று இறைவன் அழைக்கப்படுகிறார். எப்பொழுதும் உள்ளவர் என்பது அதன்பொருள். ஒரு காலத்தில் இருந்து இன்னொரு காலத்தில் இல்லாது போகும் பொருள் நித்தம் ஆகாது. கடவுளோ காலத்தைக் கடந்தவராய் யாண்டும் இருக்கிறார்.ஆதலால் அவர் நித்தன்.

முக்தன் என்னும் அடைமொழியும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எதிலும் கட்டுப்படாதவர் என்பது அதன் கருத்து. தன்னில் தானே திருப்தி அடைந்திருப்பவன் என

தற்பரன் என்பது பொருள்படுகிறது. விஸ்வம் என்பது பிரபஞ்சம். அதைக் கடந்திருப்பவன் அதீதன். எனவே விஸ்வாதீதன் என்றால் பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டவன் எனப் பொருள்படுகிறது. வ்யோமம் என்னும் சொல் மகா ஆகாசம் அல்லது பெருவெளியைக் குறிக்கிறது. அதில் நிறைந்திருப்பவன் பரிபூரணன் ஆகிறான். ஆதலால் வ்யோம பரிபூரணன் என்பது மகா ஆகாசமெங்கும் நிறைந்திருப்பவன் என்று பொருள்படுகிறது. எப்பொழுதும் ஆனந்தத்திலிருப்பவன் சதானந்தன் ஆகிறான். ஞான வடிவினனாய் இருப்பவன் ஞானன்.

பகவான் என்னும் சொல் இறைவனைக் குறிக்கிறது. ஆறுவித தெய்வீக சம்பத்துக்களையுடையவன் பகவான் ஆகிறான். ஞானம், வைராக்கியம், வீர்யம், ஐசுவரியம், ஸ்ரீ, கீர்த்தி ஆகிய இந்த ஆறும் பகவத் சம்பத்துக்கள் ஆகின்றன. இவ்வாறினுள் ஏதேனும் ஒன்று சிறிதளவாவது வாய்க்கப்பெற்றிருந்தாலே ஜீவாத்மன் ஒருவன் மகாத்மன் ஆகிவிடுகிறான். இந்த ஆறுவித மேன்மைகளும் சர்வேசுவரனிடத்துப் பரிபூரணமாய் நிறைந்திருக்கிற பொழுது அவருடைய மகிமைகளை எல்லாம் அளவிட யாருக்கு இயலும்! சம்பு என்று இறைவன் அழைக்கப்படுகிறார். இன்ப சொரூபி என்பது அதன் பொருள். அவரை சிவன் என்று அழைக்கின்றபொழுது மங்களம் அனைத்துக்கும் உறைவிடம் அவர் எனப் பொருள்படுகிறது. நலமனைத்தையும் அவர் செய்வதால் அவர் சங்கரன் என்று சொல்லப்படுகிறார். சராசரங்களனைத்தையும் அவர் ஆண்டு வருவதால் சர்வேசுவரன் என்றும் அவரை அழைக்கிறோம்.

கடவுளுக்கு இத்தனை விதமான அடைமொழிகளைத் தாயுமானவர் ஏன் சொரியவேண்டும் என்னும் கேள்வி

எழலாம். ஒரு நாமம் ஒருரும் இல்லாத அவருக்கு ஆயிரம் பெயர்களும் அதற்கு மேற்பட்டும் அமைந்திருக்கின்றன. அதற்கேற்ற காரணமும் உண்டு. உணவு வகைகள் வித விதமாக அமைந்திருந்தால் ஒவ்வொன்றிலும் ஒரு சிறிது அருந்தித்திருப்தியடையலாம். ஒருவகை உணவு பொருந்தா தவனுக்கு இன்னொரு வகை உணவு அப்பேருண்டியில் அடங்கியிருக்கிறது. மனிதனுக்கு அருள் விருந்து ஆகின்ற வர் கடவுள். அவரை அறிந்துகொள்ளுதல் மிகக் கஷ்டம். ஆயினும் விதவிதமான விளக்கங்கள் கொடுத்து அவரைப் புகழ்கின்ற இடத்து அவரைப் பற்றிய நினைவு சிறிது சிறி தாக உறுதிபெற்று விடுகிறது. இறைவனைப் பற்றித் தொடர்ந்து நினைக்க முடியாதவர்களுக்கும் விளக்கங்கள் பல இருக்கின்ற பொழுது அவரைத் தொடர்ந்து நினைக்க இயலுகிறது. இறைவனை உறுதியாக நினைக்கத் தகுதி யற்றவர்களையும் தகுதியுடையவர்களாக இத்தகைய நினைவு முறை அல்லது அர்ச்சனை முறையானது ஆக்கி விடுகிறது. ஆதலால்தான் கணக்கற்ற பெயர்களைக்கொண்டு கடவு ளுக்கு அர்ச்சனை செய்கிறோம். கணக்கற்ற அடைமொழி களைச் சொல்லி அவரைச் சிந்தித்துப் பழகுகிறோம். இத்த கைய சிறந்த சாதனையை, நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப நிர்விஷய கைவல்யமா நிஷ்கள அசங்க சஞ்சல ரகித நிர்வசன நிர்த்தொந்த நித்த முக்த தற்பர விஸ்வா தீத வ்யோம பரிபூரண சதானந்த ஞான பகவ சம்பு சிவ சங்கர சர்வேச என்று நான் சர்வகாலமும் நினைவனே என்று தாயுமானவர் இறைவனிடம் விண்ணப்பிக்கிறார்.

இயற்கையின் நடைமுறையை இறைவனைப்பற்றிய பெரிய நூல் என்று பகரலாம். அதை ஆராயுமளவு அது வியப்புக்குரியதாகிறது. ஆராய்ச்சியில் ஆழ்ந்து செல்லு

மளவு அதைப்பற்றிய வியப்பும் பெருகிக்கொண்டேபோகும். இயற்கையின் நடைமுறைதான் உண்மையில் ஈசன் செயல். அவருடைய செயல்களனைத்தும் மேலும் மேலும் ஆச்சர்யத்தையே ஊட்டிக்கொண்டு போவதால் அவரை அற்புதா என்று தாயுமானவர் விளிக்கிறார். வியப்புக்குரியவரே என்பது அதன் பொருள்.

இறைவனைப்பற்றியும் அவருடைய செயலைப்பற்றியும் வியப்படைகிற நாம் மேலும் அவரைப் பற்றிச் சிந்திக்கவும் ஆராய்ச்சி பண்ணவும் ஆரம்பிக்கிறோம். ஆராய்ச்சியில் ஆழ்ந்து மூழ்குமிடத்து மற்றோர் உண்மை வெளியாகும். தோற்றத்தில் வந்திருக்கும் அவருடைய பெருமை மிகக் குறைந்தது. தோற்றத்துக்கு வராது இருப்பது அளப்பரியது. மனிதன் கற்கிற கல்வியைப்பற்றிய பழமொழி ஒன்று உண்டு. கற்றது கைமண்ணளவு; கல்லாதது உலகளவு என்பது அப்பழமொழி. முறையாகக் கடவுளின் மகிமையை ஆராய்ச்சி பண்ணுகிறவர்கள் நம்முடைய அறிவைக்கொண்டு அவரை ஒருநாளும் அறிந்துகொள்ள முடியாது என்கிற முடிவுக்கு வருவார்கள். ஆழாக்கைக்கொண்டு ஆழியை அளந்துவிட முடியாது. அதேவிதத்தில் நம்முடைய சிற்றறிவைக் கொண்டு நாம் கடவுளை முழுதும் கிரஹிக்க முடியாது. இக்காரணத்தை முன்னிட்டே அவர் அகோசர என்று அழைக்கப்படுகிறார். மானுட அறிவுக்கு எட்டாதவர் என்பது அதன் பொருள்.

மூடுபனிப் படலம் ஒன்றில் மறைக்கப்பட்ட மனிதன் ஒருவன் திகைத்து நின்றான். அவன் நின்ற இடம் ஒன்று தான் அவனுக்குச் சிறிது கட்புலனானது. ஓரடிக்கு அப்பால் என்ன இருந்ததென்று அவனுக்கு விளங்கவில்லை. அடர்ந்த புகை சூழ்ந்துகொண்டது போன்ற மறைப்பு ஏற்பட்டு

இருந்தது. ஆனால் புகைக்குள் புதையுண்டு கிடப்பவன் திக்குமுக்குப் பிடித்துத் திண்டாடுவதுண்டு. அத்தகைய சங்கடம் அவனுக்கு வரவில்லை. சிறிது சிறிதாக நடந்த பொழுது மரம் செடி கொடிகளைச் சந்திக்கிற நிலை அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் அவைகளும் நிழல்போன்று அவனுக்குத் தென்பட்டன. மூடுபனி அவனுக்கு எதையும் உள்ளபடி காண்பதற்கு இடந்தரவில்லை. எனினும் இடம் மாறிப் போக அவன் தொடர்ந்து முயன்றான். சிறிது நேரத்துக்குப் பிறகு மூடுபனி தெளிவடைந்தது. பிறகு அது இல்லாது மறைந்து போயிற்று. அதன் மறைப்பு நிவிர்த்தி ஆயிற்று எனலாம். பிரவிர்த்தி என்பது தோற்றத்துக்கு வருவது. நிவிர்த்தி என்பது தோற்றத்தினின்று மறைவது. மூடுபனி மறைந்துபோன பிறகு அம்மனிதன் அழகியதொரு பூஞ்சோலையில் தான் இருந்ததாக உணர்ந்தான். அதனுள் நாலா பக்கமும் அவன் சென்று பார்த்தான். அதைவிட்டு வெளியில் வந்தான். வானத்தை மறைத்துக்கொண்டிருந்த மரங்கள் அப்பொழுது ஆங்கில்லை. மேல்நோக்கிப் பார்த்தான். உயரத்தில் மேகப் படலங்கள் இருந்தன. பிறகு ஆங்கிருந்த அவைகளும் மறைந்தன. உயரத்திலிருந்த மேகங்களுக்கும் நிவிர்த்தி உண்டாயிற்று. நீல நிறமான வெட்ட வெளியும் அதில் ஒளிரும் சூரியனும் அவன் காட்சிக்கு இலக்காயின. சூரியனைச் சுயநிலையில் அவன் கண்டு மகிழ்ந்தான். மனிதனுடைய நிஜசொரூபமும் அத்தகையது. அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமய கோசம் முதலியன அவனுக்குச் சொந்தமான சொரூபத்தை மறைத்துக் கொண்டிருக்கின்றன. அவைகளைத் தன் சொந்த சொரூபம் என்று எண்ணி மனிதன் மயங்குகிறான். அவைகளிடத்து உண்டாகும் மாறுதல்கள் அவனை இன்ப துன்பங்களுக்கு ஆளாக்குகின்றன. தானல்லாததைத் தான்

என்று கருதி அவன் ஏக்கமுறுகிறான். தன் நிஜசொரூபத்துக்கு அந்நியமானவைகளிடத்திருந்து தன்னை விடுவித்துக் கொள்வது நிவிர்த்தி. 'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்' என்பது கோட்பாடு. மனிதனுக்குக் கோசமாக அமைந்தவைகள் எல்லாம் பிரகிருதி அல்லது இயற்கையைச் சார்ந்தவைகள். அவைகளினின்று ஒதுங்கிக் கொள்ளுகின்ற அளவு அவனுக்கு அல்லல்கள் போய்விடுகின்றன. நிஜசொரூபத்தில் அவனுக்கு அன்பு அதிகரிக்கிறது. நிஜசொரூபத்தில் அன்பு வைப்பவர்களே அன்பர்கள். அவர்களைப் பக்தர்கள் என்கிறோம். பக்தி பெருகுகின்ற அளவு ஆனந்தம் மேலிடுகிறது. ஆனந்தம் தங்குதடையற்றது ஆகிவிடுங்கால் அது பூர்த்திபெற்று விடுகிறது. நிவிர்த்தியில் செல்லுவதன் சிறப்பு இதுவேயாம். வேறொரு விதத்தில் பகருமிடத்து துறவின் சிறப்பு இதுவேயாம். இக்கோட்பாட்டை, நிவிர்த்தி பெறும் அன்பருக்கானந்த பூர்த்தியான என்று தாயுமானவர் பகர்கிறார்.

இரும்புக்கும் காந்தத்துக்கும் தொடர்வு உண்டு. காந்தத்தை அணுக இரும்பு யத்தனிக்கிறது. காந்தத்தினில் மூழ்கிய பிறகு இரும்பு தானே காந்தமாகிவிடுகிறது. ஜீவாத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் இடையிலுள்ள தொடர்வு அத்தகையது. அறிந்தும் அறியாமலும் பரத்தைநோக்கி ஜீவன் பெரும் பயணம் போய்க்கொண்டிருக்கிறான். பரமாத்மாவின் அருகில் வரவர ஜீவாத்மாவுக்கு ஆனந்தம் அதிகரிக்கிறது. பரமாத்மாவின் முன்னிலையில் அவன் பேரானந்தத்தில் திளைத்து இருக்கிறான். பிறகு ஜீவபோதம் மறைந்து போய் பேரானந்தப் பூர்த்தியே எஞ்சியிருக்கிறது. அந்நிலையில் ஜீவாத்மன் பரமாத்மன் என்கிற துவிதம் இல்லை. இரண்டற்ற நிலை முடிவானது. அது அத்துவிதம் எனப்படு

கிறது. அத்தகைய அனுபூதி மாறாத பேருணர்வாய்விடு கிறது. இக்கோட்பாட்டை, அத்துவித நிச்சயம் என்று அண்ணல் இயம்புகிறார்.

காந்தத்தை அணுகுதற்கு முன்பு இரும்பு காந்த சக்தி யற்றதாய் இருந்தது. காந்தத்தில் சேர்ந்த பிறகே தானும் காந்தமயமாயிற்று. அதேவிதத்தில் ஜீவாத்மன் பரமாத்மா வுக்கு அந்நியமாயிருக்கின்றபொழுது அந்த ஜீவாத்மன் ஆனந்தத்துக்கு அந்நியமானவனா என்னும் கேள்வி எழலாம். பரமாத்மனுக்குப் பக்கத்தில் வரவர தன்னுடைய நிஜசொரூ பம் ஜீவாத்மனுக்கு நன்கு விளங்குகிறது. தானே ஆனந்த சொரூபி. தான் வேறு, பரமாத்மா வேறு அல்ல; தன்னைப் பரமாத்மனுக்கு அந்நியன் என்று எண்ணிக்கொண்டிருந்த பொழுதும் தான் பரமாத்மனுக்குப் புறம்பாய் இருந்ததில்லை என்கிற உணர்வு வந்துவிடுகிறது. அலைஒன்று தனக்குத் தனி வியக்தி இருக்கிறதென்று எண்ணலாம். தான் வேறு, கடல் வேறு என்று அது கருதிக்கொண்டு இருக்கலாம். அப்படிக் கருதுகிற வேளையிலும் அது கடல் சொரூபத்தோடு கூடி யதே. அதேவிதத்தில் ஜீவாத்மன் பரமாத்மனோடு யாண்டும் அத்துவித நிலையையுடையவன். ஞான நிலையில் அந்த அனு பூதி உறுதியாய்விடுகிறது. கடல் வேறு அலை வேறு என்று நெடுநாளாக எண்ணிக்கொண்டிருந்தது அக்ஞானநிலை. கட லுக்கும், அலைக்கும் பொதுவாயிருக்கிற நீர் என்னும் வஸ் துவை ஆராய்ச்சிசெய்து பார்த்தபிறகு உண்மை விளங்கி விடுகிறது. வெறும் நாமரூபத்தால் கடல் வேறு அலைவேறு என்கின்ற வேற்றுமை இருந்தது. நீர் என்னும் வஸ்துவி னிடத்து அந்த வேற்றுமையில்லை. இரண்டும் ஒருபொருள் தான் என்கிற இரகசியம் வெளியாய்விடுகிறது. அனுகூதம் என்னும் சொல் இரகசியம் எனப் பொருள்படுகிறது.

உண்மை வெளியாகாதிருந்தது என்பதுவே அதன் கருத்து. இல்லாததை இருப்பதாகக் கற்பிப்பது கற்பனையாகிறது. ஜீவனை அணுமயம் என்று கருதுவதுண்டு. அது உண்மையா அல்லது கற்பனையா என்பது கேள்வி. ஜீவன் தன்னை அணுவாகக் கருதலாகாது; அகண்ட சச்சிதானந்தமாகக் கருத வேண்டும் என்பது ஞான நெறி. ஜீவன் அணுப்போன்று சிறிய பொருளா? அல்லது அகண்ட சச்சிதானந்தம் என்னும் பெரிய பொருளா? தனக்கு ஜீவபோதத்தைக் கற்பித்துக்கொள்கிறபொழுது அணுப்போன்று அவன் சிறியவன். ஜீவபோதத்தை நிராகரிக்கின்றபொழுது அவன் அகண்ட சச்சிதானந்தன். மீண்டும் அலையையும் சமுத்திரத்தையும் சான்ருக எடுத்துக்கொள்ளவேண்டும். நாம ரூபத்தைக் கற்பித்துக்கொண்டு தன்னை அலையாக நினைக்கின்ற இடத்து அது வண்ணத்தில் சிறியது. நாமரூபத்தை நீத்துவிட்டு அது கடலில் ஒன்றித்துவிடுகின்றபொழுது அகண்டவஸ்து. ஜீவாத்மனுக்கும், பரமாத்மனுக்கும் உள்ள தொடர்வு இத்தகையதே. கற்பனையால் இரண்டுக்குமிடையில் பேதமிருக்கிறது. கற்பனையை அழிக்குமிடத்து அத்துவைதம் நிச்சயமாகிறது. இக்கோட்பாட்டை, சொரூப சாக்ஷாத்கார அனுபூதி அனுகூதமும் கற்பனை யறக்காண என்று தாயுமானவர் பகர்கிருர். சாக்ஷாத்கார அனுபூதி என்பது நேரே கண்டுணர்தல் எனப்பொருள்படுகிறது.

இறைவனுக்கு முக்கண்ணன் என்பது பெயர். நாம் அதை உருவகப்படுத்துகின்ருேம். மக்களாகிய நமக்கு இருப்பது போன்று அவருக்கு ஊனக்கண் இரண்டு. பிறகு சிறப்பாகத் தெய்வத்துக்கு இருக்கவேண்டிய ஞானக்கண் ஒன்று. அதை நெற்றியில் அமைத்து அவருடைய வடிவத்தைக் கருதுகிருேம். கண்மேல் ஒரு கண்ணுடையான் என்

றும் அவரைப் பகர்கிறோம். திரியம்பகன் என்பது இன்னொரு பெயர். முக்கண்ணன் என்பது அதன் பொருள். இறைவன் தமது மூன்றாவது கண்ணைத் திறந்தால் உலகம் வெந்துபோய்விடும் என்ற நம்பிக்கை நமக்கிடையில் இருந்து வருகிறது. உண்மையில் அவர் மூன்றாவது கண்ணைத் திறந்து கொண்டுதானிருக்கிறார். உலகமும் அவிந்துபோகாது இருக்கிறது. ஆதலால் அவர் முக்கண்ணனாயிருப்பதன் உட்கருத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். நமக்கு அமைந்துள்ள இரு கண்களைக்கொண்டு பிரபஞ்சத்தைப் பொருள் படுத்துகிறோம். கண் மூடியிருக்கும்பொழுது அல்லது கண் கெட்டுவிடும்பொழுது உலகை நாம் காணமுடிவதில்லை. ஆனால் சர்வேசுவரனோ சர்வகாலமும் பிரபஞ்சம் முழுவதையும் பார்த்த வண்ணமாயிருக்கிறார். அவருடைய காட்சிக்குப் புறம்பாக ஓர் அணுவும் இருப்பதில்லை. எல்லாம் யாண்டும் அவர் காட்சியிலிருப்பதால் அவர் நித்திய ஜாக்கிரதா அவஸ்தையிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஞானக்கண் பெறுவது ஜீவர்களாகிய நமக்குச் சாத்தியம். அதைப் பெறுதல் பொருட்டே ஆத்ம சாதனங்களனைத்தையும் நாம் செய்து வருகிறோம். ஐம்பொறிகளை அடக்கியாளுதலே அதற்குற்ற உபாயமாகும்.

> பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறிநின்றார் நீடுவாழ் வார்

என்பது மறைமொழி. நீடு வாழுதல் ஞானக்கண்ணைப் பெறுதலைக் குறிக்கிறது. அங்ஙனம் நமக்கு ஞானக்கண் அமைகின்றபொழுது உலகக் காட்சி தெய்வக் காட்சியாக மாறிவிடுகிறது. மயக்கத்தில் பாம்பாகத் தென்பட்டது தெளிவு நிலையில் கயிறாகத் தென்படுகிறது. நமக்கு அஞ்ஞான மயக்கம் இருக்கிறபொழுது உலகக்காட்சி. ஞானத்

தெளிவு வரும்பொழுது பரத்தின் காட்சி. நமக்கு ஏககாலத்தில் இந்த இரண்டும் அமைவதில்லை. ஆனால் சர்வேசுவரனுக்கோ பிரபஞ்சத்தின் காட்சியும், பரத்தின் காட்சியும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. அதைக் காட்சி என்று சொல்லுவது பொருந்தாது. உலக சொரூபமாகவும், அதற்கப்பாற்பட்டவராகவும் அவர் இருக்கிறார். முக்கண்ணைப் பற்றிய உண்மை இதுவே. வடநிழற்கண் என்பது வடவிருக்ஷத்தின் கீழ் எனப் பொருள்படுகிறது. வடவிருக்ஷத்தின் கீழ் தென் முக ஞானகுருவாக அவர் எழுந்தருளியிருக்கிறார். வட விருக்ஷமும் ஒரு தத்துவத்துக்கு விளக்கமாகிறது. அசுவத்தம் அல்லது ஆலமரத்தின் இனத்தைச் சேர்ந்தது வட விருஷம். அது பிரபஞ்சத்தின் சின்னம். பிரபஞ்சத்தின் துணைகொண்டே ஜீவர்களாகிய நாம் பிரபஞ்சத்துக்கு அப்பால் செல்ல முயலவேண்டும். அந்த அளவில் நமது ஆத்ம சாதனத்துக்கு அது பெருந்துணை புரிகிறது. இக்கருத்துக்களை முக்கணுடன் வடநிழற் கண்ணூடிருந்த குருவே என்கிறார் தாயுமானவர். 'மானுடா, இயற்கையின் துணை கொண்டு இயற்கைக்கு அப்பால் போக நீ முயலுவாயாக' என்னும் கோட்பாட்டைத் தமது சொருபத்தில் வைத்து இறைவன் இடையறாது விளக்கிக் கொண்டிருக்கிறார். அக் கோட்பாடு மனபரிபாகம் அடைந்தவர்களுக்கே விளங்குகிறது. சனகன், சனந்தன், சனாதனன், சனத்குமாரன் ஆகிய நால்வர்க்கு அவர் சொல்லாமலேயே அவ்வுண்மை விளங்கிவிட்டது. மனபரிபாகமே அதற்குக் காரணமாகும். இக்கருத்துக்கள் யாவற்றையும் மேற்கூறிய பாடலின்கண் தாயுமானவர் தொகுத்து அமைத்திருக்கிறார்.

கருணாகரக் கடவுள் - 2

மண்ணாதி ஐந்தொடு புறத்திலுள கருவியும்
வாக்காதி சுரோத்ராதியும்
வளர்கின்ற சப்தாதி மனமாதி கலையாதி
மன்னுசுத் தாதியுடனே
தொண்ணூற்றொ டாறுமற் றுள்ளனவும் மௌனியாய்ச்
சொன்னவொரு சொற்கொண்டதே
தூவெளிய தாயகண் டானந்த சுகவாரி
தோற்றுமதை என்சொல்லுவேன்
பண்ணும் இசையினொடு பாடிப் படித்தருட்
பான்மைநெறி நின்றுதவருப்
பக்குவ விசேஷராய் நெக்குநெக் குருகிப்
பணிந்தெழுந் திருகைகூப்பிக்
கண்ணுறு கரைபுரள நின்றஅன் பரையெலாங்
கைவிடாக் காட்சியுறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

இயற்கையிலுள்ள பொருள்கள் எத்தனை விதமானவைகள் என்னும் கேள்வி பிறக்கக்கூடும். இக்கேள்வி கணித சாஸ்திரத்தில் உண்டாகின்ற கேள்வி போன்றதன்று. கணக்கு ஒன்றைக் கொடுத்து அதற்கு விடை கண்டுபிடிக்கும்படி கணக்கறிஞரைக் கேட்டால் அவர்கள் கணக்குப் போட்டு விடை கண்டுபிடிப்பார்கள். எத்தனைபேர் கணக்குப் போட்டாலும், எந்தச் சூழ்நிலையிலிருந்து கொண்டு கணக்குப் போட்டாலும், எக்காலத்தில் கணக்குப் போட்டாலும் கணக்கு ஒன்றுக்குச் சரியான விடை ஒன்றே. தப்

பான விடைகளோ எண்ணிக்கையிலடங்காது எத்தனை எத்தனையாகவோ பிரிந்துகொண்டு போகக்கூடும். ஆனால் கணிதத்தில் வந்துள்ள கேள்வி போன்றது அன்று இயற்கையைப் பற்றிய கேள்வி. ஒரு பொருள்தான் இயற்கையாக இலங்குகிறது என்று ஒருவர் பகர்ந்தால் அது உண்மை. ஏனென்றால் மெய்ப்பொருளாகிய கடவுளே இயற்கையாக இலங்குகிறார். இரண்டு பொருள்களைக் கொண்டது இயற்கை என்றால் அதுவும் சரியே. ஏனென்றால் அந்த ஒரு பொருளை வசதியின் பொருட்டு சிவ சக்தி என்று இரண்டாகப் பிரித்துச் சொல்லலாம். மூன்று பொருள்களைக்கொண்டு இயற்கை ஆகியிருக்கிறதென்றால் அதுவும் உண்மையே. மும்மூர்த்திகள் மயம் அல்லது முக்குணமயமானது உலகு. நான்கு பொருள்களைக் கொண்டு உலகம் ஆனது என்றால் அதுவும் உண்மையே. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்கள் மயமாக உலகம் இருக்கிறது. இப்படியே எண்ணிக்கையை வேண்டியவாறு பெருக்கிக் கொண்டே போகலாம். இயற்கை எப்பொருள், அல்லது எப்பொருள்களைக் கொண்டு ஆகியுள்ளது என்னும் கேள்விக்கு எண்ணிக்கையிலடங்காத விடைகள் உண்டு. எல்லா விடைகளிலும் ஏதேனும் ஒரு விதத்தில் உண்மை அடங்கியிருப்பதையும் நிரூபிக்கலாம். நூலோர்கள் ஐதிகமாக இப்பிரிவினைகளைச் சில எண்ணிக்கைகளில் அமைத்து வைத்திருக்கிறார்கள். ஆறு சாஸ்திரங்களில் ஒன்றாகிய சாங்கிய சாஸ்திரப்படி இருபத்தைந்து தத்துவங்களைக் கொண்டது இப்பிரபஞ்சம். இன்னும் சில சமய சாஸ்திரங்களின்படி முப்பத்தாறு தத்துவங்களைக் கொண்டது இது. மேலும் இதைத் தொண்ணூற்றாறாக விரித்துக்கொண்டு போகின்ற சமயங்களும் இருக்கின்றன. ஏன் இவர்கள் இப்படிச்

செய்யவேண்டும் என்கின்ற கேள்வி வரலாம். அதற்குக் காரணத்தை எடுத்துக் காட்டுவது மிக எளிது. சென்னையிலிருந்து ஒருவன் நாட்டின் தலைமைப் பட்டணமாகிய டெல்லிக்கு இருப்புப்பாதை வண்டியில் பயணம் போகிறான் என்று வைத்துக்கொள்வோம். சென்னையிலிருந்து புறப்பட்டு டெல்லியைப் போய்ச் சேருவது என்று அதைச் சொல்லி விடலாம். வழியில் முக்கியமான ஐந்தாறு நிலையங்களில் வண்டி நிற்பதைப்பற்றி விளக்கலாம். வழி நெடுக உள்ள நிலையங்களையும், ஊர்களையும், காட்சிகளையும் பற்றி விளக்கிக்கொண்டே போகலாம். இயற்கையைப் பற்றிய விளக்கமும் அத்தகையதே.

இயற்கைக்கு விளக்கம் கூறுவதும் மானுட அமைப்புக்கு விளக்கம் கூறுவதும் கிட்டத்தட்ட ஒத்து இருக்கின்றன. தாயுமானவர் ஈண்டு மானுட அமைப்புக்கு விளக்கம் கொடுக்கிறார். அது தொண்ணூற்றாறு தத்துவங்களைக் கொண்டது என்னும் கோட்பாட்டை அவர் தெளிவுபடுத்துகிறார். மண்ணாதி ஐந்தொடு என்று அவர் கணக்கை ஆரம்பிக்கிறார். மண் முதலிய ஐந்து பூதங்கள் இருக்கின்றன. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று அவைகள் இயம்பப்படுகின்றன. புறத்திலுள்ள கருவியும் என்பது அடுத்தபடியாக வருகிறது. ஸ்தூல சரீரத்தில் அமைந்துள்ள கருவிகள் என்பது அதன் கருத்து. அவைகளை கர்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து எனப் பத்தாகப் பிரிக்கலாம். கர்மேந்திரியங்கள் ஐந்தை வாக்காதி என்னும் சொல்லில் அவர் அடக்கிவிடுகிறார். வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என அவைகள் பெயர் பெற்றுள்ளன. பாணி என்னும் சொல் கையைக் குறிக்கிறது. தண்டபாணி என்னும் சொல் தண்டத்தைக் கையில் பிடித்

திருப்பவன் என்று பொருள்படுகிறது. பாயு என்னும் சொல்லுக்குக் குதம் என்னும் மற்றொரு பதம் இருக்கிறது. உடலில் உணவு ஜீரணமான பிறகு பயன்படாத மலத்தை அப்புறப்படுத்தும் கருவி என்பது அதன் பொருள். உபஸ்தம் என்பது மற்றொரு கருவி. அது மூத்திரத்தைப் போக்குதற்கு உதவுகிறது.

சுரோத்ராதியும் என்னும் சொல்லிலே ஞானேந்திரியங்கள் ஐந்தை அவர் அடக்கிவிடுகின்றார். தொட்டு உணர்தற்கு உடம்பெங்குமுள்ள தோல் உதவுகிறது. தொக்கு அல்லது த்வக் என்பது அதற்குரிய பரிபாஷைச் சொல். 'சுரோத்ர' அல்லது 'கர்ண' என்னும் சொற்கள் காதைக் குறிக்கின்றன. சக்ஷு என்னும் சொல் கண்ணைக் குறிக்கிறது. ஜிஹ்வை என்னும் சொல் நாக்கைக் குறிக்கிறது. ரஸனா என்றும் இது அழைக்கப்படுகிறது. க்ராணம் என்னும் சொல் மூக்கைக் குறிக்கிறது. ஆக இவ்வைந்தும் சேர்ந்து ஞானேந்திரியங்கள் ஆகின்றன.

வளர்கின்ற சப்தாதி என்னும் சொல் தொடரிலே விரிவடைந்துகொண்டு போகின்ற தன்மாத்திரைகள் என்னும் கருத்து அடங்கியிருக்கிறது. ஐந்து ஞானேந்திரியங்களுக்கு இலக்காகின்ற ஐந்து தன்மாத்திரைகள் உள. சப்தம் என்னும் தன்மாத்திரை காதுக்கு இலக்காகிறது. ஸ்பரிசம் என்னும் தன்மாத்திரை த்வக் அல்லது தோலுக்கு இலக்காகிறது. உருவம் என்னும் தன்மாத்திரை கண்ணுக்கு இலக்காகிறது. ரஸம் என்னும் தன்மாத்திரை நாவுக்கு இலக்காகிறது. கந்தம் என்னும் தன்மாத்திரை மூக்குக்கு இலக்காகிறது. இவைகளை வேறொரு விதத்தில் பகருமிடத்து,

சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு

என்னும் கோட்பாட்டில் உலகைப்பற்றிய அனுபவங்கள் அனைத்தும் அடங்கிவிடுகின்றன.

மனமாதி என்பது அடுத்தபடியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள விஷயமாகும். இச்சொல் அந்தக்கரணங்களைக் குறிக்கின்றது. கண், காது போன்ற புறக்கரணங்கள் ஐந்து இருப்பதுபோன்று அந்தக்கரணங்கள் நான்கு இருக்கின்றன. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

கலையாதி என்று மேலும் பகரப்பட்டிருக்கிறது. வித்தியா தத்துவங்களென்று அவைகள் பெயர் பெற்றுள்ளன. எண்ணிக்கையில் அவை ஏழு ஆகும். அவைகளை முறையே காலம், நியதி, கலை, வித்தை, ராகம், புருஷன், மாயை என்று நூலோர் பகர்வர்.

மன்னுசுத்தாதியுடனே யென்று மேலும் மொழியப் பட்டிருக்கிறது. சுத்த தத்துவங்கள் ஐந்து இருக்கின்றன. சுத்த வித்தை, ஈசுவரன், சதாசிவம், சக்தி, சிவம் என்பன அவ்வைந்தின் பெயர்களாம்.

இதுகாறும் கூறியவைகள் எண்ணிக்கையில் முப்பத்தாறு தத்துவங்கள் ஆகின்றன. இவைகளுக்கு மேல் இன்னும் அறுபது தத்துவங்கள் இருக்கின்றன. பூதகாரியம் இருபத்தைந்து, வாயு பத்து, நாடி பத்து, கர்மேந்திரிய காரியங்கள் ஐந்து, வாக்கு நான்கு, குணம் மூன்று, அகங்காரம் மூன்று ஆகிய இவையாவும் கூடி அறுபது தத்துவங்கள் ஆகின்றன. மொத்தத்தில் இவைகளின் எண்ணிக்கை தொண்ணூற்ருறு ஆகின்றன. அவைகளைத் தொண்ணூற்ருெடாறும் என்று தாயுமானவர் தொகுத்துரைக்கிருர். நமக்கு விருப்பமிருந்தால் இவைகளுக்கு மேற்பட்டும் தத்து

வங்களின் எண்ணிக்கைகளைப் பெருக்கிக்கொண்டே போக லாம். அப்படிப் பெருக்குதற்கு இயற்கை இடம் தருகிறது என்னும் கருத்தை மற்றுள்ளனவும் என்று அவர் மொழி கிறார்.

ஒன்றோடொன்று முற்றிலும் முரண்படுகின்ற இரண்டு எதிர் நிலைகள் ஒரே பயனை விளைவிப்பன போன்று தோன் றும். சில உதாரணங்களைக்கொண்டு இதைத் தெரிந்து கொள்ளலாம். வெளிச்சமும் இருளும் ஒன்றோடொன்று முரண்படுகிற எதிர் நிலைகள் ஆகின்றன. மிகைபட்ட வெளிச்சத்தில் மனிதனுக்குக் கண் தெரியாது. குறைபட்ட வெளிச்சத்திலும் அவனுக்குக் கண் தெரியாது. எனவே கண் தெரியவில்லை என்னும் நிலையை வெளிச்சம் இருள் ஆகிய இரண்டும் செய்து விடுகின்றன. ஓசை அதிகமா யிருந்தால் காது கேட்காது. ஓசையே இல்லாது போய் விட்டாலும் காது கேட்காது. ஈண்டு இரண்டு எதிர் நிலை களிலும் பயன் ஒன்றே. இதேவிதத்தில் ஞானத்தின் உச்ச நிலையும், அக்ஞானத்தின் தாழ்வும் ஒரே பயனை விளைவிப் பன போன்று தென்படுகின்றன. எப்படி யென்று பார்ப் போம். அயர்ந்து தூங்குகின்றபொழுது மனிதன் அக்ஞானத் தில் மூழ்கிவிடுகின்றான். அந்நிலையில் ஈண்டு இயம்பிய தொண்ணூற்றாறு தத்துவங்களும் இருக்கும் இடம் தெரி யாது ஒடுங்கிப் போய்விடுகின்றன. வேற்றுமைகளுக்கு ஆங்கு இடமில்லை. ஜீவாத்மன் அப்பொழுது இருக்கிறான் என்று சொல்லவும் முடியாது; இல்லை என்று சொல்லவும் முடியாது. சொல்லால் விளக்க முடியாத நிலை அது. ஆனால் அது சூன்யமல்ல. ஏனென்றால் அவ்வனுபவத்துக்கு சாக்ஷியா யிருந்த ஜீவாத்மன் அதைவிட்டு விழிப்புக்கு வந்தவுடனே அதைப்பற்றி தனக்குத் தெரிந்த அளவு ஏதேனும் ஒன்றைத்

தெரிவிக்கிறான். அந்நிலைக்கு அவன் சாக்ஷியாயிருந்ததனால் தான் அது சூன்யமல்ல என்கிறோம்.

அன்பர்கள் சிலர் கூடிக்கொண்டு ஒரு பழத்தோட்டத்துக்குள்ளே சென்றார்கள். அது மிக அற்புதமாக அமைக்கப் பெற்றிருந்தது. பார்ப்பதற்கு ரமணீயமாயிருந்தது. தோட்டத்துக்குள் வந்த அன்பர்கள் அங்கே எத்தனை மரங்கள், அவைகளில் எத்தனை இலைகள் இருக்கின்றன என்று எண்ணிப்பார்க்க ஆரம்பித்தார்கள். ஆனால் அக்கூட்டத்தைச் சேர்ந்திருந்த ஒருவனுக்கு அப்படி இலைகளை எண்ணிப் பார்ப்பதில் ஊக்கம் சிறிதும் உண்டாகவில்லை. தோட்டத்துக்குள் வந்ததும் தோட்டக்காரனைத் தேடிப்பார்த்தான். ஓர் இடத்தில் அவனைக் கண்டுபிடித்தான். தன்னை அவனிடம் அறிமுகப்படுத்தினான். நல்ல கனியுண்ண தனக்கு விருப்பமிருக்கிறதென்றும் தெரிவித்தான். தோட்டக்காரனுடைய அனுமதியையும், உதவியையும் கொண்டு நன்றாகக் கனிந்த கனிகள் சிலவற்றைப் பறித்துப் புசித்து இன்பமடைந்தான். அத்தோட்டத்துக்குள் வந்தவர்களுள் புத்திசாலி யார்? இலை எண்ணியவர்களா, அல்லது கனியுண்டவனா? அத்தோட்டத்துக்கு ஒப்பானது இப்பூவுலக வாழ்வு. இங்கே தத்துவ ஆராய்ச்சிகள் பண்ணிக்கொண்டிருப்பது இலை எண்ணுவதற்கு ஒப்பானது. இறைவனுடைய அருளைப் பெற்று பரமானந்தத்தில் திளைத்திருப்பது கனியுண்பதற்கு ஒப்பானது. மெய்ஞ்ஞானமும், நிறை பக்தியும் பரமானந்தத்தை ஊட்டவல்லவைகள்.

இனி இலையெண்ணுதற்கு மாறாயிருக்கிற ஞானத்தின் உச்சநிலையில் உண்டாகிற அனுபவம் முழுதும் பேரின்பமேயாம். அக்கோட்பாட்டை மௌனியாய்ச் சொன்னவொரு **சொற்கொண்டதே தூவெளிய தாயகண் டானந்த சுக**

வாரி தோற்றுமதை என்சொல்லுவேன் என்று தாயுமானவர் வியந்து கூறுகிறார். மௌனகுரு எழுந்தருளி அவருக்கு ஞான தீக்ஷை கொடுத்ததுமே நிர்விகல்ப சமாதி வந்துவிட்டது. அது பெரிதும் ஆழ்ந்த தூக்கத்தை ஒத்தது எனினும் பண்பில் அதற்கு நேர்மாறானது. தூக்கத்தில் உருவங்களையெல்லாம் கடந்த இருள் வெளியை ஜீவன் அனுபவிக்கிறான். சமாதி நிலையில் உருவங்களையெல்லாம் கடந்த தூவெளியை அவன் துய்க்கிறான். தூவெளி என்று சொல்லுமிடத்து அது ஜோதி சொரூபமானது எனப் பொருள்படுகிறது. உறக்கத்தில் அணுவுக்கும் அணுவாய் ஜீவனுடைய அனுபவம் யாவும் ஒடுங்கிவிடுகின்றது. அந்நிலையில் ஒரு வித ஆனந்தமும் உண்டு. ஏனென்றால் தூங்கியெழுந்த ஒவ்வொரு மனிதனும் ஆனந்தமாய்த் தூங்கினேன் என்கிறான். கனவில் கஷ்டங்கள் தோன்றலாம். ஆழ்ந்த உறக்கத்தில் ஆனந்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை. இனி சமாதி நிலையிலோ ஞானியின் அனுபவம் அகண்டானந்தமாய் விடுகிறது. எல்லையிலடங்காத பேரின்பம் என அது பொருள்படுகிறது. மிக நுண்ணியதாயிருக்கிற அணுவின் நிலையும் எல்லை மருவாத அகண்டத்தின் நிலையும் ஒன்றே என்பது நவீன பௌதிக விக்ஞானிகளின் துணிபு. இதே துணிபுக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பரம ஞானிகள் வந்துள்ளார்கள். அக்கோட்பாடு அகண்டானந்தம் என்னும் சொல்லிலே அடங்கி நிற்கிறது. அந்த ஆனந்தத்துக்கு சுகவாரி என்று மற்றொரு அடைமொழியை அவர் வழங்குகிறார். இன்பக்கடல் என்பது அதன் பொருள். எல்லையிலடங்காத தன்மையை இச்சொல்லும் சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய பேரனுபவம் சமாதி நிலையினின்று உண்டாகிறது. சொல்லிலடங்காத பேரனுபவம் அது. ஆதலால் அதை என் சொல்லுவேன் என்கிறார் அண்ணல்.

தாயுமான சுவாமிகளுக்கு ஏற்பட்ட இந்த அனுபவம் இக்காலத்தில் விவேகானந்த சுவாமிகளுக்கும் ஏற்படுவதாயிற்று. இரண்டுபேருக்கும் முடிவான அனுபவம் ஒரேவிதமாயிற்று. பலவிதமான நாமரூபங்களையுடைய பிரபஞ்சம் பாரமார்த்திகப் பெருநிலையில் வேறுபடுகிற தோற்றங்களையெல்லாம் இழந்துவிட்டு அகண்ட சச்சிதானந்த சொரூபமாயிற்று. அந்நிலையினின்று திரும்பவும் வியவகாரிக நிலைக்கு விவேகானந்தருடைய மனது இறங்கிய பிறகும் பிரபஞ்சம் யாவும் சின்மயம் என்பதை அவர் ஐயம் திரிபு அற உணரலானார். யாவும் சிவமயம் என்று சைவசித்தாந்தம் பகர்வதை யாவும் சின்மயம் என்று வேதாந்த சாஸ்திரம் விளம்புகிறது. பரிபாஷைச் சொற்கள் இரண்டு எனினும் அவைகளின் உட்கருத்து ஒன்றேயாம்.

ஞானம் பெரியதா, அல்லது பக்தி பெரியதா என்னும் பிரச்னை பலர்க்கிடையில் திரும்பத் திரும்ப வந்துவிடுவதுண்டு. 'சாதனத்தின் உச்சத்துக்குச் செல்லுங்கால் ஞானமும், பக்தியும் ஒன்றாய் விடுகின்றன' என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பகர்வதுண்டு. இவ்விரண்டும் ஒன்றில் ஒன்று லயமாவதை அவர் ஓர் அரிய உபமானத்தைக் கொண்டு விளக்குகிறார். சூரியோதயத்தின் பொழுது அல்லது அஸ்தமனத்தின் பொழுது சில நாட்களில் சூரிய வெளிச்சமும் சந்திர வெளிச்சமும் ஒன்றில் ஒன்று கலந்து இயற்கை முழுதிலும் புதிய சோபையைத் தருவதைக் காணலாம். அதே விதத்தில் ஆத்ம சாதகர்களுள் யாரோ சிலர்க்கு ஞானமும் பக்தியும் கலந்திருப்பதைக் காணலாம். அத்தகைய பக்தியின் விளக்கம் இனி வருகிறது.

பக்தியில் இசை முக்கியமான இடம் பெறுகிறது. உள்ளத்தை உருக்குவது பக்தியின் செயல். உருகுகின்ற

உள்ளத்தை இன்னும் விரைவில் உருக்கி உருமாறும்படி செய்ய வல்லது இசை. எதை எதையெல்லாம் செய்ய வல்லது இசை என்பதற்கு இயற்கையில் வேண்டியவாறு சான்றுகள் இருக்கின்றன. காட்டு விலங்குகளை இசையைக் கொண்டு கட்டிவிடலாம். மரம் செடி கொடிகளிடத்துப் பேரின்பத்தைப் பெருக்கவல்லது இசை. உயிர்களனைத்தையும் ஒன்றுபடுத்த வல்லது அது. பிரபஞ்ச வாழ்வை மறந்துவிட்டு அதீத நிலைக்கு மனதை எடுத்துச் செல்லும் திறனும் அதற்குண்டு. கண்ணபிரான் ஊதிய குழலோசையினின்று அவ்வுண்மை வெளியாகிறது. இக்கோட்பாட்டை பண்ணாரும் இசையினொடு பாடி என்று தாயுமானவர் சொல்லுகிறார். விதவிதமான ராகங்களோடு கூடிய சங்கீதத்தைப் பயன்படுத்தி பக்தி நிறைந்த பாடல்களைப் பாடுதல் நல்ல ஆத்மசாதனமாகும் என்பது அதன் கருத்து.

பக்தியைப் புகட்டும் நூல்களை உள்ளன்போடு படிப்பது நல்ல பக்தி சாதனமாகும். அதுதான் உண்மையில் செவிக்குணவாகிறது. பகவானுடைய பெருமைகளைப்பற்றிப் படிக்கப் படிக்க அவருடைய அருளுக்குப் பக்தன் உட்பட்டு விடுகிறான். அருளைச் சார்ந்திருக்குமளவு பக்தனுடைய வாழ்வு நல்வாழ்வாக மாறிவிடுகிறது. மறந்தும் அவன் கெட்ட செயலில் செல்லமாட்டான். நன்னெறியில் நிலைத்து நின்று விடுவதே அவனுடைய இயல்பு ஆகிறது. இக்கருத்துக்களைப் படித்து அருட்பான்மை நெறிநின்று என்னும் சொற்களில் தாயுமானவர் அடக்கிவைக்கிறார்.

ஜீவாத்மன் பரமாத்மனையடைதற்குச் சாதனங்கள் பல இருக்கின்றன. அவைகளுள் மிக எளியதாய் அமைவதும் சுலபத்தில் ஜீவனைப் பரத்தின்கண் எடுத்துச் செல்லவல்லதும் பக்தி. வாழ்ந்திருக்கும் உயிர் வகைகள் உடல் வளர்ச்சி

யில் இடையூறின்றி மேலே போவது போன்று பக்தி சாதனமானது சாதகனை மேன்மையின்கண் எடுத்துச் செல்லுகிறது. வளர்கின்ற குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மாறியமைந்து வருகிறது என்று பகர்வதுண்டு. அதேமுறையில் பக்தியும், பக்தனைச் சிறப்புடன் பக்குவமடையும்படிச் செய்துவிடுகிறது. இக்கோட்பாட்டை தவுருப்பக்குவ விசேஷராய் என்று அண்ணல் இயம்புகிறார்.

அடுப்பில் ஏற்றிக் காய்ச்சும் நீர் ஆரம்பத்தில் அமைதியாகச் சூடு பெறுகிறது. பிறகு அதனிடத்து ஒருவித ஓசையுண்டாவதைக் கேட்கலாம். சூடு அதிகமான பிறகு அது கொதிக்கிறது. ஆட்டத்தை அதன்கண் காணலாம். அதேமுறையில் பக்திப் பெருக்கு அதிகரித்திடுங்கால் சில அறிகுறிகளின் மூலம் அது வெளியாகிறது. காட்சிக்கு எட்டாது அதை மறைத்து வைக்க பக்தனுக்கு இயலாது. கசிந்து கசிந்து உருகுதல் அந்த அறிகுறிகளுள் ஒன்று. பன்முறை வீழ்ந்து வணங்குதல் மற்றொன்று. எழுந்து நிற்பதும், திரும்பவும் வீழ்ந்து வணங்குதலும் எத்தனையோ தடவை பக்தனுடைய மேனியில் நிகழ்ந்து கொண்டிருக்கும். இரண்டு கைகளையும் கூப்பி வணங்குதலில் அவன் அடையும் ஆனந்தத்துக்கு அளவில்லை. இக்கருத்துக்களை நெக்கு நெக்குருகிப் பணிந்து எழுந்து இரு கை கூப்பி என்று தாயுமானவர் சொல்லுகிறார்.

பக்தனுக்கு வலிவு எங்கிருந்து வருகிறது என்பது கேள்வி. இக்கேள்வியை உலகத்தவர் நிலையில் வைத்து ஆராய்ச்சி பண்ணலாம். குழந்தை ஒன்றுக்கு வலிவு எங்கிருந்து வருகிறது? அது சொட்டுகிற கண்ணீரில் வலிவு இருக்கிறது. அழுது தாயினிடமிருந்து வேண்டியதை அது

பெற்றுவிடுகிறது. பெண் ஒருத்தி தாய் தந்தையரிடமிருந்து அல்லது தன் கணவனிடமிருந்து கண்ணீர் சிந்தி தான் விரும்பியதைப் பெற்று விடுகிருள். உலக வாழ்க்கையி லேயே சிந்துகிற கண்ணீருக்கு அத்தகைய சக்தி உண்டு. இனி, பாரமார்த்திகப் பெருவாழ்வில் கண்ணீர் பெறுகிற வலிவு அளப்பரியது. கண்ணீர் சிந்தி பக்தன் கடவுளைக் கூவி அழைப்பாஞகில் அவர் பறந்தோடி வருகிருர். பெரி யோர் அனைவருடைய அனுபவம் அது. தமது மனதினிடம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இங்ஙனம் முறையிடுகிருர்: ‘நிலையற்றவைகளாகிய பொருளும் போகமும் வேண்டு மென்று மனமே நீ குடம் குடமாகக் கண்ணீர் சிந்துகிருய். கடவுளை நாடி நீ ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தியதுண்டா?' பக்தன் ஒருவன் கடவுளை நாடி ஏராளமாகக் கண்ணீரைப் பொழிவாஞகில் அவன் கடவுளின் அருளைப் பெறுவதற்கான தருணம் அணுகிவிட்டதென்று அதினின்று யூகித்துக் கொள்ளலாம். அடியார்க்கு எளியவன் என்பது கடவுளைப் பற்றிய அடைமொழிகளில் ஒன்று. பறந்தோடி பக்தர்களைக் காப்பது அவனுடைய கடமை என்று பகவான் பகர்ந்துள் ளார். சிந்துகிற கண்ணீரால் உன் கண்ணனது உயர்நிலை எய்திவிடுகிறது. ஊனக் கண்ணுயிருப்பது ஞானக் கண் ணாய் மாறிவிடுகிறது. கடவுளின் திருக்காட்சி ஞானக் கண் ணுக்கு இயல்பாய்க் கிடைத்துவிடுகிறது. தனக்கு நல்ல துணையாயிருப்பது தெய்வந்தான் என்பதையும் பக்தன் அப் பொழுது அறிந்துகொள்கிருன். இக்கருத்துக்களையெல்லாம் கண்ணுறு கரைபுரள நின்ற அன்பரை யெலாம் கை விடாக் காட்சியுறவே என்று தாயுமானவர் சொல்லுகிருர். மழையாகப் பொழியும் பொழுது அதை விண்ணுறு என லாம். ஆகாய கங்கை என்பது அதன் பொருள். பூமியிலே

பெருக்கெடுத்து ஓடுகிறபொழுது அது மண் ஆறு ஆகிறது. பக்தனுடைய கண்களினின்று வருகின்றபொழுது அது கண் ஆறு ஆகின்றது. அந்தந்தப் பருவத்தில் ஒவ்வொரு ஆறும் கரைபுரளப் பெருகுவதுண்டு. பக்தன் பகவானுக்கு உரியவன் ஆகின்றபொழுது அவனுடைய கண் ஆறும் இமைகளாகிய கரைபுரள ஓடுகிறது.

கடவுளுக்குக் கருணைகரன் என்பது ஒரு பெயர். அருளாளன் என்பது அதன் கருத்து. உயிர் வகைகளை உய்விப்பதிலேயே அவர் ஊக்கம் கொண்டிருக்கிறார். எந்த ஜீவன் எத்துறையிலே எவ்வளவு தூரம் பக்குவமடைந்திருக்கிறானே அதற்குமேல் அவன் இன்னும் ஒருபடி உயர்வு அடைவதற்கு ஏதுவான சூழ்நிலையை இறைவன் அமைத்துவைக்கிறார். அந்த உயர்ந்த நிலைக்குப் போவதற்கான ஊக்கம் ஜீவாத்மனிடம் உண்டாகும்படி அவர் உள்ளிருந்து துணைபுரிகிறார். எனவே அவர் கருணைகரக் கடவுளே என்று அழைக்கப்படுகிறார். இக்கருத்துக்கள் எல்லாம் இப்பாடலில் அமைந்திருக்கின்றன.

கருணாகரக் கடவுள் - 3

எல்லாமுன் அடிமையே எல்லாமுன் உடைமையே
எல்லாமுன் னுடையசெயலே
எங்கணும் வியாபிநீ என்றுசொலு மியல்பென்
றிருக்காதி வேதமெல்லாஞ்
சொல்லான் முழக்கியது மிக்கவுப காரமாச்
சொல்லிறந் தவரும்விண்டு
சொன்னவையு மிவைநல்ல குருவான பேருந்
தொகுத்தநெறி தானுமிவையே
அல்லாம லில்லையென நன்று அறிந்தேன்
அறிந்தபடி நின்றுசுகநான்
ஆகாத வண்ணமே இவ்வண்ணம் ஆயினேன்
அதுவுநின தருளென்னவே
கல்லாத அறிஞனுக் குள்ளே யுணர்த்தினை
கதிக்குவகை யேதுபுகலாய்
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

முன்பொரு காலத்தில் உலகில் பல இடங்களில் அடிமை வியாபாரம் நடந்து வந்தது. இப்பொழுது ஆடு மாடுகளைத் தங்கள் சொத்துக்களாக மக்கள் வைத்திருப்பதுபோன்று மனிதர்களை அடிமைகளாக வைத்திருந்தார்கள். கால்நடைகளை விற்கவும், வாங்கவும் மக்களுக்கு உரிமையுண்டு. வேண்டுமானால் அவைகளைக் கொன்று தின்பதற்கும் அவர்களுக்கு உரிமையுண்டு. அப்படிச் செய்வதற்குத் தடையாக உலகத்தில் எந்த அரசாங்கமும் சட்டம் போட்டு வைக்கவில்லை. அடிமை வியாபாரம் இருந்தபொழுது அவர்களை விற்பது வாங்குவது ஆகிய

பழக்க வழக்கம் இருந்தது. கூட்டில் வளர்க்கும் புலி அல்லது சிங்கத்துக்கு ஓர் அடிமையை இரையாகப் போட்டும் அக்காலத்தவர்கள் வேடிக்கை பார்த்து வந்தார்கள். சட்டம் அதற்குத் தடை செய்யவில்லை. அத்தகைய கொடுரத் தன்மை வாய்ந்த பழக்க வழக்கம் இன்றைக்கு உலகினின்று மறைந்து போய்விட்டது. ஆனால் நாகரீகமான முறைகளில் அடிமைகளாவதும், அடிமைகளாக்குவதும் ஆகிய தொழில்கள் இன்றைக்கு நடந்து வருகின்றன. அத்தகைய சம்பவங்கள் என்றென்றுமே உலகில் இருந்துவரும். சம்ஸ்கிருதத்தில் இரண்டு சொற்கள் இருக்கின்றன. ஸ்வாதீனம், பராதீனம் என்பன அந்த இரண்டு சொற்கள். தன்னுடைய வாழ்க்கையின் மீது தானே ஆதிக்கம் செலுத்துவது ஸ்வாதீனம். தன்னுடைய வாழ்க்கையின் மீது பிறர் ஆதிக்கம் செலுத்துகிற சூழ்நிலையில் அகப்பட்டுக் கொள்ளுதல் பராதீனமாகிறது. ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது ஆட்சி செலுத்துமாகில் அப்படி ஆளப்படுபவர்கள் பராதீனர்கள் ஆய்விடுகிறார்கள். அதாவது பிறர் ஆட்சிக்கு அவர்கள் அடிமைகள் ஆகிவிடுகிறார்கள். அது பாராட்டத்தக்க நிலையன்று. இனி, ஜீவனத்தின்பொருட்டோ ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு ஆட்பட்டு விடுகிறான். கூப்பிட்டபொழுதெல்லாம் அவன் வேலைக்கு வந்தாகவேண்டும். ஓய்வு கொடுத்தாலொழிய அதை எடுத்துக்கொள்ளும் உரிமை அவ்வேலையாளுக்கு இல்லை. எந்த இடத்துக்கு அனுப்பினாலும் அவன் போயாகவேண்டும். அத்தகைய நிலையில் இருக்கும் மனிதன் ஒருவன் அடிமை வாழ்வு வாழ்கிறான். அது பாராட்டுதற்குரியதன்று.

உலகிலுள்ள உயிர்கள் ஸ்வாதீனமாக வாழ்கின்றனவா, அல்லது பராதீனப்பட்டு இருக்கின்றனவா என்பது கேள்வி.

இதைச் சிறிது ஆராய்ந்து பார்க்கவேண்டும். உலகில் வாழும் மக்களெல்லாம் தாங்களாக விரும்பி இந்த உலகுக்குள்ளே வந்திருக்கிறார்களா என்பது கேள்வி. உண்மையில் யாரும் இவ்வுலகுக்கு வரவேண்டுமென்று விரும்பியதாக அவர்களுடைய ஞாபக சக்தி விளக்கிக் காட்டுவதில்லை. சூழ்நிலையினால் தூண்டப்பட்டே உயிர்களெல்லாம் இவ்வுலகுக்குள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே இவ்வுலகுக்குள் வரும் விஷயத்தில் ஸ்வாதீனம் இல்லை. உயிர்கள் அறிந்துகொள்ள முடியாத ஒருவிதப் பராதீனமே இருந்து வருகிறது. ஆக, இவ்வுலகினுள் வரும் விஷயத்தில் எல்லாம் அடிமைகளேயாம். இனி, இவ்வுலகினுள் வாழ்ந்திருப்பதற்கிடையில் உயிர்களெல்லாம் தாம் தாம் விரும்பும் இடங்களில் வாழமுடியுமா? முடியாது. மீன் நிலத்தில் வாழமுடியாது. மனிதன் நீரினுள் வாழமுடியாது. பனிக்கட்டிப் பிரதேசத்திலிருப்பவன் உஷ்ணப் பிரதேசத்தில் வாழமுடியாது. உஷ்ணப் பிரதேசத்திலிருப்பவன் பனிக்கட்டிப் பிரதேசத்தில் வாழமுடியாது. ஆக, எந்த இடத்தில் வாழ்ந்திருப்பது என்னும் விஷயத்தில் ஸ்வாதீனமில்லை. பராதீனமே ஓங்கியிருக்கிறது. உணவு உண்ணும் விஷயத்தை அடுத்தபடியாக எடுத்துக்கொள்ளலாம். புலியின் உணவைப் பசு தின்னமுடியாது. பசுவின் உணவைப் புலி தின்ன முடியாது. மனிதன் உண்ணும் உணவு மாட்டுக்குக் கிடைப்பதில்லை. மாடு தின்னும் உணவு மனிதனுக்கு ஒத்துக்கொள்ளாது. எல்லா உயிர்களும் அவ்வவைகளுக்கென்று வகுத்து வைக்கப்பட்டிருக்கிற உணவையே உண்டு வருகின்றன. ஆதலால் உணவு விஷயத்திலும் ஒருவிதமான பராதீனமே உலகில் தென்படுகிறது. எவ்வுயிரும் சாக விரும்புவதில்லை. ஒருவேளை சாக விரும்பினால் அவ்

விருப்பத்தின்படி சாவு அமைவதில்லை. இனி, வருகிற சாவைத் தடுக்க எவ்வுயிர்க்கும் உரிமையில்லை. ஆதலால் சாகும் விஷயத்தில் எவ்வுயிர்க்கும் ஸ்வாதீனம் இல்லை. வேறு யாரோ இதையெல்லாம் நிர்வகித்து வருகின்றார். இக்கருத்துக்களையெல்லாம் தொகுத்து எல்லாமுன் அடிமையே என்று தாயுமானவர் பகர்கிறார்.

உலகில் வாழ்ந்துவரும் உயிர்களெல்லாம் தத்தம் திறமைக்கு ஏற்ப எதையாவது உடைத்திருக்கின்றன. மனிதன் பொருளை உடைத்திருக்கிறான். பறவைகள் மரங்களில் கூடுகளை உடைத்திருக்கின்றன. விலங்குகள் நிலத்தில் தங்குமிடங்களை உடைத்திருக்கின்றன. இவையாவும் உடைத்திருப்பவர்களிடம் இருந்து நொடிப்பொழுதில் கைநழுவிப் போய்விடக்கூடும். அதுதான் இயற்கையின் அமைப்பு. மனிதன் உடலை உடைத்திருக்கிறான். உண்மையில் அது அவனுடைய உடைமையா? சுவாசிப்பதற்குக் காற்றை இயற்கை அவனுக்கு நல்காவிட்டால் சிறிது நேரத்தில் உடல் அவனுக்குரியதல்லாததாகப் போய்விடும். மண்ணினின்று உண்ணுதற்கு உணவும், இயற்கையினின்று பருகுதற்கு நீரும் கிட்டாதுபோய்விட்டாலும் உடல் மனிதனுக்கு உரியதல்லாதது ஆய்விடும். எதையெல்லாம் மனிதன் உடைத்திருக்கிறானோ அதெல்லாம் ஓயாது நிலைமாறிக் கொண்டிருக்கின்றது. மனிதனே தன் வாழ்வைத் தனக்குச் சொந்தமானதென்று சொல்ல முடியாது. நாடு ஒன்றில் போர் மூண்டுவிட்டால் ஆணையிடப்பட்ட ஆட்களெல்லாம் போருக்குப் போயாகவேண்டும். போக மறுப்பதற்கு முடியாது. தான் தனக்குச் சொந்தமென்பது உண்மையில் நாட்டுக்குச் சொந்தமாகிறது. நாடு என்பது இயற்கைக்குச் சொந்தமாகிறது. இயற்கையோ இறைவனுக்குச்

சொந்தமாகிறது. தனக்குத்தானே சொந்தமாயிருப்பதற்கு 'ஸ்வதா' என்பது சம்ஸ்கிருதச் சொல். பிறர்க்குச் சொந்தமாயிருப்பதற்கு 'பரதா' என்பது சம்ஸ்கிருதச் சொல். ஸ்வதா அல்லது தனக்குத்தானே சொந்தமென்பது எவ்வுயிரிடத்திலுமில்லை. பரதா அல்லது வேறு ஏதோ தோன்றாச் சக்திக்கு இயற்கையிலுள்ளவைகள் எல்லாம் உரிமையாய் விடுகின்றன என்பதுதான் உண்மை. இக்கருத்துக்களையெல்லாம் தொகுத்து அண்ணல் **எல்லாமுன் உடைமையே** என்று இயம்புகிறார்.

மின் சக்தியை முன்பொருகாலத்தில் மனிதன் கையாளத் தெரியாதிருந்தான். இயற்கையில் அது மின்னலாக இருந்தது மட்டும் அவனுக்கும் புலனாயிற்று. நாளடைவில் அதைக் கையாள அவன் கற்றுக்கொண்டான். இன்றைக்குப் பலவிதமான முறைகளில் அது பயன்பட்டு வருகிறது. விளக்காக இருந்து அது வெளிச்சம் தருகிறது. ஓரிடத்துச் செய்தியை மற்றோரிடத்துக்கு அனுப்புவதற்குப் பயன்படுகிறது. ஒலியைப் பெருக்கவும், பரப்பவும் அது செய்யவல்லது. வெப்பத்தை உண்டுபண்ணவும், தணுப்பை உண்டுபண்ணவும் அது வல்லது. பெரிய தொழிற்சாலை யந்திரங்களையும், வண்டி வாகனங்களையும் அது இயக்கவல்லது. மேற்போக்காக ஆராயுமிடத்து மின் விளக்கும், தொலைபேசியும், விசிறியும், தணுப்பை உண்டுபண்ணும் கருவியும், வண்டிகளும், யந்திரங்களும் தாமாகவே செயல்புரிந்து வருவனபோன்று தென்படுகின்றன. உண்மையில் செயல் உரிமை அவைகளுக்கில்லை. வெறும் கருவிகளாக மட்டும் அவைகள் இருக்கின்றன. செயல் உரிமையைச் சுதந்திரம் என்கிறோம். பிறரால் செயல் செய்விக்கப்படுகின்றபொழுது அது பரதந்தரம் ஆகிறது. ஈண்டு இயம்பியுள்ள

கருவிகளுக்கெல்லாம் சுதந்தரமில்லை; யாண்டும் பரதந்தரமே ஓங்கியிருக்கிறது. இச்செயல்களை யெல்லாம் மின்சக்தியின் செயல்கள் என்று சொல்லுவதே முறை. இனி, எண்ணிறந்த உயிர்வகைகளின் செயல்களை ஆராய்ந்து பார்ப்போம். புலியொன்று மானைக் கொன்று தின்ன முயலுகிறது. மானே புலியின் வாயிலிருந்து தப்பித்துக்கொள்ள முயலுகிறது. இச்செயல் வெவ்வேறு படித்தரங்களில், வெவ்வேறு விதங்களில் இயற்கை யெங்கும் நிகழ்ந்து வருகிறது. ஒவ்வொரு உயிரும் தன்னைப் பாதுகாக்க முயலுகிறது. அதன் பொருட்டு ஏனைய உயிர்களைத் தனக்கு உணவாக்க முயலுகிறது. பிற உயிர்க்குத் தான் உணவாகாது பிற உயிர்களைத் தனக்கு உணவாக்குவது அவைகளின் குறிக்கோள் ஆகிறது. எதனுல் தூண்டப்பெற்று அவைகள் இப்படி முயன்று வருகின்றன என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அழிவினின்று தப்பித்து அழிவிலாப் பெருநிலையில் உறுதி பெற்றிருக்க எடுத்துக்கொள்ளும் முயற்சியே வாழ்க்கைப் போராட்டம் என்னும் பெயர் பெறுகிறது. அண்டமெங்கும் இப்போராட்டம் நிகழ்ந்து வருகிறது. அழிவின்மையை எட்டிவிட்டால் இப்போராட்டமும் முற்றுப் பெற்றுவிடும். அழிவின்மையை சாகாவரம் என்கின்றோம். அதற்கு அம்ருதத்வம் என்பது இன்னொரு பெயர். மரணமிலாப் பெருவாழ்வு என்றும் அது பொருள்படுகிறது. பரமாத்மனே சத் சொரூபம். அதாவது என்றைக்கும் அழியாதவராக, கேடு இல்லாதவராக அவர் இருக்கிறார். அந்தப் பரமாத்மனை அடைகின்றவர்களுக்கெல்லாம் சத்சொரூபம் அல்லது கேடில்லாதநிலை வந்து விடுகிறது. அப்பெருநிலையைப் பெறுதற்காகவென்றே ஜீவாத்மாக்கள் எல்லாம் அலைந்து திரிகின்றன. உயிர்களெல்லாம் தங்கள் அறிவை

வளர்க்க யத்தனங்கள் பல எடுத்துக் கொள்கின்றன. தன் அறிவை ஓர்மைப்படுத்த ஓர் எறும்பும் முயலுகிறது; ஒரு யானையும் முயலுகிறது. அறிவை ஓர்மைப்படுத்த சாமான்ய மான ஒரு மனிதனும் முயலுகிறான்; படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவனும் முயலுகிறான். அறிவை வளர்க்கும் முயற்சி யில் மற்ற உயிர்களையெல்லாம்விட மனிதன் உயர்ந்த நிலையி லிருக்கிறான். அறிவைப் பெருக்குதற்கென்று அவன் எடுத் துக்கொண்டுள்ள முயற்சிகள் கலைஞானங்கள் பலவற்றைத் தோற்றத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன. கல்விச்சாலை களை மனிதன் ஏராளமாக அமைப்பதும் அறிவை வளர்த்தற் பொருட்டேயாம். அவன் ஊர்விட்டு ஊர் போவதும் அல்லும் பகலும் ஓயாது கலைத்துறைகளில் முயன்று வருவதும் அறி வைப் பெருக்குதற் பொருட்டேயாம். அறிவைத் தெளிவு படுத்த ஸ்தாவர ஜங்கமங்களாகிய அனைத்தும் எத்தனை எத் தனையோ முறைகளில் முயன்று வருகின்றன. அந்த முயற்சிக ளெல்லாம் தங்களுக்குச் சொந்தமானவைகளென்றும் அவை கள் கருதிவருகின்றன. இனி, உயிர்களனைத்தும் ஆனந்தத் தைத் தேடித்திரிகின்றன. அதை அடைதற் பொருட்டு அவை யாவும் படாதபாடுபடுகின்றன. ஆனந்தத்தின் பொருட்டே திருடன் திருடுகிறான்; கொலையாளி கொலை புரிகிறான்; உழவன் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடு படுகிறான்; யோகி குகையில் உட்கார்ந்துகொண்டு நிஷ்டை புரிகிறான். மக்கள் எடுத்துக்கொள்ளுகிற எண்ணிறந்த முயற்சிகள் இறுதியில் அவர்களுக்கு இன்பத்தைத் தருகின் றன. சில முயற்சிகள் துவக்கத்திலேயே இன்பத்தைத் தருகின்றன. இன்பத்தைக் கொடுக்காத எந்த முயற்சியி லும் மனிதன் ஈடுபடுவதில்லை. அல்லும் பகலும் இன்பத்தை நாடியே அவன் அலைந்து திரிகிறான் என்றால் அது மிகை

யாகாது. இங்ஙனம் உலகெங்கும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் உயிரை ஓம்புதல், அறிவைத் தெளிவுபடுத்துதல், ஆனந்தத்தைப் பெருக்குதல் ஆகிய மூவிதச் செயல்களில் அடக்கிவிடலாம். உயிரை ஓம்புதல் பரமாத்மாவிடத்துள்ள சத் சொரூபத்தை நிலை நாட்டுவதாகிறது. அறிவைத் தீட்டுதல் பரமாத்மாவிடத்துள்ள சித்சொரூபத்தை உறுதிப் படுத்துவதாகிறது. இன்பத்தை வளர்த்தல் பரமாத்மாவிடத்துள்ள ஆனந்தத்தை நிலைநாட்டுவதாகிறது. உயிர்களின் செயல்களெல்லாம் சத் சித் ஆனந்தத்தின் புறத்தோற்றங்கள் என்னும் கோட்பாட்டில் முற்றுப்பெற்றுவிடுகின்றன. மின்சக்தி பலவிதக் கருவிகளின் மூலம் தன்னைத்தானே விளக்குவது போன்று, சச்சிதானந்தப் பொருளாகிய பரமாத்மா எண்ணிறந்த உயிர்களின் செயல்கள் வாயிலாகத் தனது சொரூபத்தையே விளக்கிவருகிறார். சச்சிதானந்தமே அவருடைய சொரூபம். அந்த சொரூபத்தை நிலைத்த உயிர் வாழ்க்கை, அறிவுப் பெருக்கம், இன்பத்தின் விரிவு என்று இயம்பிவிடலாம். இந்த மூன்றுவித நிலைகளையே உயிர்கள் ஓயாது நாடி வருகின்றன. பரமாத்ம சொரூபத்தில் நிலைபெற்றுவிட அவைகள் முயலுவதால் அந்த முயற்சிகளே பரமாத்மாவின் செயல்கள் என்று பொருள்படுத்தலாம். இத்தனைவிதமான உயிர்களின் செயல்களென்பது உண்மையில் பரமாத்மாவின் செயல்களேயாம். அவருடைய சந்நிதானத்துக்குப் புறம்பாக அவைகள் வாழ்ந்திருக்கவோ, அனுபவத்தைப் பெறவோ, இன்பத்தை அடையவோ முடியாது. அவருடைய மூல சக்தியே இத்தனைவித உயிர்களின் இத்தனைவிதமான செயல்களாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வுண்மையை, எல்லாமுன்னுடைய செயலே என்று தாயுமானவர் இயம்புகிறார்.

பொருள்களை ஒன்றோடொன்று சீர்தூக்குதலின்மூலம் அவைகளை நாம் அறிந்துகொள்கிறோம். தெரியாத பொருள் ஒன்றைக் கிட்டத்தட்ட அதுபோன்றிருக்கும் தெரிந்த மற்றொரு பொருளோடு சீர்தூக்கியே நாம் அதை அறிந்து கொள்ள முடியும். கவரிமானை நாம் பார்த்ததில்லை. ஆனால் கலைமானைப் பார்த்திருக்கிறோம். 'கவரிமான் என்பது கலைமான் போன்றிருக்கும். ஆனால் வண்ணத்தில் கலைமானைவிடப் பெரியது. வாலில் பெரிய குச்சம் இருக்கும்' என்று சீர்தூக்கிச் சொன்னால் கண்ணால் பார்த்திராத கவரிமானையும் கிட்டத்தட்டச் சரியாக மனதால் கிரகிக்கலாம். அதேமுறையில் பரம்பொருளை அறிந்துகொள்ள நாம் முயல வேண்டும். அவர் யார், எத்தகையவர், எங்கேயிருக்கிறார் என்பனவெல்லாம் அவரைப்பற்றிய கேள்விகளாகும். இரண்டு உபமானங்களின் மூலம் அவரை அறியலாம். பழம் போன்றவர் அவர். பழத்தின் அமைப்பில் உள்ளிருக்கும் சுளை உண்பதற்கு உரியது. அதைச் சுற்றிலும் மூடியுள்ள தோல் பகுதிகள் இருக்கின்றன. சுளைக்குப் பக்கத்திலிருக்கும் தோல்பகுதி கிட்டத்தட்ட சுளைபோன்றது. எட்ட இருக்கும் தோல்பகுதி கடினமானதாகவும், ஸ்தூலமானதாகவும் அமைகிறது. உண்டு இன்பமடைதலில் பழத்தின் உள்ளிருக்கும் சுளைபோன்றவர் பரமாத்மா. அவர் ஏக காலத்தில் வாழ்வு சொரூபமாகவும் இன்பசொரூபமாகவும் இருக்கிறார். ஆனால் சுவையுள்ள சுளை, பழத்தினும் சிறியதாக அப்பழத்தினுள் அடங்கியதாய்விடுகிறது. பரமாத்மா எதனிடத்தாவது உள்ளடங்கியவரா? இல்லை. அவர் எதிலும் அடங்கியவர் அல்ல. பஞ்சபூதங்கள் அவரிடத்திருந்து தோற்றத்துக்கு வந்தவைகள். அவ் ஐம்பூதங்களுள் முதலில் தோற்றத்துக்கு வந்தது ஆகாசம். அவ் ஆகாசத்தி

னின்று வாயு வந்தது. வாயுவினின்று நெருப்பு; நெருப்பினின்று நீர்; நீரினின்று நிலம். இந்த ஐந்தினுள் பரமாத்மாவுக்குப் பக்கத்திலிருப்பது ஆகாசம். ஆதலால் பரமாத்மாவின் தன்மை மற்ற பூதங்களிலிருப்பதைவிட ஆகாசத்தினிடத்து அதிகமாக இருக்கிறது. ஆகாசம் எத்தகையது என்பதைப் பொறியைக்கொண்டு நாம் புலப்படுத்துகிறோம். அது எங்கும் நிறைந்திருக்கிறது. வெட்டவெளியை வெட்டி நாம் துண்டுபோட முடியாது. ஒரு வீட்டுக்குள்ளே இருக்கும் வெட்டவெளி சுவர்களால் துண்டுபோட்டது போன்றுதென்படலாம். உண்மையில் வெளியைச் சுவர்கள் துண்டுபோடவில்லை. வெளியானது சுவருக்கு உள்ளும் வெளியிலும் எங்கும் வியாபகமாக உள்ளது. அதன் வியாபகத்தை அதனோடு சஞ்சரிக்கும் அண்டங்களும், கோளங்களும் தடைப்படுத்துவது கிடையாது. அந்த வெட்டவெளிபோன்றவர் பரமாத்மா. ஆதலால் அவரை எங்கணும் வியாபி நீ என்று தாயுமானவர் இயம்புகிறார்.

இப்பொழுது உயிர்களெல்லாம் இறைவனுக்கு அடிமையென்பதிலும், அவருடைய உடைமை என்பதிலும் உயிர்களின் செயல்களெல்லாம் இறைவனுடைய செயல் என்பதிலும் பொருள் மிகப் புதைந்திருப்பது புலனாகும். வெட்ட வெளியினின்று காற்று, நீர், நிலம் வந்திருப்பது போன்று அண்டகோடிகளனைத்தும் பரமனிடத்திருந்து வந்திருப்பதால் அவையாவும் அவனுடைமைகள் ஆகின்றன. அலைகளனைத்தும் கடலுக்குரியவைகளாக இருப்பது போன்று, உயிர்களனைத்தும் பேருயிராகிய பரம்பொருளின் தோற்றங்களாதலால் அவையாவும் அவருக்கு அடிமைகளாகின்றன. அப்படி இறைவனுக்கடிமையாயிருப்பதில் சிறுமை ஒன்றுமில்லை. பெருமையனைத்தும் அதை அறிந்துகொள்வத

னின்று வருகிறது. அலைகளின் செயல்களெல்லாம் கடலின் செயல்களாக இருப்பது போன்று அண்டகோடிகளனைத்தின் செயல்கள் பரமாத்மாவின் செயல்களாம்.

பரமாத்மாவைப்பற்றிய இவ்வுண்மைகளை யெல்லாம் முதல் முதல் கண்டறிந்தது யார், யாருக்கு யார் எப்படி எடுத்து இயம்பினர்கள் என்றெல்லாம் நாம் கேட்கலாம். இதற்குத் தாயுமானவர் எங்கணும் வியாபி நீ என்று சொலும் இயல்பு என்று ருக் ஆதி வேத மெல்லாஞ் சொல்லான் முழக்கியது என்று போற்றுகிறார். உலகறிந்த நூல்களிலே மிகப் பழையது ருக் வேதம். அதைத் தொடர்ந்து வந்துள்ள நூல்கள் எண்ணிறந்தவை. பரம்பொருளுக்கு விளக்கம்தர முயன்ற அவையாவும் இப்படித்தான் அவருக்கு முடிவான விளக்கம் கொடுத்திருக்கின்றன. அது விஷயத்தில் மேலான நூல்களுக்கிடையில் கருத்து வேற்றுமை கிடையாது. அண்மையில் தோன்றிய நிறைஞானியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் ஒரு உபமானத்தின் மூலம் இக்கருத்தை வெளியிடுகிறார். நரிகள் வெவ்வேறு நாடுகளிலிருப்பினும் அவைகள் ஒரேபாங்கில் ஊளையிடுகின்றன. மெய்ஞானிகள் வெவ்வேறு மொழிகளில் பேசுகிறார்களெனினும் பரம்பொருளுக்கு அவர்கள் கொடுக்கின்ற விளக்கம் ஒன்றேயாம். பெரியோரின் அனுபவத்தைப் பிரமாணமாக வைத்துக்கொண்டு அமைந்தவைகளே சாஸ்திரங்களாகின்றன. ருக்வேதம் முதல் எல்லா சாஸ்திரங்களும் பரம்பொருளைப்பற்றி ஒரேபோக்கில் பகர்ந்துள்ளன.

இனி, பரம்பொருளைச் சுவானுபூதியில் அறிந்துகொண்டவர்களெல்லாரும் பேச்சாளர்களாக இருந்ததில்லை. பேச்சு ஒடுங்கிய மௌனிகளாகப் பலபேர் இருந்திருக்கின்றனர். அத்தகையவர்களை, சொல்லிறந்தவர்கள் எனத் தாயுமான

வர் அழைக்கிறார். பேசுதல் என்னும் செயல் அவர்களிடத்து அறவே அற்றுப்போய்விட்டது. சாதனத்தால் அத்தகைய மௌனநிலையில் அவர்கள் நிலைபெற்றவர்கள் ஆகிவிடுகிறார்கள். அன்னவர்கள் பேசாதிருப்பது உலகுக்கு நஷ்டந்தானே என்று நாம் எண்ணலாம். ஆனால் அதில் நஷ்டம் ஒன்றுமில்லை. ஒருவிதத்தில் மௌனத்திலிருக்கும் ஞானிகளுக்கும் அது லாபம்; உலகத்தவர்களுக்கும் அதில் லாபமுண்டு. அவர்கள் வீண்பேச்சுப் பேசாமையினால் வியவகாரங்கள் குறைந்துவிடுகின்றன. அவர்கள் பெற்றுள்ள சீரிய மனநிலையினால் உலகுக்குப் பேச்சு இல்லாமலேயே நலன் கிட்டிவிடுகிறது. அது எப்படி என்று ஒரு உபமானத்தைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம். பல தடவைகளில் தீங்கு அறியாத சிறு குழந்தைகள் நாகசர்ப்பத்தோடு விளையாடிய காட்சிகளைப் பலர் பார்த்திருக்கின்றனர். படமெடுத்து குழந்தையின் எதிரே நாகசர்ப்பம் மகிழ்வுற்றிருக்கிறது. குழந்தை அதைப் பிடிக்கக் கை நீட்டினால் பிடிக்கெட்டாது பின்வாங்குகிறது. குழந்தையின் மனதிலுள்ள குற்றமற்ற நிலை பாம்புக்கு விளங்கிவிடுகிறது. அதேவிதத்தில் தூய மனமுடையவர்கள் வாய்விட்டு ஒன்றும் பேசாவிட்டாலும் அவர்களுடைய தெளிந்த நிலை மற்றவர்களது உள்ளத்தில் அமைதியையும், நல்லறிவையும் ஊட்டுகிறது. அதுவே நிறைஞானியர்களிடமிருந்து உலகத்தவர் பெறுகிற ஒப்பற்ற பேறு ஆகும். அத்தகைய ஞானிகள் பரம்பொருளை இரண்டொரு சொல்லால் வாய்விட்டுப் பேசி விடுவதுமுண்டு. தாயுமானவரை ஆட்கொண்டவரே அங்ஙனம் செய்திருக்கிறார். அக்கருத்தை, மிக்க உபகாரம் சொல் இறந்தவரும் விண்டு சொன்னவையும் இவை என்று தாயுமானவர் இயம்புகிறார். பேசாதிருப்பதே அவர்கள்

உலகுக்குச் செய்கிற பெரிய உபகாரம் என்று தாயுமானவர் கருதுகிருர். விண்டு என்னும் பதம் விளங்கும்படி விவரித்தல் எனப் பொருள்படுகிறது. கடவுளைப்பற்றி மௌனிகள் கொடுத்திருக்கிற விளக்கங்களும் வேதசாஸ்திர விளக்கங்களோடு ஒத்திருக்கின்றன என்பது இதன் கருத்து.

ஞானியர்களுக்கிடையில் பேச்சைக் கையாண்டவர்களும், நூல் இயற்றுவதைக் கையாண்டவர்களும் பலர் இருந்திருக்கின்றனர். அவர்கள் பேசிய பேச்செல்லாம் பரம்பொருளின் பெருமையை விளக்குதற்பொருட்டேயாம். அன்னவர்கள் இயற்றிய நூல்களெல்லாம் பரம்பொருளின் பெருமையை விளக்குதற்கென்றே அமைந்தன. அவர்கள் காட்டித் தந்துள்ள சாதனங்களெல்லாம் பரம்பொருளைச் சுவானுபூதியில் அறிந்து கொள்ளுதற்குப் பயன்பட்டன. இக்கருத்துக்களை, நல்ல குருவான பேரும் தொகுத்த நெறி தானும் இவையே என்று அண்ணல் இயம்புகிருர்.

அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரங்களில் பரம்பொருளைப் பற்றிய உண்மைகளெல்லாம் இருக்கின்றன. சான்ருேர்களுடைய சுவானுபூதியும் அதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. பரத்தை அறிந்துகொள்ளுதற்கு அதற்குமேல் வேறு உபாயம் ஒன்றுமில்லை என்பதை உறுதியுடன் இயம்புதற்கு, அல்லாமல் இல்லையென நன்ருயறிந்தேன் என்கிருர் அவர்.

சாஸ்திரப் பிரமாணத்தைக்கொண்டும், சான்ருேர்களுடைய உறுதிமொழியைக் கொண்டும் கடவுள் தத்துவத்தை ஓரளவு தெளிவுபட அறிந்து கொள்ளலாம். ஆனுல் அப்படி அறிந்து கொள்ளுவது உண்மையில் சுவானுபூதியாகாது. ஒரு சான்றின் மூலம் அதை ஈண்டு விளக்குவோம்.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

என்பது சாஸ்திரப் பிரமாணம். யுக்திபூர்வமாக நினைத்துப் பார்க்குமிடத்து அதுதான் உண்மை என்பதும் நமது அறிவுக்கு எட்டிவிடும். ஆனால் உலக விஷயங்களினின்று நீங்கியிருப்பது ஒன்றுதான் நமக்குச் சாத்தியமாகாது. உலக விஷயங்களில் நீங்கியிருப்பதற்குப் பதிலாகத் தோய்ந்திருப்பது நமது போக்கு ஆகும். நாம் முற்றிலும் பரிபாகமடையாதிருப்பதே அதற்குக் காரணமாகும். தம்மிடத்தில் அத்தகைய குறைபாடு இருக்கிறதென்பதை,அறிந்தபடி நின்று சுக நான் ஆகாத வண்ணமே இவ்வண்ணமாயினேன் என்று தம்மைப்பற்றித் தெய்வத்திடம் தாயுமானவர் முறையிடுகின்றார். ஆத்மசாதகர்களில் பலபேரிடத்து அத்தகைய குறைபாடு நெடுநாளைக்கு மனதினுள் குடிகொண்டுவிடுகிறது.அதைப் போக்குதற்கு மனதோடு போராடவேண்டும்.

குறைபாடுடைய மனதோடு போராடிக்கொண்டிருப்பதற்கிடையில் பரம்பொருளிடத்துப் பரிந்து விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். 'இறைவா, எனக்குத் தனிவியக்தி இருக்கிறதென்று நான் எண்ணிக்கொண்டிருப்பதற்கிடையில் உண்மையில் நான் உன் அடிமையே. செயலிலே எனக்கு இச்சா சுதந்திரம் இருக்கிறதென்று இறுமாப்புக் கொண்டிருப்பதற்கிடையில் செயல்களெல்லாம் உண்மையில் உனக்கு உரியவைகளென்பதை நான் அறிந்தாகவேண்டும். நான் அகங்காரமற்றிருக்கின்ற வேளைகளில் அத்தகைய விவேகத்தை இறைவா நீ என்னிடம் புகுத்திவிடுகின்றனை' என்னும் கருத்தை அதுவும் நினதருளென்னவே, கல்லாத அறிஞனுக்குள்ளே உணர்த்தினை என்று அண்ணல் இறைவனிடம் பகர்கின்றார்.

விரைவில் சூரியோதயம் வரப்போகிறதென்பதற்கு முன் அறிகுறிகள் சில இருக்கின்றன. கிழக்குத் திசையில் முதலில் வெளுத்து வருகிறது. பிறகு செவ்வானம் கூறுகிறது. அதன் பிறகு கதிரவன் காட்சிக்கு வருகிறான். அதேவிதத்தில் சாதகனுடைய உள்ளத்திலே நல்ல விவேகமும், தூய பக்தியும், தீவிரமான அருள் தாகமும் உண்டாகிவிட்டால் அவைகளைத் தொடர்ந்து நிறை ஞானமும் இனி வரப்போகிறது என்று யூகிக்கலாம். நிறைஞானத்தைப் பெறுதற்குச் சற்று முந்திய நிலையில் இருந்துகொண்டு, கதிக்கு வகையேது புகலாய் என்று தாயுமானவர் பரம்பொருளிடத்து விண்ணப்பிக்கிறார். இக்கருத்துக்கள் அனைத்தும் இப்பாடலில் அடங்கியிருக்கின்றன.

கருணாகரக் கடவுள் - 4

பட்டப் பகற்பொழுதை இருளென்ற மருளர்தம்
பட்சமோ எனதுபட்சம்
பார்த்தவிட மெங்கணுங் கோத்தநிலை குலையாது
பரமவெளி யாகவொருசொல்
திட்டமுடன் மௌனியா யருள்செய் திருக்கவுஞ்
சேராமல் ஆராகநான்
சிறுவீடு கட்டியதின் அடுசோற்றை யுண்டுண்டு
தேக்குசிறி யார்கள்போல
நட்டணைய தாக்கற்ற கல்வியும் விவேகமும்
நன்னிலய மாகவுன்னி
நானென்று நீயென் றிரண்டில்லை யென்னவே
நடுவே முளைத்தமனதைக்
கட்டஅறி யாமலே வாடினே னெப்போது
கருணைக் குரித்தாவனோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

சூரிய வெளிச்சம் நிறைந்திருக்கும் நேரம் பகல். சூரியன் காட்சிக்கெட்டாது பூமியின் மறுபக்கம் மறைந்திருக்கும் நேரம் இரவு. பொருள்களையெல்லாம் உள்ளபடி பார்ப்பதற்குப் பொருத்தமானது பகல் வேளை. ஆனால் பகலில் பார்வை மங்கிவிடும் பிராணிகள் உண்டு. புலி, சிங்கம், பூனை போன்ற ஜந்துக்களுக்கு இரவில் கண் நன்றாகத் தெரியும். பகலில் கண்பார்வை மங்கிவிடுகிறது. அவ்வுயிர்களுக்கு கண்ணமைப்பு அத்தகையது. இனி, குருடர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பகலுக்கும் இரவுக்கும்

இடையில் வித்தியாசமில்லை. ஒரே காரிருளாக பகல் நேரம் அன்னவர்களுக்கு இருக்கிறது. பின்பு பகலில் படலம் படல மாக மேகம் சூழ்ந்திருப்பதுண்டு. அப்பொழுது வெளிச்சம் அதிகம் தென்படுவதில்லை. ஆனால் தெளிந்த வானத்தில் கதிரவன் ஒளிர்ந்துகொண்டிருக்கும்பொழுது அது கடும் பகல் ஆகிறது. அத்தகைய நேரத்தைப் பட்டப் பகல் என் கிறோம். சூரியனை மேகம் மறைத்துவிடுவது போன்று மக்க ளுடைய அறிவை மயக்கம் என்னும் நிலை மறைத்துவிடு கிறது. அப்படி மயங்கியிருப்பவர்களை மருளர் என்று அழைக்கிறோம். அருள் நிலைக்கு நேர் எதிர்மறையாயிருப் பது மருள்நிலை. அருளுக்குப் பாத்திரமாகிறவனுக்கு அறிவு தெளிவு அடைகிறது. மருளில் மயங்கி இருப்பவனுக்கு அறிவு மங்கிவிடுகிறது. மக்களில் சிலர் ஆவேசம் பெறுவ துண்டு. ஏதோ ஓர் தெய்வத்தின் வசப்பட்டவர்கள்போன்று அவர்கள் தென்படுகின்றனர். அவ்வேளையில் அவர்கள் குறி சொல்லுவதுண்டு. அத்தகைய ஆவேசநிலை வரும்பொழுது மருள் வந்துவிட்டதென்று மொழிவதுண்டு. அம்மனநிலையை அருள் என்று சொல்லுதற்குப் பதிலாக மருள் என்று சொல் லுவதுதான் பொருந்தும். ஏனென்றால் அத்தகைய ஆவேச நிலை தெளிந்த அறிவோடு தொடர்புடையதன்று. அது திரிவுபட்ட மனநிலை ஆகிறது. சிறிது நேரத்துக்குப் பிறகு அந்நிலையினின்று அன்னவர் தெளிவடைகின்றனர். இனி எப்பொழுதுமே திரிவுபட்ட மனப்பான்மையில் ஊறிக்கிடப் பவர் உண்டு. எதை எடுத்தாலும் திரிவுடன் பொருள்படுத் துவதே அவர்களுடைய போக்கு ஆகும். மகாபாரதத்தில் அமைந்துள்ள பாத்திரங்களுள் சகுனியை அக்கூட்டத்தில் சேர்க்கலாம். நல்லதையும் கெட்டதாகவே பொருள்படுத் தும் இயல்பில் ஊறியவன் சகுனி. மருளர்களுக்கிடையில்

சகுனி போன்றவன் தலையாயவன் ஆகிருன். ஞானியர்க ளோடு சீர்தூக்குகிறபொழுது அக்ஞானத்திலிருப்பவர்க ளெல்லாம் மருளர்கள் ஆகின்றனர். ஏனென்ருல் தெய்வம் ஒருவர்தாம் யாண்டும் உள்ள மெய்ப்பொருள். அம்மெய்ப் பொருளை உள்ளபடி காணுது பிரபஞ்சமாகப் பொருள்படுத் துவது மருள். அந்த நிலை வேண்டாமென்று மெய்ஞான நாட்டமுடையவர் அதைப் புறக்கணிக்கின்றனர். கடவுள் என்னும் மெய்க்காட்சியை நாடாது பிரபஞ்சம் என்னும் பொய்க் காட்சியிலேயே திருப்தியடைந்திருப்பவர்களைக் குறித்து, பட்டப் பகற்பொழுதை இருளென்ற மருளர்தம் பட்சமோ எனது பட்சம் என்று தாயுமானவர் கூறுகிருர். பட்சம் என்னும் சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. பறவைக்கு இரண்டு சிறகுகளுண்டு. ஒவ்வொன்றும் ஒரு பட்சமாகிறது. சந்திரனுக்கு வளர்ச்சி, தேய்வு ஆகிய இரண்டு பகுதிகளுண்டு. அவைகளை சுக்லபட்சம், கிருஷ்ண பட்சம் என்கிருேம். போராட்டத்தில் ஒவ்வொரு கட்சியும் ஒரு பட்சமாகிறது. விவாதிப்பதில் இரண்டு கொள்கை களுக்கு இரண்டு பட்சங்கள் என்று பெயர். மருள்நிலையி லிருந்து வாதாடும் கொள்கைக்குப் பூர்வபட்சம் என்று பெயர். முற்றிலும் விசாரித்து மெய்ம்மையை நிலைநாட்டு மிடத்து அது உத்தர பட்சமாகிறது. கடவுள் ஒருவரே கணக்கற்ற விதங்களில் காட்சி கொடுத்துக் கொண்டிருக் கிருர் என்பது உத்தரபட்சம். அவருக்குப் புறம்பாக இப் பிரபஞ்சத்தையே முடிவான நிலையென்று முடிவு கட்டுவது மருளர்களுடைய பட்சம். அதைப் பூர்வபட்சம் என்று மெய் ஞானிகள் ஒதுக்கி வைத்துவிடுகின்றனர். தாம் மெய்ஞானி யர்கள் கூட்டத்தைச் சேரவில்லையே என்று தாயுமானவர் வருந்துகிருர்.

இப்பிரபஞ்சத்தை அல்லது இயற்கையை ஞானநெறியில் செல்லுகிறவர்கள் பொருள்படுத்துவது ஒரு விதம்; மற்றவர்கள் பொருள்படுத்துவது இன்னொரு விதம். இவ்வுலகை எப்படி நாம் பொருள்படுத்தவேண்டும் என்றும், எப்படிப் பொருள்படுத்தலாகாது என்றும் பாகுபடுத்துவது அவசியமாகிறது. இது கோத்தநிலை குலையாதது. ஒழுங்குப்பாடு தவறாதது என்பது அதன் பொருள். முத்துக்களைக் கயிற்றிலே கோர்க்கிறோம். அந்தச் சரம் ஒழுங்காக அமைந்திருக்கிறது. இயற்கையிலே எங்குத் திரும்பி எப்பொருளை ஆராய்ந்து பார்த்தாலும் அது கோத்தநிலை குலையாது இருக்கிறது. அதனிடத்து தெய்விகம் திகழ்வதற்கு அதனுடைய கோத்தநிலையே நல்ல எடுத்துக்காட்டு ஆகும். பழம் ஒன்று இருக்கிறது. அதில் மேல்தோல், உள்ளிருக்கும் சதைப்பற்று, அதனுள்ளிருக்கும் வித்து ஆகியவைகள் அமைந்திருக்கவேண்டிய முறைப்படி அமைந்திருக்கின்றன. அதில் ஒழுங்குப்பாடு இருக்கிறது. பழத்தின்கண் உள்ள கோத்தநிலை அது. மானுட அமைப்பில் உறுப்புகள் பல இருக்கின்றன. உடலின் உள்ளே ஆனாலும் சரி, வெளிப் பகுதியில் ஆனாலும் சரி ஒவ்வொரு அவயவமும் அமைய வேண்டிய முறையில் அமைந்திருக்கிறது. ஒவ்வோர் உறுப்பும் ஆற்றவேண்டிய அலுவலையும் ஒழுங்காகச் செய்கிறது. அதில் தடுமாற்றம் வந்துவிட்டால் அது நோய்வாய்ப்பட்ட நிலையாய்விடும். ஒழுங்குப்பாடு திகழுங்கால் அது மானுட உடலின்கண் உள்ள கோத்தநிலை. சூரியமண்டலத்தை ஆராய்ந்துபார்த்தால் சூரியனும் அதைச் சார்ந்துள்ள கிரகங்களும் முற்றிலும் பொருத்தமாக வானவெளியிலே இடம் பெற்றிருக்கின்றன. ஒழுங்காகவே ஒவ்வொரு கிரகமும் தன் செயலை ஆற்றி வருகிறது. அது சூரிய மண்டலத்திலுள்ள கோத்தநிலை. இனி, கடல் ஒன்றில் அலை உண்டு; திரை

உண்டு. கடலுக்குள்ளேயே ஓடைபோன்ற நீரோட்டம் உண்டு. மலைபோன்ற உறைபனிப்பகுதி உண்டு. இவை யாவையும் தொகுத்தே கடலின் நீர்ப்பரப்பு என்கிறோம். கடலுக்கு அந்நியமாக அதன் எந்தப்பகுதியையும் நாம் கருத லாகாது. இதே கோட்பாட்டை மெய்ப்பொருள் அல்லது கடவுள் ஆராய்ச்சியில் நாம் பயன்படுத்த வேண்டும். உல கனைத்தும் ஆயிருப்பவர் அவர் ஒருவரே. அண்டகோடிக ளாகத் திகழ்பவரும் அவர் ஒருவரே. பண்பாட்டிலே பலதரப் பட்ட எண்ணிறந்த ஜீவகோடிகளாகத் திகழ்பவரும் அவரே. அவருக்குப் புறம்பாக ஒன்றுமில்லை. இத்தனை வடிவங்களில் இலங்குபவரும் இவையாவையும் கடந்திருப்பவரும் கடவுள். யாவையும் அவர் சொரூபமாகக் கருதுவது கோத்தநிலை. வடிவங்களில் இருப்பவரும் அவரே. அவைகளுக்கப்பால் இருப்பவரும் அவரே. இச்சீரிய உண்மையைப் பார்த்தவிட மெங்கணும் கோத்தநிலை குலையாது பரமவெளியாக என்று அண்ணல் இயம்புகிறார்.

பழம் என்று நாம் சொல்லும்பொழுது அதில் அடங்கி யிருக்கும் எல்லாப் பகுதிகளையும் தொகுத்தே பொருள் படுத்துகிறோம். கடவுள் காட்சி என்று சொல்லுமிடத்து அவர் எப்படியெல்லாம் காட்சி கொடுத்துக்கொண்டிருக் கிறார் என்பதை உணர்ந்து அவை யாவையும் அவர் சொரூப மாகப் பொருள்படுத்திப் பழகுவது நல்ல ஆத்மசாதனம். எனவே ஆத்ம சாதகன் செய்யக்கிடக்கும் கடமை ஒன்று தான் உள்ளது. அவன் கடவுளைத் தேடி அலைந்து திரிவ தில் பொருள் இல்லை. எதெல்லாம் அவனுக்குப் புலனாகிக் கொண்டிருக்கிறதோ அதெல்லாம் உண்மையில் பரம்பொரு ளின் வெவ்வேறு தோற்றங்கள். கடையில் விற்பனைக்குக் கணக்கற்ற நகைகளை வைத்திருக்கிறார்கள். அவை யாவும்

தங்கத்தின் வெவ்வேறு தோற்றங்களாம். அதேவிதத்தில் அணுமுதல் அண்டகோடிகள் ஈறாக சராசரங்கள் அனைத்தும், சேதன, அசேதனப் பொருள்கள் அனைத்தும் ஒரே பொருளின் எண்ணிறந்த தோற்றங்கள். 'நாமரூபம் என்னும் வேற்றுமையைப் பார்த்து மனக்குழப்பமடைந்து விடாதே. வேற்றுமைகளுக்கிடையில் திகழ்ந்துகொண்டிருப்பது ஒரே பொருள். வேற்றுமைகளுக்கிடையில் அந்த ஒற்றுமையையே யாண்டும் காணப்பழகிவா' என்று மெய்ஞான குருவாகிய மௌனியானவர் தாயுமான சுவாமிகளுக்கு ஞானோபதேசம் செய்திருந்தார். அப்படி அவர் செய்த உபதேசத்தை, ஒருசொல் திட்டமுடன் மௌனியாய் அருள் செய்திருக்கவும் என்கிறார் சிஷ்யர். ஜாலவித்தைக்காரன் ஒருவன் எண்ணிறந்த பண்டங்களை ஒரே கூடையினின்று வெளியிலெடுத்துக் கொட்டிக்கொண்டிருந்தான். பார்த்தவர்களெல்லோரும் திகைத்துப் போய்விட்டனர். செயற்கரிய செயல்களை அந்த மாந்திரிகன் செய்துவந்தானென்று பார்த்தவர்கள் பிரமித்து நின்றனர். ஆனால் அக்கூட்டத்தினுள் ஒரு மனிதன் மட்டும் அந்த மருள்நிலை எய்தவில்லை. அவன் பல பண்டங்களை எடுக்கவில்லை. திரும்பத் திரும்ப ஒரே புல்லைத்தான் எடுக்கிறான். வெவ்வேறு பெயரிட்டு அதை அழைக்கிறான். பெயர்களுக்கேற்ற பல பொருள்களாக மயக்கத்தால் ஊரார் காட்சி கண்டு வருகின்றனர். புல்லைப் பார்ப்பவன் மட்டும் மெய்க்காட்சி காண்பவன் ஆகிறான். 'பண்டங்கள் பல இல்லை; புல் ஒன்றுதான் இருக்கிறது' என்று ஒருவன் பகர்ந்தவுடனே ஜாலவித்தை மாயமாக மறைந்து போய்விட்டது. அந்த ஜாலவித்தைக்கு நிகரானது இப்பிரபஞ்சத்தின் தோற்றம். ஈண்டு ஜாலவித்தைக்காரனும் கடவுள். அதை வேடிக்கை பார்த்து மயங்குகின்றவர்களும் கடவுள். அவன் காட்டுகிற கணக்கற்ற

வேடிக்கைகளும் கடவுள். இதை உள்ளபடி அறிந்து கொள்ளுகிறவன் மெய்ஞ்ஞானி. உள்ளபடி அறிந்துகொண்டவனே பொய்த் தோற்றத்தில் மயங்கிவிட வேண்டாமென்று திட்டமுடன் அருள் செய்யமுடியும். அதை மௌனகுரு தாயுமானவருக்குச் செய்தருளினுர். திட்டமுடன் அருள் செய்தல் என்பதன் பொருள் திருத்தமாக உண்மையை உள்ளபடி விளக்கிக் காட்டுதலாம்.

ஒரு மனிதனுக்குச் சுவானுபூதி உண்டாவதற்கு முன்பு அனுபூதிமான்களுடைய போதனையை ஆப்த வாக்கியமாக எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு அந்தப் போதனைக்கு ஒப்ப தனது வாழ்க்கையைத் திருத்தியமைக்கவேண்டும். அப்படிச் செய்வது நல்ல ஆத்ம சாதனம் ஆகிறது. ஈண்டு மௌனகுரு 'அனைத்தையும் கடவுள் சொரூபமாகக் கண்டு பழகு' என்று போதித்துள்ளார். அக்கோட்பாட்டை சாதனத்துக்குக் கொண்டுவர ஆத்மசாதகர்கள் அனைவரும் முயலலாம். அவரவர் கொள்கைக்கும் மனபரிபாகத்துக்கும் ஒப்ப அக்கோட்பாட்டைப் பொருள்படுத்துதற்கும் அது இடம் தருகிறது. கட்புலனுகிற அனைத்தும் கடவுளின் வெவ்வேறு தோற்றங்களென்றுல் அக் கடவுளைத் தன் தோழனென்ருே, தன்னை ஆதரித்துவருகிற ஆண்டவன் என்ருே, தன்னுல் போற்றப்படும் பெரியபொருள் என்ருே, தனது நிஜசொரூபமென்ருே எப்படிவேண்டுமானுலும் பொருள் படுத்தலாம். அத்தனைவித இணக்கங்கள் ஒற்றுமையை வளர்க்கின்றன. கடவுள் ஒருவரையே யாண்டும் காண்கிற மனப்பான்மையை அந்தச் சாதனைகள் உறுதிப்படுத்துகின்றன. பரிபாகத்தில் மிகக் கீழ்நிலையிலிருக்கின்ற சாதகனும் தன்னைத் தெய்வத்துக்கு உரியவனுகச் செய்து கொள்கிற பொழுது மேன்மைகளனைத்தும் அவனுக்கு வந்தமைகின்

றன. இதற்கு நல்ல எடுத்துக்காட்டு இராமாயணம் என்னும் இதிகாசத்தில் காண்கிறோம். படகு செலுத்தி வாழ்ந்து வந்தவர்களுக்குத் தலைவனாயிருந்தவன் குகன். அவன் ஸ்ரீராமனுக்கே உரியதாகத் தனது அனைத்தையும் ஒப்படைத்தான். அதன் விளைவாக ஸ்ரீராமன் என்னும் பரமாத்மன் அவனுக்குரியவர் ஆய்விட்டார். ஜடாயு என்னும் கழுகு ஸ்ரீராமனுக்கே உரியதாகத் தன்னைச் செய்து கொண்டது. அதன் மூலம் அது மேன்மையுற்றது. சுக்ரீவன் என்னும் குரங்கு இனத்தவன் ஸ்ரீராமருக்குத் தன்னை உரியவன் ஆக்கினான். அதனால் அவனுக்குச் சீரும் சிறப்பும் உண்டாயின. சபரி என்னும் அபலை தன்னை இராமனுக்குச் சொந்தமாக்கிய தன் மூலம் மேன்மையுற்றாள். அரக்கர் கூட்டத்தைச் சேர்ந்த விபீஷணன் ஸ்ரீராமனோடு தொடர்பு கொண்டு பெருவாழ்வுக்குரியவனானான். ஸ்ரீ ராமனுக்கு வேற்றாராகத் தங்களைக் கருதிக்கொண்டவர்களெல்லோரும் துன்பத்துக்கும், அழிவுக்கும் வழிதேடிக்கொண்டனர். கடவுளோடு தொடர்வு வைத்துப் பழகுதலே வாழ்க்கையின் சீரிய குறிக்கோள். நமது உடலிலுள்ள ஒவ்வோர் உறுப்பும் உடலுக்கு உரியதாக அமைந்திருப்பதாலேயே மேன்மையுறுகிறது. உடல் வாழ்க்கைக்கு மாறுபட்டு வினையாற்றும் பொழுதெல்லாம் அந்த உறுப்பு தனக்குக் கேட்டை உண்டு பண்ணிக்கொள்கிறது. நமது நித்திய வாழ்க்கையில் பரம் பொருளுக்கு உரியவர்களாக நம்மை நாம் செய்து கொள்ள வேண்டும். பரம்பொருளை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும். இச்சீரிய கோட்பாட்டைப் பழக்கத்தில் கொண்டு வருகிற பொழுது பிரபஞ்சத்தில் நமக்கு வேற்றார் யாருமில்லை. எல்லோரும் நமக்கு உற்றார். அனைவருக்கும் நாம் உற்றார் ஆகவேண்டும். செய்யும் ஆத்மசாதனங்களுள் இது மிக உயர்ந்தது. இதை ஆழ்ந்து அனுஷ்டிக்குமளவு நம்மி

டத்துள்ள ஜீவபோதத்தை நாம் ஒழிக்கிறோம். அது ஒடுங்கிப் போகுமிடத்து பரபோதம் ஒன்றே எஞ்சியிருக்கிறது. ஆனால் தன்னைப் பரபோதத்தில் ஒடுக்கிவிடும் வாய்ப்பு எல்லோர்க்கும் அமைவதில்லை. ஜீவபோதத்தை நிலை நாட்டும் கீழான இயல்பே தலையெடுத்து நிற்கிறது. அப்படி அது குறுக்கே நின்று இடைஞ்சல் செய்வதை பரம்பொருளோடு சேராமல் ஆர் ஆக நான் என்னும் சொல்லடுக்கிலே தாயுமானவர் விளக்குகிறார். அதாவது பூரணத்தில் ஒரு பகுதியாக என்னை அமைத்துக்கொள்ளாமல் அதற்குப் புறம்பாக வேறு யாராகவோ என்னை நான் வைத்துக் கொள்கிறேன் என்று முறையிடுகிறார்.

தனது எண்ணத்தாலும் செயலாலும் ஜீவன் ஒருவன் தனது ஜீவ வியக்தியை நெடிது காத்து வைத்திருக்கிறான். தானாகவும், தனக்கு உள்ளும், புறத்திலும் நீக்கமற பரம்பொருளே இருக்கிறார். ஆனால் அது ஜீவனுக்கு விளங்குவதில்லை. தன்னை ஒரு தனி வியக்தியாகவே அவன் கற்பித்துக்கொள்கிறான். அப்படி அவன் செய்கின்ற செயலை சிறு வீடு கட்டி என்று அண்ணல் இயம்புகிறார். அகண்ட வஸ்துவில் இரண்டற இருக்கவேண்டிய ஜீவன் தனக்கு ஒரு தனி அந்தஸ்தை அமைத்துக்கொள்ளும்பொழுது அதைச் சிறு வீடு என்று செப்புவதே பொருந்தும். கடலிலே அலை உருவெடுக்கிறது. பரமாத்மன் என்னும் கடலில் ஜீவாத்மன் உரு எடுப்பதை அந்த அலையோடு ஒப்பிடலாம். உருவெடுத்த அலை கடலின்மீதே உருண்டோடுகிறது. அப்படி ஓடும் பொழுது அது வண்ணத்தில் பெரியதாக மாறியமைகிறது. மற்றோர் அலையின் மீதோ அல்லது கரையிலோ மோதும்பொழுது தன் வடிவத்தை அது இழந்துவிடுகிறது. ஜீவன் ஒருவன் முக்தியடையும்பொழுது அவனுக்கு ஜீவ

வியக்தி போய்விடுகிறது. அதுவரையில் தன்னை ஒரு தனித்த ஆத்மாவாக அவன் கருதி வருகிறான். கல் நிலையில் துவக்கி மானுடன் ஆகி பரஞானத்தைப் பெறும் வரையில் அவன் உருமாறி அமைந்துகொண்டே வருகிறான். அத்தனை விதப் பிறவிகளைத் தான் எடுத்ததாகவும் அவன் எண்ணி வருகிறான். அதற்கெல்லாம் ஏற்ற வலிவு அவனுக்கு உள்ளிருந்தே வந்துகொண்டிருக்கிறது. அதைத்தான் வினைப்பயன் என்கிறோம். வினைப்பயனின் வேகம் இருக்கும் வரையில் ஜீவபோதமும் தொடர்ந்து இருந்துவருகிறது. ஜீவனிடத்துள்ள வினையின் வேகத்துக்கு எடுத்துக்காட்டாயிருப்பது உடல்மீது அவன் கொண்டுள்ள அபிமானமேயாம். அபிமானத்தால் அவன் உடலை வளர்க்கிறான். அதை வளர்த்தற் பொருட்டு அவன் உணவு உண்கிறான். உணவு உண்ணும் செயல் கல்நிலையில் துவங்கி ஜீவ வியக்தியைக் கலைக்கும் வரையில் தொடர்ந்தே நிகழ்ந்து வருகிறது. தனக்குப் புறம்பாயுள்ளதைத் தன்மயமாக மாற்றுவதால் கல் மலையாக வளர்கிறது. நிலத்தில் தனக்குப் புறம்பாயிருக்கும் எருவை புல் ஏற்பதால் அது வளர்கிறது. சிற்றுயிர்கள், பேருயிர்களாகிய அனைத்தும் தத்தம் இயல்புக்கேற்ப விதவிதமான முறைகளிலே உணவுண்டு தங்கள் ஜீவபோதத்தை வளர்த்து வருகின்றன. எனவே உணவு உண்ணும் செயல் ஜீவபோதத்துக்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. தேவர்கள் தம்போக்கில் உணவு ஏற்கின்றனர். மக்களாகிய நாம் நம் அறிவுக்கு எட்டுகிற அளவிலே மனிதன் ஒருவனை ஜீவாத்மனுக்கு நல்ல எடுத்துக் காட்டு ஆக்குகிறோம். அவன் உணவு உண்ணும் முறையை அதில் அடு சோற்றை உண்டு உண்டு என்று தாயுமானவர் இயம்புகின்றார். பல கோடிப் பிறவிகளில் உணவு உண்ணும் செயல் நடந்து கொண்டே வந்திருக்கிறது. மானுடன் ஆன பிறகு உண

வைச் சமைத்து உண்ணுதல் என்னும் சீர்திருத்தம் வருகிறது. அவனது அடு சோறு என்பது சமைத்த உணவு எனப் பொருள்படுகிறது. அடுப்பிலே சோறு சமைக்கும் செயல் மக்களுக்கு ஓயாது யாண்டும் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. அதை உண்பதிலோ மனிதன் ஒரு முடிவு கண்டவனும் அல்லன். ஒரு சரீரத்தில் பிறந்தது முதற்கொண்டு அது இறக்கும் பரியந்தம் உணவு உண்ணும் செயல் நின்றுவிடுவதில்லை. ஜீவபோதத்தை அவன் பேரபிமானத்தோடு காத்து வருவதற்கு அவன் ரசித்து உணவு உண்பதே அத்தாட்சியாகிறது.

மனிதன் உணவு ஏற்பதில் மற்றொரு தனிச் சிறப்பு இருக்கிறது. குறிப்பிட்ட வேளைகளில் வேண்டியவாறு வயிற்றினுள் சோற்றை அவன் செலுத்திவிடுகிறான். அதன் பிறகு அப்போதைக்கு உணவு போதுமென்று பகர்கிறான். அச்செயலை தேக்கு சிறியார்கள் போல எனத் தாயுமானவர் சுட்டிக் காட்டுகிறார். திரும்பத் திரும்ப உணவு உண்டு கொண்டிருக்கும் சிறுவர்களும் தெவிட்டிப் போகும்பொழுது உணவு இனி போதும் எனப் பகர்கின்றனர். பெரியவர்கள் ஆனவர்களும் அச்சிறுவர்கள் போன்றுதான் பகர்கிறார்கள். ஆனால் சிறிது நேரத்தில் உண்ட உணவு செமித்துவிடுகிறது. திரும்பவும் உணவு தேடும் செயல் ஓயாது நிகழ்ந்து வருகிறது. அம்முயற்சிக்கு முடிவு இல்லை. இது விஷயத்தில் மனிதனுக்கும் மற்ற உயிர்களுக்குமிடையில் வேற்றுமையில்லை.

உணவு உண்டு உயிர் வாழ்ந்திருக்கும் மனிதன் செய்யக்கிடக்கும் தனிச் செயல் ஒன்று உண்டு. அச்செயலை நட்டனைய தாக்கற்ற கல்வியும் விவேகமும் நல்நிலயமாக உன்னி எனலாம். நட்டனைய தாக்கற்ற என்பதற்கு நடுவு

நிலைமையாகக் கற்றுக்கொண்ட எனப் பொருள்படுகிறது. தனது இறந்தகால நிலையை மனிதன் பெரிதும் மறந்துவிட்டானெனினும் அதைச் சிறிதளவாவது அவன் ஞாபகத்துக்குக்கொண்டுவரமுடியும். எதிர்காலத்தில் தனது நிலைமை எப்படி இருக்கப்போகிறதென்பதையும் அவன் ஒருவாறு யூகித்துத் தெரிந்து கொள்ளலாம். இப்படிச் சென்றதையும், வருவதையும் பொருள்படுத்துதற்கு நிகழ்காலம் நடுவு நிலைமையாக இருந்து வருகிறது. ஒவ்வொரு கணப்பொழுதிலும் நிகழ்காலமே ஜீவனுக்குச் சொந்தமாக இருக்கிறது. அதில் நின்றுகொண்டே சென்றதையும் வருவதையும் அவன் யூகிக்கிறான். ஆதலால் அவனுக்கு நிகழ்காலம் யாண்டும் நடுவு நிலைமையாகிறது. அதைப் பயன்படுத்தி அவன் நல்ல கல்வியையும் விவேகத்தையும் பெறலாம். பெறுகிற கல்வியில் இரண்டு பகுதிகளிருக்கின்றன. சூழ்நிலையைப் பயன்படுத்தித் தனக்குத்தானே எண்ணிப்பார்ப்பது ஒரு முறை. பிறர் பெற்ற அனுபவத்தைக் கேட்டு அதைப் பயன்படுத்துவது மற்றொரு முறை. இப்படித் தன்னுடைய சொந்த அனுபவத்தையும், பிறர் அனுபவத்தையும் திரட்டி எடுத்து வைத்துக் கொண்டு அதினின்று வருகிற நலன் யாது கேடு யாது என்று பாகுபடுத்துவது விவேகம். கல்வியிலும் விவேகத்திலும் மேல்நோக்கிப்போகுமளவு மனிதன் தானே மேன்மையடைகிறான். அதன் மூலம் அம்மனிதன் நல்லறிவுக்கு உறைவிடம் ஆய்விடலாம். 'நல் நிலயமாக உன்னி' எனும் சொல் தொடர் தன் நிலைமையைப் பற்றித் தெளிவுபட ஓர்ந்து எனப் பொருள்படுகிறது. அத்தகைய நல்லறிவைப் பெறுவதே எண்ணிறந்த பிறவிகளை எடுத்ததன் மேலான பயன் ஆகிறது. அந்த நல்லறிவை வைத்துக்கொண்டு மனிதன் மேலும் என்ன செய்ய முடியும் என்னும் கேள்வி பிறக்கிறது.

மனது என்னும் தத்துவம் உயிர்களனைத்திடத்தும் இருக்கிறது. ஜடநிலையில் இருக்கும் உயிர்களிடத்து அது தோற்றத்திலில்லை. சேதனத்தில் உயிர்கள் மேலே வருமளவு மனோதத்துவம் சிறிது சிறிதாகத் தோற்றத்துக்கு வருகிறது. மானுட நிலையை எட்டும்பொழுது மனதும் நன்கு உருவெடுத்துவிடுகிறது. பிறகு மனிதனிடத்திலும் அது பல படித்தரங்களிலிருக்கிறது. இந்த மனதைப்பற்றிய ஒரு பேருண்மையை அறிந்துகொள்ளுதல் பெரிய படிப்பு ஆகிறது. கல்வியிலும், கேள்வியிலும், விவேகத்திலும் மனோதத்துவத்தைப் பற்றியதை முடிவானதென்றே மொழியலாம். கட்புலனுகின்ற இயற்கைக் காட்சியிலே எண்ணிறந்த வேற்றுமைகளை விளக்கிக் காட்டவல்லது மனது. வியவகாரங்களை வேண்டியவாறு விரிக்க வல்லது மனது. அண்டகோடிகளை மேலும் எண்ணிறந்த அண்டகோடிகளாகப் பிரித்து வைத்துக் காட்டவல்லது மனது. நாள்தோறும் அயர்ந்த உறக்கத்திலே அத்தகைய ஆற்றல் படைத்த மனது ஒடுங்கிவிடுகிறது. அது ஒடுங்கும்பொழுது அம்மனதை உடைத்திருக்கும் மனிதனுக்குப் பிரபஞ்சம் முழுதும் ஒடுங்கிவிடுகிறது. திரும்பவும் மனது தோற்றத்துக்கு வரும்பொழுது பிரபஞ்சமும் தோற்றத்துக்கு வருகிறது. தூங்குகிறபொழுது நம் கைவசத்திலில்லாது மனது ஒடுங்கிவிடுகிறது. விழித்திருக்கும் வேளையில் மனது ஓரளவு நம் கைவசத்திலிருக்கிறது. அப்பொழுது அதை ஒடுக்கிவைக்க முடியுமா என்ற கேள்வி நல்லோர்க்கிடையில் எழுந்தது. அதன் பொருட்டே அவர்கள் அரும்பெரும் சாதனங்கள் பல புரிந்தனர். வெற்றியடைந்தவர் சிலர்; தோல்வியடைந்தவர் பலர். இனி, தாயுமானவர் அதைப்பற்றி என்ன பகர்கிறுர் என்று பார்ப்போம். நானென்று நீயென்று இரண்டில்லை என்னவே நடுவே முளைத்த மனதைக் கட்ட அறியாமலே வாடி

னேன். இங்ஙனம் அவர் பகர்கிறார். மனதைக் கட்டுவது எல்லார்க்கும் எளிதன்று என்பதே சான்றோர்க்கு ஒப்ப முடிந்த முடிவாகும். மனது என்னும் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு மனிதன் உலகைப் பார்க்கிறான். பச்சைக் கண்ணாடி போட்டிருப்பவனுக்கு உலகிலிருப்பவைகளெல்லாம் பச்சையாகத் தென்படுகின்றன. சிவப்புக் கண்ணாடி போட்டிருப்பவனுக்கு அவையாவும் சிவப்பு நிறமுடையவைகளாகத் தென்படுகின்றன. கண்ணாடியில் மேடுபள்ளமிருந்தால் அதன்மூலம் பார்க்கும்பொழுது புறத்திலுள்ள பொருள்களெல்லாம் உள்ளபடி தென்படமாட்டா. வளைந்தும் கோணலாகவும் அவைகள் தென்படும். கண்ணாடியை மாற்றியமைப்பதற்கு ஏற்ப காட்சியும் மாறுகிறது. இக்கோட்பாடு மனதுக்கு முற்றிலும் பொருந்துகிறது. மனது என்னும் கண்ணாடியின் மூலம் நாம் புறவுலகைப் பார்க்கிறோம். கெட்ட மனமுடையவர்களுக்குப் புறவுலகம் கேடு நிறைந்ததாகத் தென்படுகிறது. நல்ல மனமுடையவர்களுக்கு அது நலம் நிறைந்ததாகத் தென்படுகிறது. நல்ல மனம், கெட்ட மனம் ஆகிய எல்லாவிதமான மனங்களும் உறங்கும் நிலையில் ஒடுங்கிவிடுகின்றன. அயர்ந்த உறக்கத்தில் கெட்டவன் காணும் கேடுடைய உலகம் காட்சியில் இல்லை. நல்லவன் காணும் நலம் நிறைந்த உலகம் காட்சியில் இல்லை. காண்போன், காணப்படுபொருள் என்கின்ற வேற்றுமையும் ஆங்கில்லை. நல்லவன் கெட்டவன் என்கின்ற பாகுபாடும் அயர்ந்த உறக்கத்தில் இல்லை. மனதின் ஒடுக்கமே பிரபஞ்சத்தின் ஒடுக்கத்திற்கு காரணமாயிற்று. இனி விழித்திருக்கும் வேளையில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனைவித மன வேற்றுமையும் இருக்கிறது. மனம் படைத்திருக்கிற ஞானியர்களுக்கிடையிலும் மன ஒற்றுமை என்பது முற்றிலும் அமைந்திருப்பதைக் காணமுடியாது. எண்ணிக்

கையிலடங்காத மனே விகாரங்கள் எண்ணிக்கையிலடங் காத வேறுபாடுகளுடைய பிரபஞ்சங்களைக் காணக் கருவி களாக இருந்துவருகின்றன. பின்பு மனதைத் தூயதாக்கிக் கொண்டே போனுல் தூய நிலையில் வேற்றுமைகள் குறைந்து விடுகின்றன. ஒற்றுமையை நோக்கி அத்தனைவித மனங்கள் செல்லுகின்றன. மனது முற்றிலும் தூயதாகிவிட்டால் பிறகு வேற்றுமைக்கு இடமில்லை. அதை ஒரு சான்றின் மூலம் விளக்குவது அவசியமாகிறது. பூமியில் படிந்துள்ள நீர் நிலைகள் எண்ணிக்கையிலடங்காதவைகள். பூமியின் சேர்க்கையால் எண்ணிறந்த இயல்புகளை நீர் பெற்றுவிடு கிறது. ஆற்று நீர், கிணற்று நீர், சேற்று நீர், குட்டை நீர், குளத்து நீர், கடல் நீர் இப்படியே அதன் தன்மைகள் விரி வடைந்து போகின்றன. இத்தனைவிதமான நீர்களும் ஆவி யாக மாறி மறுபடியும் உறைந்தால் அது தூய நன்னீராகி விடும். தூய நன்னீரில் எந்தவிதமான பேதமும் இல்லை. மனது படைத்துள்ள எண்ணிறந்த சங்கல்ப விகல்பங்களை முன்னிட்டு எத்தனை மனிதரோ அத்தனை மனது என்று மொழிகிறோம். மனதிலுள்ள சங்கல்ப விகல்பங்களையெல் லாம் துடைத்துவிட்டால் ஆவியினின்று உண்டான நன்னீர் போன்று நிர்விகல்ப நிலையில் மனது தூய நிலையை எய்தி விடுகிறது. அத்தூய நிலையில் பேதம் என்பது மனத்திடத்து இல்லை. யாரொருவன் சங்கல்ப விகல்பங்களைத் துடைக்க வல்லவனுகிருனே அவனே மனதைக் கட்ட வல்லவனுகிருன்.

அயர்ந்த நித்திரையில் சங்கல்ப விகல்பமில்லை. துரிய நிலையில் சங்கல்ப விகல்பமில்லை. (ஈண்டு துரியத்தையும் துரியாதீதத்தையும் ஒன்ருகவே கருதுகிருேம்.) ஆனுல் சுஷுப்திக்கும், துரியத்துக்கும் இடையில் வித்தியாச முண்டு. சுஷுப்தி என்னும் உறக்கத்தில் தாற்காலிகமாக

மனது ஒடுங்கியிருக்கிறது. விழிக்கும் வேளையில் திரும்பவும் செயல் புரியவல்லது அந்த மனது. அயர்ந்த உறக்கத்தில் தமோகுணத்தில் மூழ்கி அறியாமை என்னும் காரிருளில் மறைந்துகிடக்கிறான். பின்பு துரியம் அல்லது துரியாதீத நிலையிலோ தெளிவடைந்த மனது விகாரங்களற்றதாய் விடுகிறது. மனோநாசம் என்று அதை மொழியலாம். மனது முற்றிலும் சத்வகுணத்திலிருக்கிறபொழுது அதன் வாயிலாகத் தென்படுவதெல்லாம் பரம்பொருள் சொரூபமாம். தூய கண்ணாடியின் மூலமாகப் புறத்திலிருக்கிற பொருள்களெல்லாம் திரிவுபடாது உள்ளபடி தென்படுவதற்கு ஒப்பானது அது. ஆனால் சுத்த சத்வத்திலுள்ள மனதும் ஏதேனும் ஒரு தருணத்தில் மலினமடையக் கூடும். தூய கண்ணாடி சில வேளைகளில் அழுக்குப் படிவதற்கு ஒப்பானது அது. தூய கண்ணாடியின் மூலமாகப் புறப்பொருளை இருக்கிறபடி தெரிந்துகொண்ட பிறகு அந்தக் கண்ணாடியை உடைத்து விட்டால் பிறகு அழுக்குப் படிதல் என்னும் செயலுக்கு இடமில்லை. மனதை சத்வ நிலைக்குக் கொண்டுவந்து எல்லாம் பரம்பொருள் சொரூபம் என்கிற உண்மையைத் தெரிந்துகொண்ட பிறகு அத்தூயமனதையும் நிர்விகல்ப சமாதியில் உடைத்தெறிந்துவிடவேண்டும். அப்பொழுதே ஆத்ம சாதகன் மனதை உள்ளபடி கட்டியவனாகிறான். சித்த வைத்தியன் ஒருவன் பாதரஸத்தைக் கட்டுவதுபோன்று ஆத்ம சாதனத்தில் சித்தபுருஷன் ஒருவன் மனதைக் கட்டி ஒழித்துவிடுகிறான். அத்துடன் அவனுக்குப் பிரபஞ்ச வாழ்க்கை என்னும் வியவகாரங்கள் அறவே ஒழிந்துபோய் விடுகின்றன. நானென்று நீயென்று வேற்றுமைப்படுத்து தற்கு இனி மனதில்லை. எல்லாம் அகண்டாகார ஆத்ம ஜோதி ஆய்விடுகிறது. அயர்ந்த உறக்கத்தில் எல்லாம் காரிருள். மனதைக் கட்டிய பெருநிலையில் அகண்ட சச்சி

தானந்தம். இரண்டிலும் விகல்பமில்லை. ஆனல் உறக்கம் ஒடுங்கிய நிலை; துரியமோ எல்லை மருவாத பெருநிலை. அதில் பேரறிவு அல்லது பேருணர்வு திரண்டு ஒளிர்கிறது. அத்தகைய பூரணத்தை அடைவது குறிக்கோள். அதற்கு மேல் பெறுதற்கு ஒன்றுமில்லை. ஏனென்ருல் பூரணமே முடிவான பெருநிலையாம். பூரணத்தை அடைவதை கருணைக்கு உரித்தாவது என்று சொல்லலாம். தாம் இன்னும் அத்தகைய பெருநிலையை எட்டவில்லையே என்று ஏங்கி எப்போது கருணைக்கு உரித்தாவனே என்று தாயுமானவர் பரிந்து விண்ணப்பிக்கிருர். இக்கருத்துக்கள் யாவும் மேலே உள்ள பாடலில் பொதிந்திருக்கின்றன.

கருணாகரக் கடவுள் - 5

மெய்விடா நாவுள்ள மெய்யரு ளிருந்துநீ
மெய்யான மெய்யைஎல்லாம்
மெய்யென வுணர்த்தியது மெய்யிதற் கையமிலை
மெய்யேதும் அறியாவெறும்
பொய்விடாப் பொய்யினேன் உள்ளத் திருந்துதான்
பொய்யான பொய்யைஎல்லாம்
பொய்யெறு வண்ணமே புகலவைத் தாயெனில்
புன்மையேன் என்செய்குவேன்
மைவிடா தெழுநீல கண்டகுரு வேவிஷ்ணு
வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கள்தொறும் நின்றகுருவே
கைவிடா தேயென்ற அன்பருக் கன்பாய்க்
கருத்தூ டுணர்த்துகுருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

கடவுளுக்கு மெய்ப்பொருள் என்பது ஒரு பெயர். உண்மையில் அவருக்கு எப்பெயரும் பொருந்தாது. ஒரு நாமமும் ஒருரும் இல்லாதவரென்று அவரை இயம்புவது முறை. அத்தகையவர்க்கு ஆயிரம் திருநாமமும் அதற்கு மேலும் ஆன்றோர்கள் வழங்கியிருக்கின்றனர். அத்தனைவித நாமங்களும் அவருக்குப் பொருத்தமானவைகளே. பின்பு சொற்பதங்களை யெல்லாம் கடந்தவராகவும் அவர் இருக்கிறார். அவருக்கு அமைந்துள்ள பெயர்களுள் மெய்ப்பொருள் என்பது சாலச்சிறந்தது. இந்த ஒரு கோட்பாட்டை ஆராயு

மிடத்து அது அளவையில் அடங்காததாக விரிந்துகொண்டே போகும். முறையான ஆராய்ச்சி செய்யுங்கால் மெய்ஞானம் நமக்கு வாய்ப்பது உறுதி. மெய்ப்பொருள் எது என்கின்ற ஆராய்ச்சியைத்தான் முன்னுளைய முனிவர்கள் செய்தார்கள். அன்று முதல் இன்றுவரையில் அப்பேராராய்ச்சியைச் செய்துள்ள பெருமக்கள் இந்நிலவுலகிலே வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனை நூல்கள் வாயிலாக மக்களுக்கு அவர்கள் நவின்றிருக்கின்றனர். அதைத் தொகுத்தெடுத்துச் சுருக்கமாக அறிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. அப்படி அறிந்துகொண்டால் மெய்ப்பொருளைப் பற்றியும்,மெய்ப்பொருள் ஆராய்ச்சியைப் பற்றியும் சான்றோர்கள் சொல்லியுள்ள கூற்றுக்கள் நமக்கு உள்ளபடி விளங்கும்.

ஒரு பொருள் ஒரு காலத்தில் இருந்தும் மற்றொரு காலத்தில் இல்லாதும் போய்விடுமாகில் அது மெய்ப்பொருளாகாது.காலத்தால் அடிபடாதது எதுவோ, அதுவே மெய்ப்பொருள். ஓரிடத்தில் இருந்துகொண்டு மற்றோரிடத்தில் இல்லாது போய்விடும் பொருள் மெய்ப்பொருள் ஆகாது. நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் பொருளே மெய்ப்பொருள். ஒரு செயலை முகாமையாகக்கொண்டு இருக்கும் பொருள் மெய்ப்பொருளாகாது. அச்செயல் அற்றுப் போய்விடுங்கால் பொருளும் மறைந்து போய்விடும். செயல் அல்லது முகாமை அல்லது வர்த்தமானத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும் பொருள் மெய்ப்பொருளாகாது. இதற்கொரு சான்று எடுத்துக்கொள்வோம். சூரிய கிரணத்தையும், வானவெளியில் பரந்திருக்கும் நுண்ணிய நீர்த்திவலைகளையும் முகாமையாக வைத்துக்கொண்டு வானவில் அல்லது இந்திர தனுசு ஏழு நிறங்களுடன் தென்படுகிறது. நீர்த்திவலைகளோ, சூரிய

கிரணமோ இல்லாது போய்விடுங்கால் வான வில்லும் மறைந்துவிடும். காரண காரியமாக வருவது வானவில். காரணமில்லாதவிடத்து காரியப் பொருளும் மறைந்துவிடும். அப்படிக் காரண காரியமாய் வருவது மெய்ப்பொருளாகாது. இக்கோட்பாடுகளையெல்லாம் தொகுத்து கால தேச வர்த்தமானத்தில் கட்டுப்படாததெதுவோ அதுவே மெய்ப்பொருள் என்னும் கோட்பாடு வந்துள்ளது. கால தேச வர்த்தமானத்தில் கட்டுப்படாதவர் கடவுள். காலத்துக்கும் காலனை அவர் இருக்கிறார். எல்லா இடத்திலும், இடத்தைக் கடந்தும் அவர் இருக்கிறார். செயல்களனைத்துக்கும் மூல காரணமாகவும், செயல்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராகவும் அவர் இருக்கிறார். அதை முன்னிட்டு அவருக்குப் பாரமார்த்திக ஸத் (पारमार्थिकसत्) என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது.

இனி, இப்பிரபஞ்சமும், இப்பிரபஞ்சத்தினுள்ளே எண்ணிறந்த ஜீவர்களும் இருக்கிறார்கள். பிரபஞ்சத்துக்கு ஜகத் என்பது மற்றொரு பெயர். உயிர்களைத் தொகுத்து அவைகளுக்கு ஜீவன் என்னும் பொதுப்பெயரைக் கொடுத்து விடலாம். ஜீவன், ஜகத் ஆகிய இரண்டும் பரமாத்மாவைச் சார்ந்து இருக்கின்றன. மூலப்பொருளாகிய பரமாத்மாவுக்கு அந்நியமாக ஜீவன், ஜகத் ஆகிய இரண்டும் இல்லை. தயிர், வெண்ணெய், நெய் முதலியன பாலுக்கு அந்நியமானவைகளல்ல. மாந்தர் அணியும் அணிகள் தங்கத்துக்கு அந்நியமானவைகள் அல்ல. அப்படி ஜீவனும், ஜகத்தும் பரமாத்மாவுக்கு அந்நியமல்ல. பரமாத்மாவுக்குத் தோற்றமும் ஒடுக்கமும் இல்லை. ஜீவனுக்கும் ஜகத்துக்கும் தோன்றி மறையும் தன்மையுண்டு. ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் அவைகள் இல்லாது போய்விடுகின்

றன. ஓரிடத்திலிருப்பது போன்று மற்றொரு இடத்திலிருப்ப தில்லை. காரணகாரிய சொரூபமாகவே ஜீவனும் ஜகத்தும் இருக்கின்றன. ஆகவே அவைகளுக்கு வ்யாவஹாரிக ஸத் (व्यावहारिकसत्) என்னும் பெயர் வழங்கப்பெற்றிருக்கிறது. இதன் உட்கருத்தை அறிந்து கொள்ளுவது அவசியம். உல கமும், உயிர்களும் மெய்ப்பொருள்கள் ஆகுமா? உபசாரத் துக்காக நம் உடலை மெய்யென்று சொல்லுவது போன்று அவைகளையும் மெய்ப்பொருள்கள் என்று மொழியலாம். ஆனால் கால தேச வர்த்தமானத்துக்கு உட்பட்டவைகளாக ஜகத்தும் ஜீவனும் இருக்கின்றன. கால அளவையிலோ, இட அளவையிலோ, நிமித்த அளவையிலோ உட்பட்டி ருக்கும் மெய்ப்பொருள்கள் அவை. பாரமார்த்திக ஸத் அல்லது பரம்பொருளுக்குத் தருகிற அதே மதிப்பை வ்யாவ ஹாரிக ஸத் அல்லது ஜகத்துக்கும், ஜீவனுக்கும் கொடுக்க லாமா என்னும் கேள்வி எழக்கூடும். மூலப்பொருளுக்குத் தரு கிற அதே மதிப்பைத் தோற்றப் பொருள்களுக்குத் தருவது பொருந்தாது. அப்படியானால் தோற்றப் பொருள்களாகிய வ்யாவஹாரிக ஸத்தைப் புறக்கணித்து விடலாமா? அதுவும் முடியாது. ஜீவர்களின் அனுபவம், பண்பாடு ஆகியவை களின் பொருட்டு வ்யாவஹாரிக ஸத்தை அங்கீகரித்தே ஆகவேண்டும். யாண்டும் பள்ளிக்கூடத்திலேயே இருந்து வருவது ஒரு மாணாக்கனுடைய குறிக்கோளல்ல. ஆனால் அறிவைப் பூர்த்தியாகப் பெறும் வரையில் பள்ளிக்கூடத்தில் இருந்தே ஆகவேண்டும். அறிவைப் பெறுது பள்ளிக்கூடத் தைப் புறக்கணிப்பதில் பயனொன்றுமில்லை. ஜீவன் இருக் கும் வரையில் அவனுக்கு ஜகத்தின் தேவையுண்டு. ஜகத் என்னும் பள்ளிக்கூடத்தில் அவன் பரிபாகமடைந்து வரு கிறான். ஜீவபோதத்தைத் தாண்டுதற்கும் ஜகத் பயன்படு கிறது. ஜீவபோதம் அறுபடுகிற அதே வேளையில் ஜகத்

காட்சியும் மறைந்துவிடுகிறது. ஆக, அனுபவத்துக்காக வென்று எது இருக்கிறதோ அது வ்யாவஹாரிக ஸத்.

ஜீவன் பாரமார்த்திக ஸத்தை அறிந்துகொள்ள முயலுவானாகில் அவன் தன் இந்திரியங்களையும், மனதையும் கடந்து அப்பால் செல்லவேண்டும். புறக்கரணங்களாகிய பஞ்சேந்திரியங்களும், அகக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம் ஆகியவைகளும் மெய்ப்பொருளை அறிந்துகொள்ளுதற்குப் பொருத்தமான கருவிகளல்ல. இந்தக் கருவிகள் மூலமாகத் தென்படுவது மெய்ப்பொருளே; ஆனால் மெய்ப்பொருள் தன் நிஜசொரூபத்தில் கருவிகரணங்கள் மூலமாக விளங்குவதில்லை. திரிவுபட்ட காட்சியே அவைகள் மூலமாகக் கிடைக்கிறது. அப்படித் திரிவுபட்ட காட்சிக்கே ஜகத், ஜீவன் என்னும் பெயர்கள் வந்துள்ளன. திரிவுபட்ட காட்சிக்கு ப்ராதிபாஸிக ஸத் (प्रातिभासिकसत्) என்பது பெயர். இதைச் சற்று விளக்குவதும் அவசியம். கருவி கரணங்களின் குறைபாட்டால் மெய்ப்பொருள் போன்று தென்படுவது எதுவோ அது ப்ராதிபாஸிக ஸத். மயக்கத்தால் வரும் காட்சி என்பது அதன் பொருள். இனி, மூன்றையும் ஒப்பிடுவோம். மனிதன் ஜாக்கிரத, சொப்பன, சுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளை நாள்தோறும் அனுபவிக்கிறான். விழிப்பு, கனவு, உறக்கம் என இம்மூன்றும் பெயர் பெறுகின்றன. இம்மூன்று அவஸ்தைக்கும் பொதுவாயிருப்பது எதுவோ அது பாரமார்த்திக ஸத். விழித்திருக்கும்பொழுது அனுபவத்துக்கு எது இலக்கு ஆகிறதோ அது வ்யாவஹாரிக ஸத். கனவில் அனுபவத்துக்கு இலக்காவது போன்று வெறும் மயக்கத்தை உண்டுபண்ணுவது எதுவோ அது ப்ராதிபாஸிக ஸத். இனி, இயற்கையில் ப்ராதிபாஸிக ஸத் எது என்பதற்கும் வ்யாவஹாரிக ஸத் எது என்பதற்கும்

சான்று எடுத்துக் காட்டலாம். மின் சக்தியில் வட்டமான விளக்கு (Neon Light) ஒன்று அமைக்கிறோம். அது வ்யாவஹாரிக ஸத். ஒரு கயிற்றின் நுனியில் கட்டியுள்ள தீக்கொள்ளி ஒன்றை இரவில் வேகமாகச் சுழற்றுகிறோம். அப்பொழுது தீச்சக்கரம் ஒன்று தென்படுகிறது. அத்தீச்சக்கரம் ப்ராதிபாஸிக ஸத். தோற்றத்தளவில் அது சக்கரம். ஆனால் காரியத்துக்கு உதவாது. ஆனால் மின்சக்தியைக்கொண்டு அமைந்துள்ள சக்கர விளக்கோ காரியத்துக்கு உதவுகிறது. மின்சக்தி சக்கரவிளக்கு வ்யாவஹாரிக ஸத். மெய்ப்பொருள் ஆராய்ச்சியில் இம்மூன்று கோட்பாடுகளையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் அவசியமாகிறது.

மெய்விடா நாவுள்ள மெய்யருள்ளிருந்து நீ மெய்யான மெய்யை எல்லாம் மெய்யென உணர்த்தியது மெய்யிதற்கையமிலை என்று தாயுமானவர் இயம்புகிறார். யாரெல்லாம் தங்களுடைய நாவிலே மெய்ம்மையே யாண்டும் குடியிருக்கும்படிச் செய்தார்களோ அவர்களே உண்மையில் நன்மக்கள் ஆவர். அத்தகைய சத்திய சொரூபிகளுடைய உள்ளத்திலே மெய்ப்பொருளாகிய தேவரீர் வீற்றிருந்து கொண்டு முக்காலத்திலும் மாறுபட்டுப் போகாத மெய்ப்பொருள் யாது என்பதை ஐயம் திரிபு அற விளக்கியருளியிருக்கின்றீர். அப்படி மெய்யையே நாடியிருந்தவர்களுக்குத் தாம், மெய்ப்பொருளாகிய தம்மையே காட்டியுள்ளீர். இது உண்மை. இதில் சந்தேகம் ஒன்றும் கிடையாது என்பது இதன் கருத்தாகும். இக்கோட்பாட்டை ஆத்மசாதனமாக நடைமுறையில் பலபேர் கொண்டுவந்திருக்கின்றனர். சத்தியத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கு முறைகள் பல இருக்கின்றன. அவைகளுள் ஏதோ சிலவற்றை மட்டும் எடுத்துக்காட்டாக இயம்பமுடியும். 'சத்தியமேவ ஜயதே,

ந அந்ருதம்' என்பது உபநிஷத வாக்கியம். இப்பொழுது நாம் வகித்துவரும் சுதந்தர அரசாங்கத்துக்கு இவ்வாக்கியமே குறிக்கோளாக இருந்துவருகிறது. சத்தியம் ஒன்றே வெற்றி பெறுகிறது; அதற்கு மாறானது வெற்றிபெறாது என்பது இவ் வாக்கியத்தின் கருத்து. எது சத்தியம் என்னும் கேள்வி ஈண்டு எழுகிறது. மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங் களும் ஒத்திருப்பது சத்தியம். எண்ணத்துக்கும், இயம்பு தற்கும், இயற்றுதற்குமிடையில் வேறுபாடு இருக்குமாகில் அது சத்தியமாகாது. கள்குடிக்கவேண்டுமென்று ஒருவ னுக்கு உள்ளத்தில் ஆசையுண்டாகிறது. கள் கடை எங்கே என்று வெட்கப்படாது அதைப்பற்றிக் கேட்டுக்கொண்டு அவன் திரிகிறான். பிறகு கள்ளை வாங்கிக்குடித்து வெறிய னாகிறான். மற்றவர் அவன் செயலை எள்ளி நகையாடுகின்ற னர். 'ஆம்; நான் குடியன்; கள்ளுண்ணாதிருக்க என்றால் முடியாது' என்று அவன் இயம்புகிறான். உள்ளம், உரை, உடல் ஆகிய முக்கரணங்களும் அவனிடத்து ஒன்றுபட்டு இருக்கின்றன. அந்த அளவில் அவன் சத்தியவாதி. மற் றொரு மனிதனுக்குக் கள் குடிக்கவேண்டுமென்னும் விருப்ப மிருக்கிறது. ஆனால் அது கெட்டது என்று அவன் உணரு கிறான். இடையிடையே அவ்வாசைக்கு உட்பட்டு அவன் அதை அருந்திவிடுகிறான். பிறர் கண்ணில் படாது தன் செயலை அவன் மறைத்துவைக்கிறான். இத்தகைய மனிதன் பொய்யன். மெய்ம்மையில் ஒழுகும் முதல் மனிதனுக்கு விமோசனம் உண்டு; மெய்யர்போன்று பாசாங்கு செய்யும் இரண்டாவது மனிதனுக்கு விமோசனமில்லை.

ஹரிச்சந்திரன் தன் ஆயுட்காலமெல்லாம் மெய்ம்மையே பேசிக்கொண்டிருந்தான். மெய்ம்மையினின்று எக்கார ணத்தை முன்னிட்டும் அவன் வழுவவில்லை. சோதனைகள்

பல ஏற்பட்டும் மெய்ம்மை பிறழாது இருந்தான். மெய்ம்மையை அவன் காக்க, மெய்ப்பொருள் அவனைக் காத்தது. தந்தையை மெய்ம்மை மாருதவன் என்னும் பெருநிலையில் வைத்தற்பொருட்டு மைந்தன் தசரதராமன் பதினன்கு வருஷங்கள் வனவாசம் செய்தான். அவன் மெய்ம்மை காத்தது நல்லார்க்கு நலம் தருவதாகவும், தீயவர்கள் தகர்க்கப்படுவதாகவும் முடிந்தது. மெய்ம்மையினின்று வரும் நலன் அளப்பரியதென்பதற்கு ஸ்ரீராமன் வாழ்வு நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகும். ரிஷி புத்திரன் நசிகேதன் தந்தையை சத்தியசங்கல்பன் ஆக்குதற்கு அதாவது மெய்ம்மையைப் பேசுபவனுக அமைத்து வைத்தற்பொருட்டு தந்தை சொற்படி யமலோகத்திற்குப் போய்விட்டான். அவன் கடைப்பிடித்த சத்திய விரதம் தந்தைக்கும், தரணியிலிருப்போர்க்கும், தனக்கும் பெருநலன் விளைவிப்பதாயிற்று. வாணிபம், நீதி மன்றத்தில் வழக்காடுதல் ஆகிய செயல்களில் சத்தியத்தைச் சரியாகக் கடைப்பிடிக்க முடியாது என்று பலர் எண்ணி வருகின்றனர். ஆனல் வாய்மையினின்று வழுவாதிருப்பவர்களுக்கே வாணிபமும், வழக்கும் நாளடைவில் மாருத வெற்றியை வழங்கும். ஆக, உலக நடைமுறையில் எல்லா நிலைகளிலும் மக்களனைவரும் உண்மைக்கு ஒப்ப ஒழுகக் கடமைப்பட்டிருக்கின்றனர். இவ்வுலக வாழ்க்கைக்கு உண்மையொன்றே உறுதுணை ஆகிறது.

இனி, ஆத்ம சாதனம் பயிலுகிறவர்கள் உண்மைக்கு ஒப்ப நடந்துகொள்ளுகின்றனர். இம்மியளவும் அது விஷயத்தில் அவர்கள் ஓரம் சார்வதில்லை. அவர்கள் எப்படி மெய்ம்மைக்கு ஒப்ப நடந்து கொண்டார்களென்று பார்ப்போம். கடவுளே இவ்வுலகனைத்தும் ஆகியிருக்கிருர் என்னும் கோட்பாட்டை சாதகர்களில் சிலர் எடுத்துக்

கொள்ளுகின்றனர். இவ்வுலகுக்கு வ்யாவஹாரிக ஸத் என்னும் மதிப்பை அவர்கள் தருகின்றனர். உலக நடை முறையின் மூலம் உயிர்களையெல்லாம் ஒன்றோடொன்று தொடர்வு கொள்ளச்செய்து அவ்வுயிர்களை இறைவன் பண்படுத்தி வருகிறார். ஆதலால் அவைகளுக்கேற்ற முறையிலே விதவிதமான தொடர்வுகள் வைப்பது ஆத்ம சாதனமாகும். எல்லா உயிர்களும் நாராயண சொரூபம். ஆனால் புலி நாராயணனைப் போய்த் தழுவலாகாது. எட்ட இருந்து கொண்டு அவனுக்கு மரியாதை செலுத்திவிடவேண்டும். போக்கிரி நாராயணனைப் புடைக்கவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டால் அச்செயலும் ஒருவித வழிபாடு ஆகிறது. உலகில் நிறைந்துள்ள நன்மை தீமைகளை முறையாகக் கையாளுவது ஆத்ம சாதனம். அதன் மூலம் சாதகன் ஒருவன் மெய்ம்மையினின்று பிறழாதிருக்கின்றான். பக்குவமடையும் பொழுது புலி நாராயணன், பாம்பு நாராயணன், பசு நாராயணன்,பரமஹம்ஸ நாராயணன் ஆகிய வேற்றுமைகளுக்கிடையில் நாராயணன் என்னும் ஒற்றுமை வலுத்துவிடுகிறது. நாளடைவில் வேற்றுமை விலகிப்போய்விடுகிறது. நாராயண சொரூபம் ஒன்றே எஞ்சியிருக்கிறது. வ்யாவஹாரிக ஸத் என்னும் கோட்பாட்டை உள்ளபடி ஏற்றுக்கொண்டு அதை முறையாக அனுஷ்டிக்கின்றவர்கள் மெய்ப்பொருளை அடைகின்றனர்.

கடவுளே இவ்வுலகமாகவும், உயிர்களாகவும் தோன்றிக்கொண்டிருப்பதால் இவைகளைப் பொய்த் தோற்றங்களென்று சொல்லலாகாது. ஜீவர்கள் பண்பாடு அடைந்து வருவதற்கு உலகத் தோற்றங்களும், உலக நடைமுறைகளும் முற்றிலும் அவசியமானவைகள். எனவே வ்யாவஹாரிக ஸத் சிருஷ்டியின்கண் யாண்டும் உளது. இந்த வ்யாவ

ஹாரிக ஸத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு மற்றொரு வித ஆதரவற்ற உணர்வை ஜீவன் வரவழைத்துக்கொள் கிறான். அதற்குச் சில சான்றுகள் எடுத்துக்கொள்வோம். மனிதன் வெள்ளியைப் பார்த்திருக்கிறான். பின் கிளிஞ்சலைப் பார்த்து அதை வெள்ளி என்று நினைத்துக்கொள்வானாகில் அது உண்மையோடு ஒவ்வாத எண்ணமாகும். மனிதன் பாம்பைப் பார்த்திருக்கிறான். மங்கிய வெளிச்சத்தில் சுருண்டு கிடக்கும் கயிற்றைப் பார்த்து பாம்பு என்று எண்ணி மருண்டுபோய்விடுகிறான். அந்த எண்ணம் உண் மையை ஆதரவாகக் கொண்டதல்ல. ஓரிடத்தில் மனிதன் தடாகத்தைக் காண்கிறான். மற்றோரிடத்தில் தடாகம் போன்று தென்படும் கானல் நீரைக் காண்கிறான். உண்மை யான தடாகம் வ்யாவஹாரிக ஸத். கானல் நீரோ ப்ராதி பாஸிக ஸத். உண்மையான பாம்பு வ்யாவஹாரிக ஸத். கயிற்றின்மீது பாம்பை ஆரோபிப்பது ப்ராதிபாஸிக ஸத். உண்மையான வெள்ளி வ்யாவஹாரிக ஸத். கிளிஞ்சலை வெள்ளியென்று எண்ணுவது ப்ராதிபாஸிக ஸத். கடவுள் வழிபாட்டில் ஈடுபடுகிறவர்கள் வ்யாவஹாரிக ஸத்தை உள்ளபடி ஏற்றுக்கொண்டு அதைக் கடவுள் வழிபாட்டுக் குப் பயன்படுத்தலாம். 'இவன் என் மகன்; இவள் என் மனைவி; இவள் என் மகள்' என்றெல்லாம் பொருள்படுத்து வது வ்யாவஹாரிக ஸத். ஆனால் கடவுள்தான் மகனாகவும், மனைவியாகவும், மகளாகவும் வந்திருக்கிறார் என்னும் எண் ணத்தை உறுதிப்படுத்துவது மெய்யை மெய்யென்று உணர் வதாகும். இதற்கு மாறாகக் கானல் நீரையும், கயிற்றில் பாம்பையும், கிளிஞ்சலில் வெள்ளியையும் உணர்வது பொய் யானதை மெய்யென்று கருதுவதற்கு ஒப்பாகும். அந்தக் கருத்தை மெய்ம்மைக்கு ஒப்ப திருத்தியமைப்பது ஆத்ம சாதனமாகும். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம்.

களிமண்ணையும் சாயத்தையும் பயன்படுத்தி சர்ப்பம் ஒன்றைச் சிற்பி ஒருவன் அமைக்கிறான். அதே களிமண்ணையும், சாயத்தையும் கொண்டு அழகிய பெண்வடிவம் ஒன்றை அவன் அமைக்கிறான். அவைகளை உயிருடையவைகள் என்று மயக்கம் கொள்ளுகிறவன் பாம்பைக் கண்டு பயப்படுகிறான்; மங்கையைப் பார்த்துக் காமுறுகிறான். ஈண்டுத் தென்படும் பாம்பும், பெண்ணும் ப்ராதிபாஸிக ஸத். மனதில் வெவ்வேறு விருத்திகளை அவைகள் உண்டுபண்ணின. களிமண்ணிலும் சாயத்திலும் அவைகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன என்று அறிந்தான பிறகு ஒன்றைப் பார்த்து அஞ்சுவதும், மற்றொன்றைப் பார்த்து ஆசைப்படுவதும் இல்லை. நாம ரூபங்களே மயக்கத்தை உண்டுபண்ணுகின்றன. இளம் மங்கையாக இருக்கிற ரூபம் காமத்தை வளர்க்க வல்லது. அதே ரூபம் முதுமையையடைந்துவிடுங்கால் காமத்தை அது போக்கிவிடக்கூடியது. ஜகத் முழுதும் நாமரூபசொரூபம். விருப்பு, வெறுப்பின்றி நாமரூப சொரூபமான பிரபஞ்சத்தைப் பயன்படுத்திவந்தால் அதைப் பற்றிய மெய்யுணர்வு பெறுவதற்கு அது உதவுகிறது. ஆனால் அந்த ரூபங்களிடத்தில்லாத தன்மைகள் பலவற்றை அவைகளின் மீது புகுத்துமிடத்து அது அப்படி புகுத்துபவனுடைய குற்றமாகும். அக்குற்றத்தையே ப்ராதிபாஸிக ஸத் என்று சொல்லுகிறோம். கானல் நீர் தாக சாந்திக்கு உதவாது. நீர் நிலையல்லாத இடத்தை நீர் நிலையாகப்பொருள்படுத்துவது ப்ராதிபாஸிக ஸத். ஐம்பொறிகளுக்குப் புலனாகின்றவைகள் இன்பத்தைத் தரக்கூடியவைகளல்ல. அவைகளை இன்பம் தருபவைகளாக அவைகளுக்கு மதிப்புக் கொடுத்து அவைகளை நாடி அலைவது ப்ராதிபாஸிக ஸத்தின் விளைவு. அப்படி ப்ராதிபாஸிக ஸத்தால் ஏவப்பெறுவது மெய்யையெல்லாம் மெய்யென உணர்வதற்குஉதவாது.

மெய்ப்பொருள் நாட்டம் உடையவர்கள் ப்ராதிபாஸிக ஸத்தின் ஆதிக்கத்திற்கு அடிமைப்படமாட்டார்கள். இன்னும் எளிய ஓர் உபமானத்தைக் கொண்டு இதை விளக்குவோம். சர்க்கரையால் மிட்டாய் வகைகள் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் எந்த மிட்டாயை எப்பக்கத்தில் மென்ருலும் அது தித்திக்கும். ஆனல் குழந்தைகளுக்கிடையில் குதிரை வடிவெடுத்திருக்கும் மிட்டாய்க்கும், யானை வடிவெடுத்திருக்கும் மிட்டாய்க்கும் இடையில் வேற்றுமை பாராட்டி விருப்பு வெறுப்பை வளர்க்கும் தன்மையுண்டு. நாமரூபமாகிய ப்ராதிபாஸிக ஸத்தின் ஆதிக்கத்தால் இத்தகைய சச்சரவு வருகிறது. சான்ரேூர்கள் பிரபஞ்சத்திலுள்ள பொருள்களின் நாமரூபத்தை முன்னணியில் வைப்பதில்லை. எந்த வஸ்துவால் அவைகள் ஆக்கப் பெற்றிருக்கின்றனவோ அந்த வஸ்துவை அங்கீகரிக்கும் இயல்புடையவர்களாக அவர்களிருக்கிருர்கள். அந்த இயல்புக்கேற்றபடியே அவர்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்துகிருர்கள். ஆதலால் அவர்கள் விஷயத்தில் மெய்யர் உள்ளிருந்து நீ மெய்யான மெய்யை எல்லாம் மெய்யென உணர்த்தியது மெய் இதற்கு ஐயமில்லை என்று போற்றலாம். அவருடைய பேச்சும் அக்கொள்கைக்கு ஒத்ததாகவே இருக்கிறது. அன்னவர் ஒழுகும் மார்க்கத்தையே சன்மார்க்கம் என்று சொல்லலாம். ஆக ப்ராதிபாஸிக ஸத் என்னும் கோட்பாட்டைக் கையாண்டு நாமரூபத்துக்கப்பாலிருக்கும் பொருளைக் காண்பவரே மேலோர்.

இனி, இறுதியாக பாரமார்த்திக ஸத் என்னும் கோட்பாடு இருக்கிறது. இக்கோட்பாட்டுக்கு ஒப்ப நடந்துகொள்ளும் நிறைஞானிகள் உலகில் யாரோ சிலர் இருக்கின்றனர். சுகப்பிரம்மத்தை அத்தகையவர்களுக்கு ஏற்ற முன்

மாதிரியாக மொழியலாம். பிறப்பெடுத்திருக்கின்றபொழுதும் பிறப்பை அவர்கள் அங்கீகரிப்பதில்லை. உடல் என்னும் வடிவத்தில் இலங்கிக் கொண்டிருக்கிறபொழுதும் அவ்வடிவம் அவர்கள் உள்ளத்தில் எந்தவிதமான விகாரத்தையும் உண்டுபண்ணுவதில்லை. நமக்குத் தென்படும் பிரபஞ்சம் அவர்களுடைய காட்சியில் இல்லை. பெயரளவில் அவர்கள் மானுட வடிவத்தில் இலங்குகின்றனர். யாண்டும் அகண்ட சச்சிதானந்தத்தில் திளைத்திருப்பதே அவர்களுடைய மெய்யான நிலை. அகண்ட சச்சிதானந்தமாகிய பிரம்மத்தைப் பற்றிய பேச்சு அல்லாது வேறு எந்தப் பேச்சும் அவர்களுடைய நாவில் எழாது. அன்னவர்களைக் காண்பதும், அன்னவர்களோடு தொடர்வு கொள்ளுவதும் பரம்பொருளை சாக்ஷாத்கரிப்பதற்கு ஒப்பாகும்.

இப்படி மெய்ப்பொருள் காட்சி காண்பவர்களை நான்கு படித்தரங்களில் வைத்து இயம்பியாய் விட்டது. உலக நீதிக்கு ஒப்ப மெய்யராய் இருப்பது ஒன்று. வ்யாவஹாரிக ஸத்தை ஆதரவாக வைத்துக்கொண்டு மெய்ப்பொருள் நாட்டம் கொள்வது வேறொன்று. ப்ராதிபாஸிக ஸத்தை விசாரத்தால் பயன்படுத்தி அதற்கப்பால் போக முயலுவது மற்றொன்று. பாரமார்த்திக ஸத்திலேயே யாண்டும் அசைவற்றிருப்பது நான்காவதும் முடிவானதுமான நிலையாகும். இத்தகைய மார்க்கங்களையெல்லாம் வடதுருவத்தில் வைத்தால் தாம் போகின்ற போக்கை அதற்கு எதிரிடையாயிருக்கும் தென் துருவத்தில் வைத்து தம்மையே இகழ்ந்து தாயுமானவர் பேசுகிறார். மெய்யேதும் அறியா வெறும் பொய் விடாப் பொய்யினேன் உள்ளத்து இருந்து தான் பொய்யான பொய்யை யெல்லாம் பொய்யெனு வண்ணமே புகல வைத்தாய் எனின் புன்மையேன் என் செய்குவேன்?

என்று அவர் முறையிடுகிறார். மேலே இயம்பியுள்ள மெய்ம்மை எதையும் தாம் இன்னும் அறிந்துகொள்ளவில்லை என்று அவர் தமது நிலையைக் கண்டித்துப் பேசுகிறார். வெறும் பொய்விடாப் பொய்யினேன் என்று தம்மைத் தூற்றுகிறார். உலகத்தில் தோன்றியுள்ள உயிர்வகைகளுக் கிடையிலே உற்றாரென்றும், வேற்றாரென்றும் கற்பனை பண்ணிக்கொள்வதெல்லாம் பொய்யை உறுதிப்படுத்தும் பொய்யினரது போக்காகும். வடிவங்களுக்கு நிலைபேறு இல்லை. அவைகளுக்கிடையில் விருப்பு வெறுப்புக்கொள்வதற்கு அவசியம் ஒன்றுமில்லை. ஆனால் அத்தகைய மனவிருத்திகளை யெல்லாம் பொய்யென்று சொல்லாது அவைகளை நிலையானவைகளாகக் கருதுவது புன்மையன் அல்லது அற்பனுடைய போக்கு ஆகும். மெய்ஞ்ஞானிகள் மார்க்கத்திலே செல்லாது அற்பனாக இருந்து அற்பத்தன்மையிலே போய்க் கொண்டிருக்கும் தம்முடைய நிலையைத்தான் அவர் பெரிதும் நொந்துகொள்கிறார். பரத்தையடைதற்கு ஓர் உபாயமாக இவ்வையக வாழ்வை வைத்துக்கொள்ள வேண்டுமே யொழிய இதுவே முடிவான நிலையென்று இதில் கட்டுண்டு உழன்று கிடக்கலாகாதென்பது அண்ணலின் கருத்து.

ஆத்ம சாதகன் ஒருவனை ஆட்கொள்ளும் குருவுக்கு ஒப்பு உயர்வு அற்ற மரியாதை காட்டுவது ஆன்றோர் அனைவரது மரபு ஆகும். சாதகன் ஒருவன் வழிபடு தெய்வத்துக்கு ஒப்பாக அல்லது வழிபடு தெய்வத்தின் மிக்கவராகத் தன் குருவைக் கருதுதலில் இழுக்கு ஒன்றுமில்லை. குரு பக்தி ஓங்குமளவு ஆத்ம சாதனம் தானாக மேன்மையடைகிறது. குரு வணக்கத்தில் ஆன்றோர்கள் 'குரு ப்ரம்மா, குரு விஷ்ணு, குரு தேவோ மஹேஸ்வர:' 'குருரேவ பரப்பிரம்ம, தஸ்மை ஸ்ரீகுரவே நம:' என்கின்றனர். மும்மூர்த்தி

களாக இலங்குபவர் குரு. பரப்பிரம்மமாக இருப்பவர் குரு. எனவே குருவுக்கு வணக்கம் என்பது இதன் கருத்து. இச் சொற்களெல்லாம் வெறும் உபசாரத்துக்கு இயம்பப்பட்டவைகளல்ல. சாதகன் உள்ளூற குருவைப்பற்றி இத்தகைய பக்தி நிறைந்த எண்ணம் கொண்டிருக்கவேண்டும். மும்மூர்த்திகள் வேறு; பரப்பிரம்மம் வேறு அல்ல. கடவுள் ஒருவரே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டிருக்கும்பொழுது அவர் மும்மூர்த்திகளென இயம்பப்படுகிறார். செயல்களைக் கடந்த நிலையில் அவர் பரம்பொருளாக இலங்குகிறார். இந்த ஐதிகத்துக்கு ஒப்ப தாயுமானவரும் தமது குருவை மைவிடாதெழு நீலகண்ட குருவே விஷ்ணு வடிவான ஞானகுருவே மலர்மேவி மறையோது நான்முகக் குருவே என்று இயம்புகிறார். இப்படி அவர் சொல்லுதலில் கருத்து மிகப் புதைந்திருக்கிறது. சிவபெருமானுக்கு நஞ்சையுண்டதனால் தொண்டையில் கருமை நிறம் அமைந்திருக்கிறது. அதை முன்னிட்டு அவர் நீலகண்டன் என அழைக்கப்படுகிறார். அது சிவனார்க்கென்று அமைந்துள்ள தனிச்சிறப்பு ஆகும். பாற்கடலைக் கடைந்து பொருள்கள் பலவற்றை தேவர்களும், அசுரர்களும் பெற்றுப் பங்கு போட்டுக்கொண்டபொழுது சிவபெருமான் அதில் பங்கு கேட்கவில்லை. பிறகு அவர்களை விழுங்க வந்த விஷத்தைத் தாம் உண்டு அவர்களைக் காப்பாற்றினார். இச்செயல் தியாகத்தின் உச்சநிலையாகும். இன்பம் தரும் பொருள் எதுவும் தனக்கு வேண்டாமென்று தள்ளுவதும், மற்ற உயிர்களின் நலத்தின் பொருட்டுத் துன்பத்தைத் தான் வலிய ஏற்றுக்கொள்வதும் சிவன்போன்ற தியாகராஜனுக்கே இயலும். சிவ சொரூபத்தின் பேரழகுக்கு இழுக்குப்போன்று நீலகண்டம் அமைந்திருக்கிறது. அழகன் ஒருவனைப் பொருந்தாத செயல் அலங்கோலப்படுத்திவிட்

டால் அக்குறைபாட்டை புறத்திலுள்ளவர்களுக்குக் காட்டாது மறைத்துவைப்பது உலகத்தவர் செயல். உதாரணமாக திருடியதை முன்னிட்டு ஒரு மனிதனுடைய மூக்கை அறுத்துவிடுவார்களாஞல் அவன் தன்னை மற்றவர்கள் முன்னிலையில் காட்டிக்கொள்வதற்கு யாண்டும் வெட்கப்படுவான். ஆனல் ஒரு வீரப்போரிலே ஒருவன் மூக்கை இழந்துவிட்டால் அது நாணுதற்குரிய குறைபாடு ஆகாது. எல்லார் முன்னிலையிலும் காட்டிக்கொள்ளுதற்கான அலங்காரமாகும். சிவபெருமான் கறைகண்டனுயிருப்பதும் அவருக்கு அலங்காரமாகிறது. உலக நலத்தின் பொருட்டு அவர் செய்த தியாகத்தின் புறச்சின்னமாகும் அவர் கண்டத்தில் அமைந்திருக்கும் குறைபாடு. குறைபாடு போன்று தென்படுகிற பூஷணம் என்று அதைப் பகரவேண்டும். துறவறத்தில் சிவனுக்கு ஒப்பானவர் தமது குரு என்று தாயுமானவர் இயம்புகிருர். உயிர்களைக் காத்தல் மஹாவிஷ்ணுவின் செயல். வெறுமனே வாழ்ந்திருப்பது வாழ்க்கையாகாது. வாழ்நாளிலெல்லாம் மேலும் மேலும் மெய்ஞானத்தை வளர்ப்பவனே நன்கு வாழ்பவன் ஆகிருன். கல் போன்றும், மரம் போன்றும் நெடிது வாழ்ந்திருத்தல் போதாது. பேரறிவாளியாக ஆத்ம சாதகன் தன் வாழ்வை ஆக்கவேண்டும். குருவின் துணையால் அது அமைகிறது. அத்தகைய துணைபுரியும் குரு ஆனவர் மஹாவிஷ்ணுவின் செயலைப் புரிபவர் ஆகிருர். அதை முன்னிட்டே விஷ்ணு வடிவான ஞானகுருவே என்று அண்ணல் இயம்புகிருர். விஷ்ணு என்னும் சொல் எங்கும் நிறைபொருள் எனப் பொருள்படுகிறது. எங்கும் நிறைந்திருப்பதைப் பெறுதற்கு ஊர் ஊராய்த் தேடியலைய வேண்டிய அவசியமில்லை. இருக்குமிடத்திலேயே ஈசனுடைய சாந்நித்தியத்தைச் சாதகன் ஒருவன் உணரலாம். பின்பு அவன் குருவைத் தேடியலையவேண்டிய அவசியமும் இல்லை.

அருள் தாகம் மிகப்படைத்தவனாக இருப்பானாகில் அவனுக்கு அத்துறையிலே தாகசாந்தி செய்து வைத்தற் பொருட்டு அருள் குருவாக அவனுடைய உள்ளத்தினுள்ளே தோன்றுகிறார்; அல்லது திருமேனி தாங்கியவராகப் புறத்தில் எழுந்தருளுகிறார். ஆத்ம சாதகன் ஒருவன் அருள் தாகம் பெறவேண்டியது ஒன்றுதான் பாக்கி. அதை அவன் பெற்றுவிட்டால் ஏதேனும் ஒரு விதத்தில் குருவின் தொடர்வு அவனுக்குக் கிட்டிவிடுகிறது என்னும் கோட்பாட்டை, விஷ்ணு வடிவான ஞானகுருவே என்னும் சொல் தொடர் விளக்கிக் காட்டுகிறது. மும்மூர்த்திகளுள் படைப்புத் தெய்வமாகிய நான்முகக் கடவுளை வழுத்தலாகாது என்பது கோட்பாடு. பிரம்மாவை வழுத்துபவர்களெல்லாம் பிறவியைப் பெருக்குபவராகின்றனர். அப்படிப் பிறவிப் பெருங்கடலைப் பெருக்குவது குறிக்கோளாகாது. பிறவியை வளர்க்கிற நான்முகக்கடவுள் பிரம்மதேவன், மஹாவிஷ்ணுவின் நாபியில் தோன்றிய தாமரையின்மீது வீற்றிருந்து கொண்டு வேதங்களை விளக்குகிறார். அவருடைய செயலை குருவும் செய்கின்றார். ஆயினும் குருவுக்கும், நான்முகக் கடவுளுக்கும் வேற்றுமையொன்று உண்டு. பிறவிகளில் பற்றுதலை வளர்ப்பது சிருஷ்டிகர்த்தா பிரம்மாவின் போக்கு. எத்தனை பிறவிகளெடுத்து எத்தகைய வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் அது செய்ததையே திரும்பத் திரும்பச்செய்து கொண்டிருக்கும் வ்யாவஹாரிக நிலையைத்தவிர வேறொன்றுமில்லை என்று குரு ஞாபகமூட்டுகிறார். வேதத்தை ஓதி வேதத்தின் முடிவு அல்லது வேதாந்தத்துக்குப் போய்விடு என்றும் குரு உபதேசிக்கிறார். ஆதலால் அவர் மலர்மேவி மறையோது நான்முகக் குருவே என்று போற்றப்படுகிறார். ஞானம் நிறைந்த நல்வாழ்க்கையை நல்கி பிறகு அதற்கப் பாலும் போவதற்கு குரு அனுக்கிரகம் செய்வதால் அவர்

இங்ஙனம் போற்றப்படுகிருர். எனவே சற்குருவானவர் மும்மூர்த்திகள் சொரூபமாகவும், அவர்களுக்கு அப்பாற் பட்டவராகவும் இருக்கிருர்.

மதவாதிகளுக்கிடையில் கடவுளைப்பற்றிய தவறுதலான கருத்து ஒன்று உண்டு. அந்தந்த மதத்துக்குரிய தனி தெய்வம் ஒன்று உண்டு என்று அவர்கள் எண்ணி வருகின்றனர். அதாவது தெய்வங்கள் பல என்பது அவர்களின் கருத்து. தீபங்களிலெல்லாம் எரிவது ஒரே தீ. உயிர்களனைத்திடத்தும் ஒளிர்ந்து கொண்டிருப்பவர் ஒரே பரமாத்மா. மக்களின் இயல்புக்கேற்ப மதங்கள் பலவற்றைத் தோற்றுவித்து அவையாவுக்கும் நடுநாயகமாகவிருப்பவர் பரம்பொருள் ஒருவரே. இதை அறிந்துகொண்டவர்கள் கடவுளைப்பற்றிய மெய்ம்மையை அறிந்துகொண்டவர்கள் ஆகின்றனர். இவ்வுண்மையை அறியாதவர்கள் கடவுள் தத்துவத்தை அறிந்து கொண்டவர் ஆகார். மதங்கள்தொறும் நின்ற குருவே என்று குருவையும், கடவுளையும் ஒன்றுபடுத்திப் பாராட்டுகிருர்.

கடவுளை நோக்கி மனிதன் ஓர் அடி போனல் அத்தகைய அன்பனை நோக்கிக் கடவுள் பத்தடி ஓடிவருகிருர் என்னும் கொள்கை ஆத்ம சாதகர்களுக்கிடையில் உண்டு. மனிதன் எவ்வளவுதான் தவறுதல்களைச் செய்துவிட்டாலும் அவைகளை முன்னிட்டு அம்மனிதனைப் புறக்கணிக்கும் இயல்பு தெய்வத்திடத்து இல்லை. 'இறைவா என்னைப் புறக்கணித்து விடாதே. அருள் சுரந்து என்னைக் காப்பாற்றுவாயாக' என்று வணங்குபவரிடத்துக் கடவுளுக்குக் கிருபை சுரந்து விடுகிறது. வேண்டி விண்ணப்பிப்பவனுக்குக் கடவுள் எளிதில் அகப்பட்டு விடுகிருர். அடியவர்களை ஆட்கொள்ளுதலிலேயே அவர் கருத்துமிக வைத்திருக்கிருர்.

இக்கோட்பாட்டைக் கைவிடாதே யென்ற அன்பருக்கு அன்பாய்க் கருத்தூடு உணர்த்து குருவே என்று தாயுமானவர் போற்றுகிறார். வணங்குகிற சாதகனுடைய உள்ளத்திலிருந்துகொண்டே அவனுக்குக் குரு அனுக்கிரகம் செய்கிறார் என்பது இதன் கருத்து. இக்கருத்துக்கள் யாவும் மேற்கண்ட பாடலின்கண் அடங்கியுள்ளன.

கருணாகரக் கடவுள் - 6

பண்ணே னுனக்கான பூஜையொரு வடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலருடு நீயே யிருத்திஅப்
பனிமல ரெடுக்கமனமும்
நண்ணேன் அலாமலிரு கைதான் குவிக்களனில்
நாணும்என் உளம்நிற்றிநீ
நான்கும் பிடும்போ தரைக்கும் பிடாதலால்
நான்பூஜை செய்யன் முறையோ
விண்ணேவி ணுதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே அவித்தின்முளையே
கண்ணே கருத்தேஎன் எண்ணே எழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

பூஜை என்னும் சொல்லுக்குப் பொருள்கள் பல உள. போற்றுதல், பாராட்டுதல், வணங்குதல், வேண்டுதல், ஏத்துதல், ஆராதித்தல், சொந்தமாக்குதல், உரிமை கொண்டாடுதல் என்றெல்லாம் இச்சொல் பொருள்படுகிறது. பூஜை பண்ணுதல் என்னும் நிகழ்ச்சி இயற்கையில் ஓயாது நிகழ்ந்துகொண்டிருக்கிறது. ஜடப்பொருள்கள் எனக் கருதப்படுபவைகளிடத்தும் ஓரளவில் இச்செயல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கல் என்பது ஒரு ஜடப்பொருள். மாநிலம் என்பது மற்றொரு ஜடப்பொருள். கல் ஒன்று

மாநிலத்தைச் சார்ந்திருக்கிறது. அக்கல்லை மேலே விட்டெறிந்தால் அதற்குச் சொந்தமாயிருக்கும் மாநிலத்தினிடத்து அது கவர்ந்து இழுக்கப்படுகிறது. அச்செயலை ஈர்ப்புச்சக்தி என்றும், ஆகர்ஷண சக்தி என்றும் நூலோர் பகர்வர். அப்படிப் பொருள்கள் ஒன்றோடொன்று இணக்கம் கொள்வது ஒருவகைப் பூஜையாகும். நிலைத்திணைகளாயிருக்கும் மரம் செடி கொடிகள் மண்ணைப்பற்றிப் பிடித்துக் கொண்டு அம்மண்ணினின்று சாரத்தைப்பெற்று உயிர்வாழ்கின்றன. வெயில், காற்று, நீர் முதலிய பூதங்களோடு தொடர்வு கொண்டு வளர்ச்சியடைகின்றன. அப்படி நிலைத்திணைகள் செய்கின்ற செயலும் பூஜையாகிறது. விலங்கு இனங்கள், புள்ளினங்கள் வெவ்வேறு விதங்களில் உறவாடி வாழ்ந்திருக்கின்றன. அச்செயலும் பூஜையே. மனிதன் உணவு அருந்தியாய்விட்டதா என்னும் கேள்வியை மற்றொரு விதத்தில் பூஜைபண்ணியாய்விட்டதா என்று கேட்பதுண்டு. தனக்குப் புறம்பாயிருக்கும் உணவை ஏற்றுத் தன்மயம் ஆக்குதல் பூஜையாகிறது. ஓர் அரசனையோ, அல்லது அரசாங்க வர்க்கத்தையோ முறையாகப் பாராட்டுதல் ஒருவித பூஜையாகிறது. அதற்கேற்ற நன்மை குடிமக்களுக்கு உண்டாகிறது. புதியதாகப் பிறந்துள்ள குழந்தை யொன்று பெற்றோர்களால் பேணப்படுகிறது. அக் குழந்தையைக் குறித்து 'ஆராரோ' என்னும் சொல் தொடரில் துவக்கி தொட்டில் பாட்டு பாடுகின்றனர். முன் ஜன்மத்தில் நீ யாராக இருந்தாயோ நாங்கள் அறியோம் என்னும் பொருள் அப்பாட்டில் அடங்கியிருக்கிறது. முன் ஜன்மத்தில் வேற்றானயிருந்த உயிர் இந்த ஜன்மத்தில் போற்றுதல் மூலம் பெற்றோர்க்கு உற்றான் ஆய்விடுகிறது. அப்படிக் குழந்தையைக் கொண்டாடுவதும் பூஜையேயாம்.

பாராட்டப்பட்ட குழந்தைக்கு வயது வரும்பொழுது தக்க தருணத்தில் அவன் பெற்ரோரைப் பேணுகிருன். அதுவும் பூஜையாகிறது. இப்படி வாழ்க்கைமுறை முழுதும் பூஜை மயமாய் இருக்கிறது. இதற்கெல்லாம் மேலாக மாந்தர் தங்களைப் படைத்துள்ள தெய்வத்தோடு தக்கமுறையில் தொடர்வு வைக்குங்கால் அச்செயலானது பூஜையென்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. பூஜிக்குமளவு பரம்பொருள் உயிர்களுக்குச் சொந்தமாகின்ருர். பரமனை பூஜிப்பதே மானுட வாழ்க்கையின் முடிவான பயன் எனலாம். ஆனல் அப்பரமனை உள்ளபடி அறிந்துகொள்கின்றபொழுது அவரைப் பூஜிப்பது எளிதன்று என்பது வெளியாகும். குறைபாடான பூஜையைக் குறித்து, 'கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தல்' எனப் பகர்வார்கள். படைக்கிறபொருளும் நமக்குச் சொந்தமல்ல; படைக்கப் பெறுகிற தெய்வமும் நமக்குச் சொந்தமல்லாது எங்கேயோ இருப்பவர் என்பது அதன் கருத்து. ஆனல் தெய்வத்தையும் உலகிலுள்ள பொருள்கள் யாவையும் உள்ளபடி அறிந்து கொள்ளுமளவு பரமனுக்கு முறையாக பூஜைபண்ணுவது மனிதனுக்கு முடியாத காரியம் ஆகும். இக்கோட்பாட்டை, **பண்ணேன் உனக்கான பூஜை** என்று தாயுமானவர் பகர்கிருர்.

பசுவின் பால் இரத்த சொரூபமாக பசுவின் உடலெங்கும் பரவியிருக்கிறது. ஆனல் அது பாலாக மாறும்பொழுது அதன் மடிக்கு வந்துவிடுகிறது. பின்பு பாலைப் பெறுதற்குப் பசுவின் மடியைப் பிடித்துக் கறந்தாகவேண்டும். கடவுள் அண்டமெங்கும் நிறைபொருள். ஆயினும் அவரை வழுத்த விரும்புபவன் அவரைச் சிறப்பாக ஒருவடிவத்திலே வீற்றிருப்பதாகப் பாவிக்கிருன். வடிவம் இல்லாதவருக்கு ஒரு வடி

வத்தைக் கற்பித்துவிட்டால் பின்பு அவரை வணங்குவது சுலபமாகிறது. வடிவம் ஒன்றில் திகழும் தெய்வத்துக்கு பூக்கள் தூவியும், மாலை சாத்தியும் சேவிக்கிறோம். பின்பு அப்பூக்களை முறையாக ஆராய்ச்சி செய்து பார்க்குங்கால் அவைகளினுள்ளே தெய்வத்தின் சாந்நித்தியம் ஒரு விக்கிர கத்திலிருக்கும் சாந்நித்தியத்தைவிடப் பன்மடங்கு சிறப் பாக மிளிர்கிறது. பெரிய பொருளுக்கு சிறிய பொருளைப் படைத்து வணங்குவது முறை. ஆனால் சிறிய பொருளுக்குப் பெரிய பொருளைப்படைத்து வணங்குவது முறையல்ல. இக் கூற்றுக்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். எரு இட்டுச் செடியைப் பேணுகிறோம். ஆனால் வளர்கிற நல்ல செடிகளைப் பிடுங்கி எரு ஆக்குவது முறையன்று. உணவு படைத்து உயிர்களைப் பேணுகிறோம். ஆனால் பெருநிலைக்கு வந்துள்ள உயிர்களை உணவுப் பொருள்களாகப் பலி கொடுப் பது முறையன்று. ஞானநெறியிலே மேல்நிலைக்கு வந்துள்ள தாயுமான சுவாமிகள் இறைவனுடைய சாந்நித்தியத்தை விக்கிரகம் ஒன்றில் எவ்வளவு தெளிவாகக் கண்டாரோ அவ்வளவு தெளிவாக மலர்களிடத்திலும் தெய்வத்தின் சாந்நித்தியத்தைக் கண்டார். அப்படி அவர் கண்டறிந்த அனுபவத்தை, ஒருவடிவிலே பாவித்து இறைஞ்ச ஆங்கே பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி என்று இயம்புகிறார். பாவித்தல் என்னும் சொல்லுக்கு இறைவனுடைய சாந்நித் தியத்தை உள்ளூற உணர்தல் என்னும் அர்த்தம் வருகிறது. ஒரு மூர்த்தி அல்லது வடிவத்திடத்திலும் ஆங்கு சாத்துதற் கென்று வைக்கப்பட்டிருக்கும் மலரினிடத்தும் ஈசனுடைய சாந்நித்தியம் சமனாக அமைந்திருக்குமாகில் எதைக் கொண்டு எதை வணங்குதல் என்னும் திகைப்பு ஏற்பட்டு விடுகிறது. அத்தகைய நெருக்கடி தமக்கு வந்துவிட்டது என்றுதான் அவர் விளம்புகிறார்.

கடவுளை வழுத்துதற்கு மலர் கொய்தாகவேண்டும். மலர் கொய்யப் போகும்பொழுது மலர் வடிவத்தில் மெய்ப் பொருளே மிளிர்கிறார் என்பது வெளியாகிறது. குழந்தை ஒன்றை மகிழ்விப்பதற்கு விளையாட்டுக் கருவி ஏதேனும் ஒன்றைக் கையில் கொடுக்கிறோம். விளையாட்டுக் கருவிக் குப் பதிலாக குழந்தையின் விரல் ஒன்றை வெட்டியெடுத்து 'இதை வைத்து விளையாடு' என்று சொல்லத் துணியோம். ஏனென்றால் குழந்தையும் அதன் விரலும் ஒரே வடிவமாம். விரலை வெட்டுவதால் குழந்தையைத் துன்புறுத்துவதாகும். அது பொருந்தாது. மலரினூடு தெய்வ சாந்நித்தியத்தைக் காணும் ஆத்ம சாதகன் ஒருவன் மலர் கொய்து அதைத் தூவி தெய்வத்தை வழுத்த ஒருப்படமாட்டான். அக் கருத்தை, அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன் என்று தாயுமானவர் வெளியிடுகிறார். ஒத்துக்கொள்ளேன் என நண்ணேன் என்னும் சொல் பொருள்படுகிறது.

வழிபாட்டுக்கு மலர் முதலியவைகளின் உதவியின்றி ஆத்மசாதகன் வெறுமனே கைகுவித்துக் கடவுளை வணங் கினாலென்ன என்னும் கேள்வி எழலாம். மற்றவர்களையோ, தெய்வத்தையோ கைகுவித்து வணங்க இன்னும் கற்றுக் கொள்ளாத சிறார் இருக்கின்றனர். அத்தகையவர்களுக்கு முதியோர்கள் பாடம் கற்பிப்பதுண்டு. குழந்தைகளின் இரு கரங்களையும் பற்றிப்பிடித்து அவைகளைக் கூப்பவைத்து 'இப்படி வணங்கு' என்று அவர்கள் புகட்டுவார்கள். அப் படிக் குழந்தைகள் வணங்கும் பொழுது அந்த வணக்கத் துக்கு அவர்களே முற்றிலும் பொறுப்பாளிகள் ஆகார். முதியோர்கள் இயக்குவித்த பிரகாரம் அவர்கள் இயங்கி னார்கள். அம்முறையில் உயிர்களனைத்தையும் இறைவன் ஆட்டிவைக்கிறானென்பது எல்லார்க்கும் தெரியாது. தங்கள்

கிருத்தியங்களுக்குத் தாங்களே கர்த்தாக்கள் என்று உணருகிறவர்கள் கைகூப்பி வணங்குதலில் அர்த்தமுண்டு. உள்ளத்தினுள்ளே உயிர்க்குயிராய் அறிவுக்கறிவாய் இறைவன் வீற்றிருந்துகொண்டு உயிர்களை ஆட்டுவிக்கிறார் என்னும் உண்மையை அறிந்து கொள்ளும் நிலை ஒன்று ஆத்ம சாதகனுக்கு வருகிறது. அப்படி அதை அவன் அறிந்தான பிறகு செயல்களனைத்துக்கும் பரம்பொருளே கர்த்தா என்பது நன்கு உணரப்படுகிறது. தெய்வத்தை நான் கும்பிட்டேன் என்று இயம்புதற்கு மனதே மறுதலிக்கிறது. அந்த நெருக்கடி தாயுமான சுவாமிகளுக்கு வந்துவிட்டது. அலாமல் இரு கைதான் குவிக்க எனில் நாணும் என் உளம் நிற்றி நீ என்று அவர் தெரிவித்துக் கொள்கிறார். உள்ளத்தினுள்ளே இருந்துகொண்டு ஆட்டுவிக்கிற உன்னைப் புறத்திலிருப்பதாக நினைத்துப்பின் உன் செயலை என்னுடைய செயலாக ஏற்றுக்கொண்டு, உன்னைப் புறத்தில் வைத்துக் கைகூப்பி வணங்குகிறேன் என்று உணர்வது வெட்கத்துக்குரிய விஷயமாகும் என்பது இதன் கருத்து.

முதியோரால் இயக்குவிக்கப்பெற்று குழந்தை ஒன்று செய்கிற நமஸ்காரத்தில் ஒரு பகுதி அக்குழந்தைக்குரியதாகிறது. மற்றொரு பகுதி அதை நமஸ்காரம் செய்யும்படி ஏவிய முதியோர்க்குரியதாகிறது. அதே கோட்பாடு தெய்வ வழிபாட்டிலும் அமைந்திருக்கிறது. இறைவன் ஆட்டுவித்தபடி உயிர்களெல்லாம் ஆடுகின்றன என்னும் உண்மையை சுவானுபவத்திலே கண்டறிந்தவர்கள் தங்களை வெறும் கருவியாகக் கருதுகின்றனர். இறைவன் கையில் கருவியாக அமைந்திருப்பதே தங்களுக்குக் கிடைத்துள்ள பாக்கியம் என்று அவர்கள் உணர்கின்றனர். அந்த நிலையிலிருந்து கொண்டு ஆத்ம சாதகன் ஒருவன் கடவுளை வழுத்தினால்

அது எத்தகைய வழிபாடு ஆகிறது? இந்தக் கேள்விக்கு அண்ணல் விடையளிக்கிறார். நான் கும்பிடும் போதுஅரைக் கும்பிடு ஆதலால் நான் பூஜை செய்யல் முறையோ! பெயரளவில் உன்னை நான் வழுத்தியவனாகிறேன். உண்மையில் உன் அருளால் உன் பெருமை விளக்கப்பெறுகிறது. ஆதலால் உன்னை நான் வழுத்தியவன் என்கின்ற உரிமையும் எனக்கு இருக்கலாகாது. உன்னை வழுத்துதற்கான தனி வியக்தி எனக்கு இருக்கிறதென்று நான் எண்ணுவதும் முறையாகாது. யாவும் உன் மயம், யாவும் உன் செயல் என்னும் எண்ணத்தில் நான் நிலைத்திருந்திடுவேனாகில் அது போதுமானது.

யாவுமாயிருப்பவர் கடவுள். செயல்கள் யாவும் அவருக்கே உரியன. அத்தகைய பெரிய பொருளின் சொரூபம் தான் என்ன? அதற்கேற்ற அடைமொழிகள் பலவற்றை அண்ணல் எடுத்துக் கொள்கிறார். அவைகளையெல்லாம் முறையாக ஆராய்ந்து பார்ப்போம். விண்ணே என்று கடவுள் விளிக்கப்படுகிறார். ஆகாசமே என்பது இதன் பொருள். ஈண்டு ஆகாசம் என்று இயம்பப்பெறுவது வெறும் ஜட ஆகாசம் அல்ல; அது சித் ஆகாசம். சித் ஆகாசத்திற்கு சிதம்பரம் என்பது வேறு ஒரு பெயர். சிதாகாசம் அல்லது சிதம்பரத்தின் இரகசியத்தை ஆத்ம சாதகர்கள் அறிந்துகொள்ளுவது அவசியமாகிறது. இன்று நாம் கண்டுவரும் திரைப்படம் அல்லது சினிமாவானது உலக நடைமுறைக்கு நல்ல உபமானமாக அமைந்திருக்கிறது. கணக்கற்ற வியவகாரங்களை ஆங்குக் காண்கிறோம். அத்தனைவிதமான படக் காட்சிகளுக்கு ஆதாரமாயிருப்பது திரை. திரை தன்னளவில் வெள்ளையாயிருக்கிறது. வெண்மை நிறம் நிறத்தைக் கடந்த நிலைக்கும் பொருந்துகிறது. உறை

பனிக்கட்டி மலையின்மீது வெள்ளை வெளேரென்று மிளிர் கிறது. ஆனால் அது உருகி நீர் ஆகும்பொழுது நிறமற்ற தாய் விடுகிறது. வெள்ளை நிறமாயிருக்கும் சினிமாத் திரை யில் எல்லாவிதமான நிறங்களையும் ஆரோபிக்கலாம். ஆனால் திரை தன்னளவில் எந்த நிறத்திலும் தோய்வதில்லை. வெவ்வேறு நிறங்கள் உள்ளபடி தோன்றுதற்கு அது உதவிபுரிகிறது. அதேசெயலை சிதாகாசம் செய்து வரு கிறது. எண்ணிறந்த உயிர் வகைகள் எண்ணிறந்த உணர்ச்சி களுடனும், உடலங்களுடனும் இருந்துவருகின்றன. அத் தனை விதமான உணர்வுகளுக்கு மூல உணர்வாயிருப்பது சிதாகாசம். திரை இல்லாவிட்டால் எப்படிப் படக்காட்சி இல்லாது போய்விடுகிறதோ அப்படி சிதாகாசம் இல்லாது போய்விட்டால் பிரபஞ்சமும் தோற்றத்துக்கு வராது. ஆனால் சிதாகாசமோ மெய்ப்பொருள். என்றைக்கும் அது உள்ளபடி இருந்துகொண்டிருக்கிறது. அதன்மீது பிரபஞ் சம் என்கின்ற தோற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

விண்ணாதியாம் பூதமே என்று அடுத்தபடியாக அவர் இயம்புகிறார். ஈண்டு விண் என்பது ஜட ஆகாசத்தைக் குறிக்கிறது. ஆகாசம் முதலிய ஐம்பூதங்களாய் தோற்றத் திற்கு வந்திருப்பவரும் அப்பரம்பொருளே. ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி ஆகிய ஐம்பூதங்கள் ஈண்டு குறிப் பிடப்படுகின்றன. இவ்வைந்தும் மூலப் பிரகிருதியின் ஐந்து விதத் தோற்றங்களாம். தோற்றத்தளவில் இவைகள் ஐந்து ஆகின்றன. எனினும் உண்மையில் மூலப்பிரகிருதி என்னும் ஒரு பொருளாக இவை இருந்து வருகின்றன. இம்மூலப் பிரகிருதியோ சிதாகாசம் அல்லது பரம்பொருளுக்குப் புறம் பானது அல்ல. சேதனப் பொருளே, ஜடப்பொருளாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொள்கிறது. அது இயலுமா

என்னும் கேள்வி எழலாம். அது இயலுகிறது என்பதற்குச் சான்று இயற்கை முழுதிலும் இருக்கிறது. மானுட அமைப்பை ஆராய்ந்து பார்ப்போம். மனிதன் உணர்வு சொரூபம். உணர்வு என்பது சிதாகாசம் அல்லது சித்பொருள். உடல் முழுதிலும் உணர்வு இருக்கிறது. உடலில் நகம் முளைத்து வருகிறது. உரோமங்கள் முளைத்து வருகின்றன. நகத்திலும், உரோமத்திலும் உட்பகுதி உணர்வு மயமாயிருக்கிறது. வெளிப்பகுதி உணர்வு அற்றதாய்விடுகிறது. உணர்வுப் பொருள் உணர்வற்ற பொருளாக மாறி அமைவதை இங்ஙனம் மானுட உடலிலேயே காண்கிருேம். உணர்வற்றுப்போன பகுதியை உணர்வுப் பொருளுக்கு அந்நியமானது என்று சொல்லுவது தகாது. யாண்டும் சிதாகாசமே ஜட ஆகாசமாக மாறியமைகிறது. அந்த ஜட ஆகாசத்தினின்று ஏனைய நான்கு பூதங்களும் படிப்படியாகப் பரிணமித்து வருகின்றன. இதுதான் இயற்கையின் அமைப்பு.

நாதமே என்று அடுத்தபடியாக அப்பரமனை நோக்கி அவர் கூறுகிருர். நாதம் என்னும் சொல் ஓசை என்றும், ஒலி என்றும் பொருள்படுகிறது. ஜட ஆகாச தத்துவமாகப் பரம்பொருள் உருவெடுக்கின்றபொழுது அந்த ஜட ஆகாசத்தின் தன்மாத்திரையாக நாதம் தோற்றத்துக்கு வந்துவிடுகிறது. ஆகாசம் எல்லையில் அடங்காதது. ஆனல் அதை எல்லையில் அடக்கி வைப்பது போன்று நமக்கு நாம் பாவித்துக்கொள்கிருேம். பூமி என்பது ஓர் உருவம். சூரியன் என்பது மற்ருேர் உருவம். இந்த இரண்டு உருவங்களுக்கும் இடையிலுள்ள வெளியை ஆகாசம் என்கிருேம். வானம் என்றும் அந்த வெட்டவெளிக்குப் பெயர் கொடுத்திருக்கிருேம். ஆகாசத்திலுண்டாகிற நாதத்துக்கு வானெலி

என்பது வேறொரு பெயர். வானம் இருக்கும் வரையில் ஒலியும் அதன்கண் நிலைபெற்றிருக்கும். இப்படி ஓசை ஒலியாக இயங்கிக்கொண்டிருப்பவரும் இறைவனே. ஆதலால் தான் ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே என்று அவர் இயம்பப்படுகிறார். வானவெளியிலே எண்ணிறந்த கிரகங்கள் ஆங்காங்கு உருவெடுப்பதுபோன்று நாதம் அல்லது நாதப் பிரம்மத்தினின்று எண்ணிறந்த ஓசைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஜடப்பொருள்களிடத்தும் சேதனப் பொருள்களிடத்தும் ஓயாது நாதம் கிளம்பிக்கொண்டேயிருக்கிறது. அந்த நாதத்தில் ஒரு சிறு பகுதி நம் காதுக்கு எட்டுகிறது. பெரும்பகுதி நம் காதுக்கு எட்டாது போய்விடுகிறது. இயற்கையில் பறவைகளும், விலங்குகளும் ஓசையைக் கிளப்பிக்கொண்டிருக்கின்றன. ஓசையின் வேற்றுமையின் மூலம் உணர்வு வேற்றுமையையும் அவைகள் வெளிப்படுத்துகின்றன. பறவை ஒன்று இன்புற்றிருக்கிறபொழுது ஒரு விதமான ஓசையைக் கிளப்புகிறது. துன்புற்றிருக்கிறபொழுது இன்னொரு விதமான ஓசையைக் கிளப்புகிறது. இன்ப துன்பங்கள் யாவும் உணர்வின் வெவ்வேறு தோற்றங்கள். உணர்வு வேற்றுமைக்கு ஒப்ப ஓசை வேற்றுமையும் இயற்கையின்கண் அமைந்திருக்கிறது.

நாதம் மேல் நிலைக்கு வருகிறபொழுது அது மொழியாக வடிவெடுக்கிறது. கருத்துக்களை நன்றாகப் பாகுபடுத்துதற்கும், பாகுபடுத்தியவாறு மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்கும் மொழி உதவுகிறது. ஒலியின் தெளிவும், கருத்தின் தெளிவும் சேர்ந்து அமையும்பொழுது அது மொழி ஆகிறது. சொற்குற்றமோ, பொருள் குற்றமோ இருத்தலாகாது என்பது கோட்பாடு. சொல்லும், சொல்லின் பொருளும் இயற்கையின் நடைமுறைகளையெல்லாம் உள்ளவாறு தெரி

விக்குங்கால் அது வேதம் எனப்படுகிறது. எம்மொழியில் வேண்டுமானாலும் வேதம் அமையலாம். அப்படி அமைந்துள்ள வேதங்களுள் சம்ஸ்கிருதத்தில் அமைந்திருப்பவைகள் மற்ற வேதங்களையெல்லாம்விட உயர்நிலை பெறுகின்றன. சொல் சுத்தமே அதற்குக் காரணமாகும். ஒவ்வொரு பொருளுக்கும் மூலமாயுள்ள நாதத்தை அல்லது ஓசையை மூலத்திலுள்ளபடி சம்ஸ்கிருத மொழி காத்து வைத்திருக்கிறது. ஆதலால் வேதத்தை இயற்றுதற்கு அது முற்றிலும் பொருத்தமான மொழி ஆகிறது. இயற்கையின் நடைமுறைகளை உள்ளபடி விளக்குகின்ற நூல்களையெல்லாம் வேதம் என்று நவிலுவது பொருந்தும். கணக்கற்ற நூல்களாக மக்களுக்கிடையில் வந்திருக்கும் அறிவுக் களஞ்சியத்துக்கு மூலப்பொருளாயிருப்பது வாலறிவனாகிய கடவுள். ஆதலால் அவரை, வேதமே என்று தாயுமானவர் அழைக்கிறார்.

அதற்கடுத்தபடியாக தெய்வத்தை அவர் வேதாந்தமே என்று விளிக்கிறார். ஈண்டு வேதத்துக்கும் வேதாந்தத்துக்கும் இடையிலுள்ள பாகுபாட்டை அறிந்து கொள்வது அவசியமாகிறது. வேதத்தின் அந்தம் வேதாந்தம் என்னும் பெயர் பெறுகிறது. வேதத்தின் முடிவு என்பது அதன் பொருள். பிரபஞ்ச சொரூபமாக இருக்கிற ஞானங்களனைத்தும் வேதம் என அழைக்கப்படுகின்றன. ஐம்பொறிகளுக்கும் அறிவுக்கும் எட்டுவது வேதம். அப்படி எட்டுகிற அறிவு இயற்கையின் நடைமுறைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். அப்படியல்லாது இயற்கையின் நடைமுறைக்கு மாறுபடுகிற கூற்றோ, கொள்கையோ, கோட்பாடோ வேதமாகாது. இயற்கைக்கு அப்பாற்பட்டுள்ள பொருள் பரம்பொருள் எனப்படுகிறது. அப்பொருள் இயற்கைக்கு அப்பால் இருப்பதால் ஐம்பொறிகளும் மனிதனுடைய சிற்றறி

வும் அப்பொருளை எட்டமாட்டா. ஐம்பொறிகளை அடக்கி யாண்டு சிற்றறிவைத் தூயதாக்கினால் அது ஞானக்கண்ணாக மாறுகிறது. அத்தகைய ஞானக்கண்ணே பரம்பொருளைக் கிரகிக்கவல்லதாகிறது. அந்த ஞானக்கண்ணுக்கு வேதாந்தம் என்று பெயர். பரவித்தை என்றும் அதைப் பகர்வது உண்டு. ஆக, வேதமாக இருப்பவரும் கடவுளே; வேதாந்தமாக இருப்பவரும் கடவுளே.

அடுத்தபடியாகக் கடவுளை, மேதக்க கேள்வியே என்று தாயுமானவர் கூறுகிறார். மேன்மை பொருந்திய கேள்வியே என்பது அதன் கருத்து. முறையான வேதாந்த விசாரம் என்பது அதன் பொருள். 'கேள்வி முயல்' என்னும் கோட்பாட்டுக்கு ஒத்தது அது. வேதாந்த விசாரத்துக்குத் தகுதிவாய்ந்தவர்கள் யாரோ சிலரே யாவர். வெறும் வாய்ப்பேச்சால் செய்வது விசாரமாகாது. விசாரித்து அறிவதற்கேற்ற பெருநிலைக்கு ஆத்ம சாதகன் மேல்நோக்கிப் போய்விடவேண்டும். பலாப்பழம் ஒன்று கையில் கொடுக்கப்படுகிறது. அதில் முள்மயமாயிருக்கும் மேல்தோல் உண்ணத் தகுதியற்றது என்னும் முடிவுக்கு வருவது கேள்வியின் விளைவு. அம்முடிவுக்கு வந்தான பிறகு பலாப்பழத்தின் முள்மயமான மேல்தோலை யாரும் தின்பதில்லை. நரம்புமயமாயிருக்கும் உள் பகுதியும் உண்ணத் தகுதியற்றது என்னும் முடிவுக்கு வருங்கால் அந்த நரம்புப் பகுதியும் புறக்கணிக்கப்படுகிறது. சுளையின் சதைப் பற்று ஒன்றே உண்ணத்தகுந்தது என்று விசாரித்து அறிந்துகொண்ட பிறகு அதைமட்டும் உண்பது நல்ல கேள்வியின் விளைவு. அதனுள்ளிருக்கும் கொட்டையைச் சமைத்துண்பது முறை என்னும் முடிவுக்கு வருகிறவன் அப்படி அதைச் சமைத்து உண்பானாகில் அவன் சரியாகக்

கேட்டவன் ஆகிறான். அதேமுறையில் வேதாந்த விசாரத்தை முறையாகச் செய்கிறவன் மேதக்க கேள்வியில் ஈடுபட்டவனாகிறான். இந்த மேதக்க கேள்வியே மனிதனைப் பரம்பொருளிடத்துக் கொண்டு சேர்த்துவிடுமாதலால் அக் கேள்வியே பரம்பொருள் சொரூபம் எனப்பகரப்படுகிறது. ஐம்பொறிகளுக்கு வசப்பட்டிருப்பவன் பரத்தையறியத் தகுதியற்றவன் என்னும் முடிவு மேதக்க கேள்வியினின்று வருகிறது. முறையாக அக்கேள்வியைக் கேட்டறிகிறவன் பிறகு அவைகளுக்கு அடிமையாவதில்லை. பொறிவாயிலைந்தையும் அவித்து விட்டதற்கு ஒப்பாக அவன் அவைகளை அடக்கிவைத்துப் பழகுகிறான். மனதுக்கும் மொழிக்கும் எட்டாதது பரம்பொருள் என்னும் முடிவுக்கு வருவது மேதக்க கேள்வியாகும். அம்முடிவுக்கு வந்த சாதகன் பின்பு மொழியை வீணே பரம்பொருளை அறிதற்பொருட்டுப் பயன்படுத்துவதில்லை. மனதை ஒடுக்குதலில் அவன் முந்துகிறான். முறையாக மனதையும் மொழியையும் அடக்கிப் பழகுகிறவனே மேதக்க கேள்விகேட்டுத் தெரிந்துகொண்டவனாகிறான். நல்ல நெறியில் செல்லுகிறவன் குறியை நிச்சயமாகவே அடைந்து விடுகிறான். ஈண்டு நெறி குறிக்கு நிகராகிறது. அக்காரணத்தை முன்னிட்டு நன்னெறியையே மேலாம் குறி என மொழியலாம். ஆதலால்தான் பரம்பொருளை மேதக்க கேள்வியே என்று அண்ணல் அழைக்கிறார்.

திருத்தியமைக்கப் பெற்றிருக்கிற பூமிக்குள் நல்ல வித்து ஒன்றைத் தக்க பருவத்தில் போட்டுவிடுவது சாகுபடி செய்கிறவன் பண்ணும் வேளாண்மையாகும். அதன் பயனைப் பின்பு அவன் காண்பது திண்ணம். வேதாந்த விசாரம் செய்வது அந்த வேளாண்மைக்கு ஒப்பானது. முறையாகக்

கேட்கும் வாய்ப்பு எல்லார்க்கும் அமைவதில்லை. பண்பட்ட நல்ல நிலத்தைப் படைத்திருப்பவனே சீரிய வேளாண்மையைச் செய்யமுடியும். யாரொருவன் முறையான வேதாந்த விசாரம் அல்லது மேதக்க கேள்வியைக் கேட்க வல்லவனாகிறானோ அவன் பாரமார்த்திகத்துக்குரிய நல்ல பூமியைப் படைத்திருப்பவனாகிறான். முறையான கேள்வியே சிறந்த பூமியும் ஆகிறது; அந்த பூமிக்குள்ளே போட்டு வைத்திருக்கிற வித்தும் ஆகிறது. போட்டுவைத்துள்ள வித்து பலன் தருவது திண்ணம். இச்சீரிய கருத்தை, கேள்வியாம் பூமிக்குள் வித்தே என்று தாயுமானவர் சொல்லுகிறார். இந்த வித்துக்கு ஒப்பானவர் கடவுள் என்பது அதன் கருத்து.

அடுத்தபடியாக, அவ்வித்தின் முளையே என்னும் அடைமொழி கொடுத்துத் தாயுமானவர் பரமனை விளிக்கிறார். முறையாக விதை விதைத்தான பிறகு பருவமழை பெய்ய ஆரம்பிக்கிறது. நாட்கள் சில கடந்து செல்கின்றன. பூமியினுள் விதைக்கப்பட்ட வித்து அதைப் பிளந்து கொண்டு முளையாக மேல்நோக்கி வருகிறது. அப்படி அது மேல் நோக்கி வரும்பொழுது அதனிடத்து உயிர்த்தத்துவம் ததும்புகிறது. வித்தாக இருந்தபொழுது அது ஜடநிலையில் கிடந்தது. முளையாக வரும்பொழுது சேதனம் அல்லது உணர்வின் அறிகுறி அதனிடத்து ஒளிர்கிறது. பரம்பொருள் எது என்னும் கேள்வி கேட்பவன் தனது விசாரணைக்கேற்றபடி பரம்பொருள் சிந்தனையிலேயே இருக்கிறான். தனது சிந்தனைக் கேற்றபடி சாதகனுடைய சொரூபம் மாறியமைகிறது. ஆத்ம சொரூபத்தையே சிந்தித்துத் தானே ஆத்ம சொரூபமாகிறான். வீட்டுக்குள்ளே வைக்கப்பட்டிருக்கும் விளக்கின் வெளிச்சமானது ஜன்னல்களிலும், வாயில்

களிலும் வெளியே தோன்றுகிறது. சுடர் விளக்கு வீட்டினுள்ளே இருக்குமாகில் அதினின்று வெளியே வரும் வெளிச்சமும் பிரகாசம் மிக உடையதாக இருக்கும். உள்ளத்தினுள் ஆத்மப் பிரகாசத்தையும், ஆத்மானந்தத்தையும் சிந்தித்துக் கொண்டிருப்பவனுக்குப் பொறிகள் வாயிலாகவும் அவ் அருள் ஒளி வெளியாகும். விதையானது செடியாக முளைக்கிற பொழுது அதன் உள்ளிருக்கும் இயல்பு வெளியாவது போன்று பாரமார்த்திகப் பெரும்பொருளை மனதினுள் வைத்திருப்பவன்பால் அப்பெரியபொருளின் எழில் வியாபகமாகும்.

அடுத்தபடியாக, கண்ணே என்று அப்பரமனை அண்ணல் அழைக்கிறார். இந்திரியங்களுள் ஆத்ம சொரூபத்தை நன்கு விளக்க வல்லது கண். உள்ளிருக்கும் ஆத்மஜோதிக்குப் புறத்திலிருக்கும் கண்ணே நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. கண் பார்வையில் மனிதனுக்கு மனிதன் வித்தியாசமிருக்கிறது. விடும் சுடரில் விளக்குக்கு விளக்கு வித்தியாசம் காட்டுவது போன்றது அது. சீலமும் நல்வாழ்க்கையும் உடைத்திருப்பவனுடைய கண்களினின்று உள் ஒளி வெளியே தோன்றிக்கொண்டிருக்கும். கண்களின் மூலமே புருஷனுடைய பொலிவு புறத்தில் வருகிறது. எனவே பரமனைக் கண்ணே என்று அழைப்பது முற்றிலும் பொருந்தும்.

பின்பு கருத்தே என்று அதே பரமனைத் தாயுமானவர் கூப்பிடுகிறார். வெளிக்குத் தென்படுவது கண் என்றால் வெளிக்குத் தென்படாதிருப்பது கருத்து. வீட்டின் வாயில்களையெல்லாம் அடைத்து வைத்துவிட்டால் காற்று முதலியன வீட்டுக்குள் புகமாட்டா. எந்த ஆத்ம சாதகனுடைய உள்ளம் என்னும் பெருங்கோயில் ஆசை என்னும்

காற்றடிக்கப்படாது நன்கு மூடிவைக்கப்பட்டிருக்கிறதோ அது தெளிவு மிகப்பெறுகிறது. உள்ளத்தில் தெளிவு உண்டாகுமளவு கருத்தும் மிகத் தெளிந்ததாகிறது. அசையாதிருக்கும் தெளிந்த நீரில் அடிப்பாகம் நன்கு தென்படுவது போன்று உள்ளம் தெளிந்திருக்கும் ஆத்ம சாதகனுக்கு ஆத்ம சொரூபத்தின் உணர்வு என்னும் கருத்து தெளிவு மிக அடையப்பெறுகிறது. உள்ளத் தெளிவுக்கே பிரக்ஞை என்பது மற்றொரு பெயர். பிரக்ஞை அல்லது பிரக்ஞானம் ஓங்கப்பெறுவதே வாழ்க்கையின் குறிக்கோள். 'பிரக்ஞானம் பிரம்மம்' என்பது மஹாவாக்கியம். பிரக்ஞையே மெய்ப்பொருள் என்பது அதன் கருத்து. பிரக்ஞையின் நிஜ சொரூபம் யாருடைய உள்ளத்தில் உறுதியாக ஒளிர்ந்து கொண்டிருக்கிறதோ அவன் குறியை எட்டியவனாகிறான். தெளிந்த கண்ணாடியில் சூரிய வெளிச்சம் உள்ளபடி பாய்ந்து வருவதுபோன்று, தெளிந்த கருத்து அல்லது தெளிந்த சித்தத்தையுடையவனிடத்து ஆத்மப் பிரகாசம் உள்ளபடி ஒளிர்கிறது. எனவே மெய்ப்பொருளைக் கருத்தே என்று பகர்வது முற்றிலும் பொருந்தும்.

என் எண்ணே என்று மேலும் அம்மெய்ப்பொருளைச் சுட்டி அண்ணல் கூப்பிடுகிறார். எண் என்பதற்குப் பொருத்தமாக ஈண்டு இரண்டு விளக்கங்கள் கொடுக்கலாம். முறையாக எண்ணுதல் அல்லது முறையாக தர்க்க சாஸ்திரத்தில் பிரவேசிப்பது என்பது ஒரு பொருள். நியாயம் அல்லது தர்க்க சாஸ்திரமே மெய்ப்பொருளை எட்டுதற்கு ஒரு சிறந்த கருவியாயிருப்பதால் ஆறு தர்சனங்களுள் நியாயம் என்னும் தர்சனம் இடம்பெற்றிருக்கிறது. முறையாக எண்ணிப் பார்ப்பவருக்கு மெய்ப்பொருள் எளிதில் கிட்டிவிடுகிறது. எண் என்னும் சொல் கணிதத்தையும் குறிப்

பிடும். தர்க்க சாஸ்திரத்திலும் சிறந்தது கணித சாஸ்திரம். தர்க்கத்தில் நியாயமான பேச்சுப்போன்று தென்படுவ தெல்லாம் பல தடவைகளில் உண்மையல்லாதும் போய் விடலாம். சூரியனும் சந்திரனும் தட்டையாயிருக்கின்றன என்று வாதிக்கலாம். அப்பேச்சு உண்மைபோன்று புலப் படுகிறது. ஆனால் சூரியனும் சந்திரனும் தட்டையானவைக ளல்ல. உண்மையில் அவைகள் உருண்டையானவைகள். கணித சாஸ்திரத்தை முறையாகக் கையாளுமிடத்துநேரான விடை ஒன்றே வருகிறது. ஆதலால்தான் உண்மையை அறிதற்குத் தர்க்கத்திலும் மேலானது கணித சாஸ்திரம். கணித சாஸ்திரத்தில் மேல்நோக்கிப் போகிறவர்களெல்லாம் தத்துவ விசாரம் செய்ய வல்லவராகின்றனர். முறையான தத்துவ விசாரம் மெய்ப்பொருளிடத்து மாணுக்கனைக் கொண்டு சேர்த்துவிடும். அண்டங்களின் நடைமுறைகளை உள்ளபடி விளக்கவல்லது கணித சாஸ்திரம். அண்டங் களின் நடைமுறைகளைத் தெரிந்துகொள்வது அண்டநாயக னுடைய அருஞ்செயலை அறிந்துகொள்ளுவதற்கு ஒப்பா கிறது. அவருடைய அருஞ்செயலிலிருந்தே பிறகு அவ ருடைய அருமையும் சாதகனுக்கு விளங்கிவிடுகிறது. ஆத லால் என் எண்ணே என்று இயம்புதலின் மூலம் மெய்ப் பொருளை அறிந்துகொள்ளுதற்கான எண் மயமாயுள்ள நல் லறிவையே அண்ணல் சுட்டிக்காட்டுகிறார்.

எழுத்தே என்று மேலும் அப்பெரிய பொருளைக் குறித்து அவர் இயம்புகிறார். ‘எண்ணும் எழுத்தும் கண் ணெனத்தகும்’ என்பது கோட்பாடு. ஈண்டுச் சொரிந்துள்ள அடைமொழிகளுக்கிடையிலே கண், எண், எழுத்து ஆகிய மூன்றும் பரமனையே சுட்டிக்காட்டும் கருவிகளாய் அமைந் திருக்கின்றன. இலக்கியத்துக்கு எழுத்து என்பது மற்

ஒரு பெயர். இலக்கியங்களுள் சிறந்தவை பரமாத்ம சொரூபத்தை விளக்கும் இலக்கியங்களாம். அத்தகைய இலக்கியங்கள் பரமாத்மாவின் சாந்நித்தியத்துக்கே ஆத்ம சாதகனை அழைத்துவந்து சேர்த்துவிடும். ஆன்றோர்கள் ஏற்கனவே இயற்றியுள்ள அத்தகைய எழுத்துக்களைச் சிரத்தையுடன் பின்பற்றுவது பரமனையடைவதற்கு உற்ற உபாயமாகிறது. பரமனை அடைந்தான பிறகு அந்த நிறை ஞானியின் வாயினின்றுவரும் சொற்களையே எழுத்து என்று இயம்பலாம். ஆப்தவாக்கியம் எனவும் அது பொருள் படும். மெய்ப்பொருள் விளக்கம் அல்லாது வேறு எக்கூற்றும் அந்த எழுத்தில் அமைந்திராது. எனவே இறைவனை, எழுத்தே என்று இயம்புவதும் பொருந்தும்.

கதிக்கான மோன வடிவே என்று இறுதியாக அப்பரமனைக் குறித்துத் தாயுமானவர் இயம்புகிறார். நாதமே என்று துவக்கியவர் மோன வடிவே என்று முடித்துவிடுகிறார். வாழ்வு என்னும் பயணத்தின் துவக்க நிலையிலிருப்பது நாதம்; அதன் முடிந்த நிலை மோன வடிவு. உணவு உண்கிறவர்கள் ஆரம்பதசையில் ஓலம் மிக இடுகின்றனர். வயிறு நிறையுமளவு ஓலம் குறைகிறது. புசித்தல் என்னும் செயல் முற்றுப்பெற்றதும் ஓலமெல்லாம் அடங்கிவிடுகிறது. நீர்க்குடம் ஒன்றில் நீரை மொள்ளும்பொழுது அது 'பக் பக்' என்று ஓலமிடுகிறது. அது நிறைகுடம் ஆனதும் அந்த சப்தம் அடங்கிவிடுகிறது. பிரபஞ்சத்தின் இயக்கம் நாத வடிவானது. உயிர் வகைகளின் முன்னேற்றம் ஓசை, ஒலி வடிவானது. மனிதனுடைய முன்னேற்றம் மொழி வடிவானது. மொழியின் சீரிய நிலை சிறந்த சாஸ்திர வகைகள். முறையான சாஸ்திர ஆராய்ச்சி பரம்பொருள் என்னும் குறியின்கண் சேர்த்துவிடுகிறது. பரம்பொருளோ சலன

மற்ற நிறைபொருளாதலால் அதையே மோன நிலை என்கிறோம். பரத்தை அடைகிறவன் தானே பரம்பொருள் சொரூபமாக மோனத்தில் நின்றுவிடுகிறான். புருஷன் பிரகிருதி என்கின்ற இரண்டு தத்துவங்கள் இருக்கின்றன. பிரகிருதியை இயற்கை என்கிறோம். எது இயங்குகிறதோ அது இயற்கை. பின்பு இயங்குவது ஓசையைக் கிளப்புகிறது. ஆதலால் பிரகிருதி முழுதும் ஓசை மயம். அதை முன்னிட்டே நாதப்பிரம்மம் என்று பிரகிருதியைப் பகர்கிறோம். பிரகிருதியினுள் கட்டுண்டு கிடப்பவன் ஜீவன். தன்னைக் கட்டிப் பிடித்திருக்கும் பிரகிருதியை முறையாகப் பயன்படுத்துபவன் நல்ல ஆத்ம சாதகன் ஆகிறான். பிரகிருதியை நன்கு பயன்படுத்தும் முறைகளில் நாதத்தை நன்கு பயன்படுத்துவது ஒரு பகுதியாகிறது. நாதத்தை நன்கு பயன்படுத்துபவன் நாத அதீதத்துக்குப் போகிறான். நாதத்துக்கு அப்பாலுள்ள நிலையே மோனநிலை ஆகிறது. அந்த மோனநிலையே முடிவான நிலை ஆகிறது. இக்கருத்துக்கள் யாவும் அடங்கியுள்ள பாடல் இது.

கருணாகரக் கடவுள் - 7

சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றுமெனலால்
சகமீ திருந்தாலும் மரணமுண் டென்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை
சிந்தையறி யார்க்கீது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்
திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யரலரோ
இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுளர்
இருக்காதி வேதமுனிவர்
எண்ணறிய கணநாதர் நவநாத சித்தர்கள்
இரவிமதி யாதியோர்கள்
கந்தருவர் கின்னரர்கள் மற்றையர்கள் யாவருங்
கைகுவித் திடுதெய்வமே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

தோன்றியுள்ள இப்பிரபஞ்சத்துக்கு வேதம் என்று பெயர். பிரபஞ்சம் என்றைக்கும் அழிந்து போகக்கூடிய தல்ல. அது சர்வகாலமும் தோற்றத்துக்கு வரவும், மறைந் திருக்கவும் கூடியது. சிலந்திப் பூச்சியின் உடலிலிருந்து நூல் வருவதுபோன்று பிரம்மதேவன் என்னும் தெய்வத் திடத்திருந்து இயற்கை தோற்றத்துக்கு வந்துள்ளது. இந்த இயற்கை தோன்றி மறைகிறதெனினும் இது அழிவற்றது. ஆக, வேதம் அழிவற்றது என்னும் கோட்பாட்டை இயற்கை அழிவற்றது எனப் பொருள்படுத்த வேண்டும். இயற்கை

யின் நடைமுறை என்றைக்காவது பொய்யாகப் போய்விடுவது கிடையாது. வேதம் பொய்போகாது என்பதன் கருத்தும் இதுவேயாம். இயற்கையின் நடைமுறையை உள்ளபடி அறிந்துகொள்ளுகிறவர்கள் எல்லோரும் வேதத்தை அறிந்தவர் ஆகின்றனர். இவ்வியற்கையின் நடைமுறையைப் பற்றிய ஒரு கூற்றை ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம்.

உயிர் வகைகள் எல்லாம் தத்தம் எண்ணத்துக்கும், ஆழ்ந்த இச்சைக்கும் ஏற்ப உருமாறி அமைகின்றன. சிறிது நேரத்துக்கொரு நிறம் மாறி அமையும் ஓந்தியைச் சான்றாக எடுத்துக்கொள்வோம். அதன் நிறம் மாறி அமைவதற்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு. அது பசியை உணருகிறபொழுது ஒரு நிறம் எடுக்கிறது. புசித்துத் திருப்தியடைந்திருக்கிறபொழுது இன்னொரு நிறம் எடுக்கிறது. வாடியிருக்கும்பொழுது ஒரு நிறம் அதற்கு வருகிறது. மகிழ்வுற்றிருக்கும் பொழுது மற்றொரு நிறம் வருகிறது. அதன் உள்ளுணர்வே புறத்தில் அது பெறும் நிறவேற்றுமைக்குக் காரணமாகிறது. உயிர் வகைகள் அப்படி என்ன மாறுதலை நாடி அவாவுற்றிருக்கின்றனவோ அந்த மாறுதலை நாளடைவில் பெற்றுவிடுகின்றன. எனவே அவரவர் அடையும் மேன்மைக்கும், கீழ்மைக்கும் அவரவர் படைத்திருக்கும் உள்ளக் கிடக்கையே மூலகாரணமாகிறது. இது வாழ்க்கையைப் பற்றிய ஓர் அடிப்படைத் தத்துவமாகிறது. ஒவ்வோர் உயிரும் அதனதன் எண்ணத்துக்கும் இச்சைக்கும் ஏற்ப உருமாறி அமைந்து வருகிறது. மேன்மையடைய வேண்டும் என்னும் உறுதியான எண்ணமும், இயக்கமும் ஒரு மனிதனுக்கு இருக்குமாகில் அவன் மேன்மையுறுவது திண்ணம். அவனுடையும் கீழ்மைக்கும் அவனே மூலகாரணமாகிறான்.

தான் தேடிக்கொள்ளாது எத்தகைய இன்பமோ துன்பமோ யாருக்கும் வந்தமைவதில்லை. வேறொரு பாங்கில் இக் கோட்பாட்டைப் பகருமிடத்து அவரவர் அவரவர்க்கே சிருஷ்டிகர்த்தாக்களாகின்றனர். வாழ்க்கையைப்பற்றிய இவ்வுண்மையை வேதம் பகர்ந்திருக்கிறது என்கிறோம். இயற்கையின் நடைமுறையை உள்ளபடி எடுத்து விளக்கும் நூல்களையும் வேதங்கள் என்கிறோம். ரிஷிகளால் இயற்றப் பெற்ற நான்கு வேதங்களும் இயற்கையின் நடைமுறையை விளக்கும் நூல்களாம். இயற்கையின் நடைமுறைக்கு மாறு பட்டவைகளாக இந்நூல்கள் போய்விடுமாயின் இவைகள் வேதங்களாகா. இயற்கையின் நடைமுறையை உள்ளபடி இயம்பியிருக்கிற கூற்றுக்களில் ஒன்று சந்ததமும் வேத மொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும் என்பதாம். இது தாயுமானவரின் வாக்கு. சந்ததமும் என்னும் சொல்லுக்கு எக்காலத்திலும் என்பது பொருள்.

ஜகத் அல்லது இயற்கையில் இருப்பவர்களெல்லாம் இயற்கையின் நடைமுறையையொத்தே வாழ்வைப் பொருள் படுத்துகின்றனர். வண்டியில் அமர்ந்திருக்கும் ஒருவன் வண்டி புறப்பட்டுப்போகும் செயலைத் தன் சொந்தச் செய லாக எண்ணி நான் இதில் புறப்பட்டுப் போய்விடுவேன் என்கிறான். இடம் மாறிப்போவது வண்டி. வண்டிக்குள் அமர்ந்திருப்பதால் தான் இடம் மாறிப்போவதாக உணர மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். இவ்வியற்கையினூடு வாழ்ந்திருப்பவர்கள் இயற்கையின் மாறுதலுக்குத் தங்களை யும் உட்படுத்தியே உணரவும் பேசவும் கடமைப்பட்டிருக் கின்றனர். மானுட சரீரம் இயற்கையில் ஒரு பகுதி ஆகிறது. இந்தச் சரீரத்துக்குத் தோற்றம், வளர்ச்சி, தேய்வு, மறைவு என்பன உண்டு. இந்தச் சரீரத்தைத் தங்கள் சொந்த

சொரூபம் என்று உணருகிறவர்கள் தங்களுக்குத் தோற்ற மும் வளர்ச்சியும், தேய்வும் மறைவும் இருக்கின்றன என்று உணர்ந்தே ஆகவேண்டும். இயற்கையோடு சம்பந்தப் பட்டிருப்பவர்களெல்லாம் பிறக்கவும் இறக்கவும் செய்கின்ற னர். தூங்கிக்கொண்டிருக்கின்ற மனிதன் ஒருவனை ஆகாய விமானத்தில் வைத்து வேறு ஓர் ஊருக்கு எடுத்துச் சென்று அவன் விழிப்பதற்கு முன்பே பழைய இடத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டால் அவன் பிரயாணம் செய்தும் உண்மையில் பிரயாணம் செய்தவனாகான். ஏனென்றால் பிரயாணம் செய்ததைப்பற்றிய உணர்வு அவனுடைய உள்ளத்தில் இல்லை. அதேவிதத்தில் பிரபஞ்சத்தில் வாழ்ந்திருக்கிற பொழுதும் ஆத்ம சொரூபத்திலேயே திளைத்திருப்பவர்கள் பிரபஞ்சத்தில் உண்டாகும் மாறுதல் களுக்கு உட்பட்டவர்கள் ஆகார். மாறியமையும் தன்மை யுடையது பிரபஞ்சம். ஜனன மரணம் என்பன பிரபஞ்சத் தின் கூறுபாடுகள். மாறாத்தன்மையது ஆத்மசொரூபம். ஆத்மாவுக்கு ஜனன மரணமில்லை. ஆத்ம சொரூபத்தி லேயே திளைத்திருப்பவர்களுக்கு ஜனன மரணத்தைப் பற்றிய உணர்வு உண்டாவதில்லை. இக்கோட்பாட்டை, ஜகமீதிருந்தாலும் மரணமுண்டென்பது சதா நிஷ்டர் நினைவதில்லை எனத் தாயுமானவர் மொழிகிறார். இயற்கை அல்லது பிரபஞ்சத்துக்கு ஜகத் என்பது மற்றொரு பெயர். சர்வகாலமும் ஆத்மசொரூபத்திலேயே திளைத்திருப்பவர் சதாநிஷ்டர் எனப் பகரப்பெறுகின்றனர். இயற்கையோடு தொடர்வுவைத்துக் கொள்கிறவர்களுக்குப் பிறப்பு இறப்பு உண்டு. இயற்கையோடு தொடர்வு வைத்துக்கொள்ளாதவர் களுக்குப் பிறப்பு இறப்பைப்பற்றிய உணர்வு உண்டாவ தில்லை என்பதுதான் வாழ்வைப்பற்றிய உண்மை.

உண்மை என்றைக்குமே ஓர்தற்கு மிக எளியது. உண்மையை இயம்புதலில் சிரமம் ஒன்றுமில்லை. மேலாம் மனம் படைத்திருப்பவர்களுக்கு உண்மையை ஓர்தலிலும் சிரமம் ஒன்றுமில்லை. ஆனால் திரிவுபட்ட மனம் படைத்திருக்கிறவர்கள் உண்மையை உள்ளபடி ஓர்வதுமில்லை; இயம்புவதுமில்லை.மஞ்சள்காமாலை பிடித்திருப்பவனுக்கு உலகமெல்லாம் மஞ்சள் நிறமாகத் தோன்றுகிறது. அதில் மஞ்சள் நிறம் இல்லையென்று இயம்பினால் அவன் ஏற்றுக்கொள்ள மாட்டான். அப்படி இயம்புதற்கு மாறாக அவனுடைய மஞ்சள் காமாலையை அகற்றுதற்கு முதலில் முயற்சி எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. பிரபஞ்ச வாழ்க்கையின் அடிப்படை உண்மையை மனபரிபாகம் அடையாதவர்களுக்குப் புகட்டுதலில் பயனொன்றுமில்லை என்னும் கோட்பாட்டை, சிந்தையறியார்க்கீது போதிப்பதல்லவே என்று தாயுமானவர் இயம்புகிறார். அவர்கள் மனபரிபாகம் அடைவதற்கு முன்பு இந்த எளிய உண்மையை அவர்களுக்கு எடுத்துரைத்தால் அவர்கள் அதை எதிர்த்து வீண் விவாதம் ஏராளமாகச் செய்வார்கள். உலகத்தவர் இயல்பு அத்தகையது என்பதைச் செப்பினும் வெகுதர்க்கமாம் என்று தாயுமானவர் சாட்டுகிறார்.

மக்களை இருதரத்தாராகப் பிரிக்கலாம். வசித்து வரும் இடம், காலம், ஆங்கு நிகழும் செயல்கள் ஆகிய சூழ்நிலைக்கு உட்பட்டு வாழ்கிறவர்கள் கீழ்த்தரத்தார். காலம், இடம், செயல் ஆகிய சூழ்நிலையைப் பொருட்படுத்தாது தமது நிஜ சொரூபத்துக்கு ஒப்ப வாழ்ந்திருப்பவர் மேல் தரத்தாராகின்றனர். சூழ்நிலையை முகாமையாகக் கொண்டோ, அல்லது அதைப் பொருட்படுத்தாது இருந்து கொண்டோ மக்கள் மனதில் எண்ணுகிற எண்ணத்துக்கு ஏற்ப அவர்

களுடைய வாழ்க்கை மாறியமைகிறதென்பது வேதமொழி. அதை இன்னும் தெளிவுபடுத்திப் பகர்வோமானால் நரகம் என்னும் சூழ்நிலையில் உடல் வாழ்க்கை அழுந்திக் கிடப்பதற்கிடையில் உள்ளத்திலே உயர்ந்த எண்ணத்தின் மூலம் ஆத்ம பரிபாகம் அடைந்துள்ளவன் சொர்க்க வாழ்க்கை வாழ்வது போன்று இன்புற்றிருக்கலாம். இதற்கு மாருக சொர்க்கம் என்னும் சீரிய சூழ்நிலையில் உடல் வாழ்க்கை அமையப் பெற்றிருப்பதற்கிடையில் மனதில் கொண்டுள்ள புன்மையை முன்னிட்டு நரக வேதனையை ஒருவன் தனக்குத்தானே வருவித்துக்கொள்ள முடியும். வேதமொழியின் சாரத்தை சுருங்கச் சொல்லுமிடத்து சூழ்நிலை எத்தகையதாயினும் அதைக் கருத்தில் வாங்கிக் கொள்ளாதே; மனதையாண்டும் பாரமார்த்திகப் பெருநிலையில் நாட்டி வைத்திருந்து பழகு — இதுவே வேதமொழி. இதை ஏற்க இயலாதவர்கள் வீண் வாதம் செய்கின்றனர். இதை அனுஷ்டிக்கிறவர்கள் உயர்நிலை எய்துகின்றனர். அப்படி உயர்நிலை எய்திய பெருமக்கள் யாராவது உலகத்தில் இருந்திருக்கிருர்களா என்னும் கேள்வி எழக்கூடும். எத்தனையோ பெருமக்கள் இவ்வேதமொழிக்கு இலக்காக இம்மண்ணுலகிலேயே வாழ்ந்திருக்கலாயினர். மார்க்கண்டனைச் சான்ருக எடுத்துக்கொள்வோம். மிருகண்டு ரிஷியின் புதல்வன் மார்க்கண்டன். அற்ப ஆயுள் உடையவனுக மண்ணுலகில் அவன் பிறந்தான். பதினுறு வயதுக்கு மேல் அவன் வாழ்ந்திருக்க மாட்டான் என்று அவனுடைய ஆயுள் வகுத்து வைக்கப்பட்டிருந்தது. நாள் ஏற ஏற அவனுக்கு ஆயுள் குறைந்து பட்டுப்போய்விட்டதே என்று பெற்ரேர்கள் அவனைக் குறித்து வருந்தியிருந்தனர். காலத்துக்கு அடிமைப் பட்டவர்களாகத் தங்கள் மைந்தனுடைய நிலையையெண்ணி

அவர்கள் வருந்திக்கொண்டிருந்தனர். அப்படித் தங்களுக்குத் தாங்களே துன்பத்தை வருவித்துக்கொண்டு அவர்கள் நரக வேதனைப்பட்டனர். ஆனால் மார்க்கண்டன் என்ன செய்தான்? அவனுக்கு வயது வர வர விவேகம் அதிகரித்தது. கடவுள் பக்தி மேலோங்கியது. சிவ பூஜைக்கென்று அவன் தன்னை ஒப்படைத்தான். பக்தியும், வழிபாடும் அவன் உள்ளத்தில் ஆழ்ந்து இடம் பெற்றன. சிவசொரூபத்தை எண்ணியெண்ணி அவனே சிவமயம் ஆய்விட்டான். காலத்தையோ வாழ்ந்திருந்த இடத்தையோ அவன் கருத்தில் வாங்கிக்கொள்ளவில்லை. சிவ சான்னித்தியம் ஒன்றுதான் அவனுடைய மனதில் ஊறியிருந்தது. ஆண்டுகள் பதினாறு கடந்தன. குறித்த வேளையில் அவனைப் பற்றியிழுத்துச் செல்ல மறலியும் அவன்முன் தோன்றினான். ஆனால் மார்க்கண்டனோ காலத்தைக் கருத்தில் வாங்கிக்கொள்ளவில்லை. தனக்கு அமைந்தது அற்ப ஆயுளோ, அல்லது தீர்க்க ஆயுளோ என்று எண்ணிப் பார்க்க அவனுக்கு அவகாசமில்லாது போய்விட்டது. சிவ போதத்தில் திளைத்திருந்தது ஒன்றே அவன் பெற்றிருந்த மன நிலையாகும். மரணம் தன்னை அணுகிவிட்டதென்று சதாநிஷ்டனாகிய அவன் கணப்பொழுதும் எண்ணிப் பார்க்கவில்லை. சிவசொரூபத்தில் மனதை நாட்டித் தானும் சிவசொரூபம் ஆய்விட்டதனால் அவன் மறலியை வென்றவன் ஆனான். 'மார்க்கண்டனுக்காக மறலி பட்டபாட்டை உன்னிப்பார்க்கின் அன்பர்க்கென்ன பயங்காண் பராபரமே.' ஆக, பிரபஞ்சமென்னும் சூழ்நிலையில் வாழ்ந்திருந்தும் அதில் உண்டாகும் மரணத்துக்கு மார்க்கண்டன் உட்படவில்லை.

இனி, சுகப்பிரமத்தின் இயல்பை ஆராய்ந்து பார்ப்போம். வியாச மகரிஷிக்கு அவர் புதல்வராகப் பிறந்தவர்.

தமக்கு மகப்பேறு வாய்த்திருக்கிறதென்று வியாசர் கருதினார். ஆனால் புவியில் பிறந்த பிறகும் தன்னைப் பிறப்பெடுத்த சிறுவனாக சுகப்பிரம்மம் நினைத்தது கிடையாது. உடல் வாழ்க்கை வாழ்ந்திருப்பதற்கிடையில் தனக்கு உடல் ஒன்று உண்டு என்பதை சுகப்பிரம்மம் நினைக்கக் கிடையாது. நிழல்போன்று உடல் சுகப்பிரம்மத்தைச் சார்ந்திருந்தது. ஆனால் உடலைப்பற்றிய எண்ணம் சிறிதளவும் சுகப்பிரம்மத்தின் உள்ளத்தில் புகவில்லை. உண்பது, நடமாடுவது, உலகில் வாழ்ந்திருப்பது ஆகிய செயல்கள் எல்லாம் தாமாக நிகழ்வனவாயின. பிறந்தது முதல் சாகும் வரையில் நமது ஹிருதயம் ஓயாது துடித்துக்கொண்டே இருக்கிறது. நாம் அதைப்பற்றி எண்ணினாலும், எண்ணாதிருந்தாலும் ஹிருதயத்தின் செயல் தானாக நிகழ்ந்து விடுகிறது. அதேவிதத்தில் சுகப்பிரம்மத்துக்கு உடல் வாழ்க்கையின் செயல்களெல்லாம் தாமாக நிகழ்ந்துவிட்டன. அவரோ பிரம்ம சொரூபத்தில் சதாநிஷ்டராக இருந்து விட்டார். எனவே மார்க்கண்டர், சுகர் ஆகியவர்கள் பெருநிலையை அடைந்துள்ள பெருமக்களாவர். அதைக் குறித்து ஐயங்கூறுவார் வையகத்தில் யாருமில்லை. இக்கருத்துக்களை, திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள் சித்தாந்த நித்தியரலரோ என்று தாயுமானவர் இயம்புகிறார். தெய்வீக குணம் வாய்க்கப்பெற்ற மனிதன் திவ்ய குணமுடையவன் எனப் பகரப்பெறுகிறான். சித்தாந்த நித்தியர் என்னும் சொல் தொடருக்கு எல்லார்க்கும் ஒப்ப முடிந்த பரிபூரண நிலையை அடையப்பெற்றவர் என்பது பொருள்.

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அதன் நடைமுறையைப் பற்றிய பேருண்மை ஒன்று நமக்கு விளங்கும்.

உயிர்வகைகளனைத்தும் தாம் தாம் அடைந்துள்ள நிலையை விட உயர்ந்த பெருநிலையை அடைய மேலும் மேலும் முயன்று வருகின்றன. அம்முயற்சியில் அவைகள் படிப்படியாக வெற்றியும் அடைந்து வருகின்றன. உயிர்வகைகளை உயர்திணை, அஃறிணை என இருதிணைகளாகப் பிரிக்கிறோம். அஃறிணை உயிர்களும் மேன்மையடைய முயலுகின்றன. உயர்திணை உயிர்களும் மேன்மையடைய முயலுகின்றன. உயர்திணை உயிர்களுக்கு விவேகம் விரைவில் வந்து வாய்க்கிறது. அடையும் மேன்மைகளெல்லாம் கடவுளை அடைதல் என்னும் மேன்மையிலே அடங்கிவிடுகின்றன என்பதை அறிந்து கொள்ளுகிறவர்கள் நல்ல விவேகிகளாகிறார்கள். அந்த விவேகியர்களுடைய கூட்டத்தில் தேவர்களையும் அவர்களுக்கு அதிபதியாய் இருக்கும் இந்திரனையும் கூறலாம். இந்திரனும் அவனைச் சார்ந்துள்ள தேவர்களும் செய்யும் செயல்களுள் சிறந்தது எது என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்திரனுக்கு சதகிருத் என்பது ஒரு பெயர். நூறு யாகங்களைச் செய்தவன் என்பது அதன் பொருள். நூறு யாகங்களைச் செய்ததனால் அவன் இந்திர பதவியைப் பெற்றான். அப்பதவியும் நாளடைவில் கை நழுவிப் போகக்கூடியது. ஆதலால் அதன் பிறகும் அவன் கடவுள் வழிபாட்டிலேயே ஈடுபட்டவனாக இருக்கிறான். கடவுளை அடையப் பெற்றவர்களுக்கே போக்கும் வரவும் இலாப் பெருநிலை வாய்க்கிறது. அப்பெருநிலையை அடைதற் பொருட்டு இந்திரனும் அவனைப் பின்பற்றி இதர தேவதைகளும் பெரிய பொருளை வணங்கிக்கொண்டே இருக்கின்றனர்.

பிரபஞ்சத்தின் நடைமுறைக்கு பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகள் கர்த்தாக்களாக இருக்

கிருர்கள். சிருஷ்டி கர்த்தாவாக இருப்பவர் பிரம்மா. ஸ்திதிக்குப் பொறுப்பாளியாக இருப்பவர் விஷ்ணு. சம்ஹாரத்தை முடித்து வைப்பவர் ருத்திரன். இம் மும் மூர்த்திகளுக்கும் தங்களுடைய கிருத்தியங்கள் முடிவுறுங் கால் அவரவர்க்குரிய ஸ்தானங்களினின்று விலகிக்கொள்ள வேண்டிய நெருக்கடி வருகிறது. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய செயல்களைத் தாண்டி அப்பால் போய் விடுவதுதான் சிறந்த லக்ஷியம் என்று கருதி அம்மும்மூர்த்தி களும் பெரிய பொருளை வழுத்திக்கொண்டு இருக்கின்றனர்.

நான்கு வேதங்களுள் மிகப் பழையது இருக் வேதம். நான்கு வேதங்களை முறையாக ஓதி அதன் உட்கருத்தை அறிந்து, அதைப் பழக்கத்தில் கொண்டுவர முயலுகிறவர்கள் முனிவர்கள் என அழைக்கப்படுகின்றனர். முனி என்னும் பதத்துக்கு சர்வகாலமும் மனன சீலத்தை உடைத்திருப் பவன் என்று விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. கிளிப் பிள்ளை போன்று வேதத்தை ஓதுபவன் வேதமுனி என்று அழைக்கப்படமாட்டான். வேதத்தில் சொல்லியுள்ள கோட் பாடுகளையெல்லாம் வாழ்க்கையில் செயலில் கொண்டுவரு பவனே வேதமுனி ஆகிருன். நான்கு வேதங்களையும் அலசி ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். மனிதன் எதை வழுத்துகிருனே அதை அவன் அடைந்துவிடுகிருன். இக்கோட்பாடே வேதங்களின் சாரமாகும். உலகங்களனைத் துக்கும் மூலகாரணமாயிருப்பவர் பரம்பொருள் என்றும் வேதங்கள் சாட்டுகின்றன. அப்பரம்பொருளைப் போற்று தலே மானுடப் பிறவியின் குறிக்கோள் என்றும் அவ்வேதங் கள் சொல்லிவைத்திருக்கின்றன. ஆதலால் வேத முனிவர் கள் எல்லோரும் பரமனையே போற்றி வருகின்றனர். இனி, மக்களுக்கும் தேவர்களுக்குமிடையில் பல படித்தரங்

களிலே தேவகணங்களும் நர கணங்களும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கடவுளை அடைவதுதான் வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் என்பதை அறிந்திருக்கிறார்கள். ஆதலால் அவர்களும் பரம்பொருளையே வெவ்வேறு முறைகளில் போற்றிவருகின்றனர். அப்படிப் போற்றுபவர்களையெல்லாம் தொகுத்து, இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுளர் இருக்காதி வேதமுனிவர் எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்கள் இரவி மதியாதியோர்கள் கந்தருவர் கின்னரர்கள் மற்றையர்கள் யாவரும் கைகுவித்திடுந் தெய்வமே என்று தாயுமானவர் இயம்புகிறார். மேலே உள்ள பாடலில் இக்கருத்துக்கள் யாவும் அடங்கியுள்ளன.

கருணாகரக் கடவுள் - 8

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம
துஷ்டதே வதைகளில்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன் அன்பபிஷேகநீர்
உள்ளுறையி லென்னுவி நைவேத்தி யம்ப்ராணன்
ஓங்குமதி தூபதீபம்
ஒருகால மன்றிது சதாகால பூஜையா
ஒப்புவித் தேன்கருணை கூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசீனியே
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளன்அறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லஉறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

ஆத்மசாதகன் பரம்பொருளுக்குச் செய்யும் பூஜையில் மானச பூஜை என்றும் பாகிய பூஜை என்றும் இரண்டு பகுதிகள் உண்டு. இவ்விரண்டினுள் சாதனத்திற்கு முற்றிலும் இன்றியமையாதது மானச பூஜை. ஆனால் புரிதற்கு அது கடினமானது. ஆரம்பதசையிலிருப்பவர்கள் அதைச் சரியாக பாவித்துப் பழக முடியாது. அத்தகையவர்களுக்கு பாகிய பூஜை பெரும் துணைபுரிகிறது. கடவுளை தனக்குப் புறத்தில் வைத்து வழுத்துதல் என்பது அதன் கருத்து. கடவுளைப் புறத்தில் வைத்துப்போற்றுதற்கே

ஆலயங்கள் கட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. ஆலய வழிபாடு முறையாக நடைபெற்று வருவதும் ஆத்மசாதகர்களை பாரமார்த்திகப் பெருவாழ்வில் விரைந்து செலுத்துதற் பொருட்டேயாம். இவ்விரண்டுவித பூஜைகளுள் உள்ள தாரதம்மியத்தை அறிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. வீடுகட்டுதற்கு அமைப்புப் படம் (Plan) போடுகிறோம். எந்த முறையில் கட்டிடத்தை எப்படி அமைப்பது என்பதற்கு அப்படம் பெரிதும் பயன்படுகிறது. அந்த அமைப்புப் படத்துக்கு ஒப்பானது புறத்தில் கட்டி வைக்கப்பட்டிருக்கும் கோயில். ஆத்மசாதகனுடைய முன்னேற்றமோ படத்தை அனுசரித்துக் கட்டியுள்ள வீட்டுக்கு ஒப்பாகும். ஈண்டு படம் முக்கியமானதா, அல்லது கட்டுகிற வீடு முக்கியமானதா என்னும் கேள்வி எழுகிறது. வீடு கட்டுதற்குப் படம் துணைபுரிகிறது. ஆனால் படத்தின் துணைகொண்டோ அல்லது துணையில்லாமலோ வீடு கட்டுதலே முக்கியமானது. வீட்டைக் கட்டாது படத்தைப்பற்றி ஏராளமாகப் பேசிக் கொண்டிருந்தால் பயனொன்றுமில்லை.

மானச பூஜை வீடுகட்டுதற்கு ஒப்பானது. புறத்திலுள்ள ஆலய வழிபாடு அந்த வீட்டின் பொருட்டு வரையப்பட்டுள்ள அமைப்புப் படத்துக்கு ஒப்பாகும். ஆலய வழிபாடு அல்லது பாகிய பூஜையை அனுசரித்தே மானச பூஜையை ஈண்டு எடுத்து விளக்க முயலுவோம். ஓர் ஆலயத்துக்கு முதல் வாயிலாயிருப்பது ராஜகோபுரம். ஆத்மசாதகனுடைய ஸ்தூல சரீரத்திற்கு ஒப்பானது அந்த ராஜகோபுரம். அந்த கோபுரத்தினுள் வழிபடுபவன் நுழைவது சாதகன் ஸ்தூல சரீரத்தின் உள்ளே மனதின் வாயிலாக நுழைவதற்கு ஒப்பாகிறது. ஐம்பொறிகளின் செயலை நிறுத்திவிட்டு மனது உள்முகமாகப் போகிறது. அப்படிச்

செல்லுகிற மனது முதன் முதல் செய்யவேண்டிய கிருத்தியம் ஒன்று இருக்கிறது. அக்கிருத்தியத்துக்கு விளக்கமாகப் புறத்தில் கட்டிவைக்கப்பட்டுள்ள ஆலயத்தில் பலிபீடம் என்னும் இடம் ஒன்று உண்டு. வழிபடுபவன் ஆங்கு சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கவேண்டும். அப்படி வணங்குகையில் தன்னிடத்துள்ள சிற்றியல்புகளை யெல்லாம் பலிகொடுத்துவிட்டதாக சாதகன் உணரவேண்டும். இக்கோட்பாட்டை **துள்ளும் அறியாமனது பலிகொடுத்தேன்** என்கிறார் தாயுமானவர். மனதுக்குரிய இரண்டு இயல்புகள் ஈண்டு இயம்பப்படுகின்றன. அது ஓயாது சலனப்பட்டுக்கொண்டிருக்கிறது. இமைப்பொழுதாவது அது அமைதியுற்றிருப்பதில்லை. ஆதலால் அது துள்ளிக் கொண்டிருக்கிறது என்று பகரப்படுகிறது. தெளிவாக அறியாமை ஆகிய குறைபாடு அதனிடத்துள்ள இரண்டாவது இயல்பு ஆகும். உலக விஷயங்களை அது ஏதோ ஓரளவு அறிந்துகொள்கிறது. மற்று முற்றிலும் அறியும் தன்மை அதனிடத்தில்லை. இனி, பாரமார்த்திக விஷயத்தையோ அதனால் ஒருபொழுதும் கிரகிக்கமுடியாது. அதற்கேற்ற பண்பாடு அடைந்தால்தான் அதைக் கிரகிக்கும் திறன் மனதிற்கு வருகிறது. அடுப்புக்கரியைத் தீயில் போட்டால் அது தீயாகிவிடுகிறது. அறியாத மனதை பேரறிவு சொரூபமாகிய தெய்வத்திடம் கொடுத்துவிட்டால் பின்பு அறிவு சொரூபமாக அந்த மனது திருந்தியமைகிறது. கடவுளிடம் கொடுப்பதற்கு கடவுளுக்குப் படைத்தல், கடவுளுக்கு நைவேத்தியம் பண்ணுதல், கடவுளுக்குப் பலியிடுதல் என்றெல்லாம் பகரப்பட்டுள்ளது. பலர் பலியிடுதலை உயிர்க் கொலை செய்தல் எனப் பொருள்படுத்துகின்றனர். ஆனால் உண்மையில் நைவேத்தியம் என்னும் சொல்லுக்கு

நிகரானது பலி என்னும் சொல். ஆதலால்தான் ஆகம விதிப்படி அமைக்கப்பெற்றுள்ள ஆலயங்களில் பலிபீடம் என்னும் கண்ணியப்பெயர் பெற்றுள்ள இடம் அமைந்திருக் கிறது. மனிதன் புரிகிற வினைகளனைத்தும் மனதைச் சார்ந் திருக்கின்றன. வினைகள் வளர்ந்துகொண்டுபோகுமளவு பிறவிப் பிணியும் வளர்கிறது. பிறவிப் பிணியை வளர்க்கும் வினைகளைத் துஷ்டதேவதைகள் எனலாம். மனதை தெய் வத்திடம் ஒப்படைக்கப்பட்ட இடத்தில் அதன் சிறுமைக ளெல்லாம் தாமாக ஒடுங்கிவிடுகிறபடியால் கர்ம துஷ்ட தேவதைகள் இல்லை என்கிறார் தாயுமானவர்.

கடலின் மேற்பரப்பில் அலைகள் நிறைந்திருக்கின்றன, அடிப்பகுதியோ அமைதியுற்றிருக்கிறது. மனது செயல் புரிந்து கொண்டிருக்கும்பொழுது கடலின் மேற்பரப்பு போன்று வியவகாரங்கள் வளர்ந்துகொண்டே போகின்றன. மனம் ஒடுங்கியவிடத்து அலைகள் ஒடுங்கிய கடல்போன்று சித்தத்தினுள் சாந்தம் பொலிகிறது. அப்படி சாந்த நிலையை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோள். வேதங்களெல்லாம் வாழ்க்கைத் தத்துவங்களை விளக்கியான பிறகு ‘சாந்தி சாந்தி சாந்தி’ என்று கூறி முடிவடைகின்றன. மனதில் சாந்தி வருவது ஓர் உயர்ந்த நிலையாகும். அந்நிலையிலே ஆத்ம சாதகன் அறிந்துகொள்ளக்கூடிய உண்மை ஒன்று உண்டு. மனதானது நனவு கனவு சுழுத்தி என்னும் மூன்று நிலைகளில் இருக்கிறது. இம்மூன்றுக்கும் பொதுவாயிருக் கும் பேருணர்வு ஒன்று உண்டு. அப்பேருணர்வே துரியம் என்னும் பெயர் பெற்றுள்ளது. நிறைகுடம் ததும்பாதிருப் பதுபோன்று துரியமானது நனவு கனவு சுழுத்தி ஆகிய மூன்று அவஸ்தைகளிலும் கட்டுப்படாதிருக்கிறது. இந்த துரியத்துக்கு புறச்சின்னமாய் ஆலயத்தில் எழுந்தருளி

யிருப்பது அதனுள் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கும் மூல மூர்த்தியாம். பாகிய பூஜையிலே கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் மூல மூர்த்தியை வழுத்துவது போன்று மானுட உடல் என்னும் பெருங்கோயிலில் யாண்டும் எழுந்தருளியிருக்கும் பரம்பொருளை ஆத்ம சாதகன் போற்ற வேண்டும். இக்கோட்பாட்டை துரியநிறை சாந்த தேவதையாம் உனக்கே தொழும்பன் அன்பு அபிஷேகநீர் என்று அண்ணல் இயம்புகிறார். பாகிய பூஜையில் மஞ்சன நீர் கொண்டுவந்து மூர்த்திக்கு அபிஷேகம் செய்கிறோம். உள்ளத்தினுள்ளே எழுந்தருளியிருக்கும் துரியநிறை சாந்த தேவதைக்கு ஆத்மசாதகனது உள்ளத்திலே ஊற்றெடுத்து வரும் தூய அன்பையே அபிஷேக நீராக அவன் வார்க்க வேண்டும் என்பது இதன் கருத்து. தொழும்பன் என்னும் சொல் தொண்டன் எனப் பொருள்படுகிறது. அபிஷேகம் என்னும் சொல் நீராட்டுதல் எனப் பொருள்படுகிறது.

பஞ்சபூதங்களில் ஒன்றாகிய நீர், பஞ்சபூதங்களால் ஆகிய மானுட சரீரத்தைக் குளிப்பாட்டித் தூயதாக்குகிறது. பின்பு கடவுளோ பஞ்சபூதங்களுக்கப்பாற்பட்டவர். அவர் நித்ய சுத்தராயிருப்பவர். அவரை அணுகுகின்றவர்கள் அவரிடத்திலுள்ள தூய்மையைப் பெறுகின்றனர். அத்தகைய தெய்வத்தைக் குளிப்பாட்டுதல் எதற்காக என்னும் கேள்வி எழுகிறது. பிரபஞ்சத்திற்கு அப்பாலிருக்கும் அவரை பிரபஞ்சத்தில் அடங்கியிருக்கும் ஆத்மாக்களைப் போன்று நமது ஆராதனையின் பொருட்டு நாம் வைத்துக் கொள்ளுகிறோம். அபிஷேகம் புரிந்துகொள்ளுதற்கு அவசியமில்லாதவரை அபிஷேகம் புரிந்துகொள்ளுமாறு நமது திருப்தியின் பொருட்டு நாம் செய்கிறோம். நாம் நீராடுவது உடல் நலத்துக்காகவெனினும் அது ஒருவிதத்தில் ஆத்ம

சாதனம் ஆகிறது. உடலைக் குளிப்பாட்டுதலின் மூலம் அதைப் புதுப்பிக்கிறோம். புதிய எழில் அதன்கண் உண்டாகிறது. மனதும் அதற்கேற்றபடி புதுப்பிக்கப்படுகிறது. புதிய உற்சாகமும் தெளிவும் மனதுக்கு வருகிறது. ஆதலால் நீராடுதலை ஓர் ஆத்மசாதனமாகவே நாம் கருதிவருகிறோம். கடவுளுக்கு மானச பூஜையில் நாம் கொடுக்கும் மஞ்சன நீராய் அமைவது அன்பு. அன்பு அல்லது பக்தியில் கடவுள் பரமதிருப்தியடைகிறார். பக்திவலையில் நன்கு அகப்பட்டவர் ஆகிறார் அவர். மேலும் உயிர்களை ஒன்றாக இணைத்துவைப்பது அன்பு. அன்பு உள்ளத்தில் ஊற்றெடுக்கும்படி செய்கின்ற ஆத்மசாதகனே மானசபூஜையை நன்கு நிறைவேற்ற வல்லவனாகிறான்.

பாகிய பூஜையில் கடவுளுக்கு நாம் நைவேத்தியம் படைக்கிறோம். கடவுள் உணவு உண்கிறாரா என்னும் கேள்வி எழுகிறது. அவர் உண்பதில்லை. ஆனால் நாம் அவர் உண்பதாகப் பாவிக்கிறோம். அதனால் நாம் படைக்கும் உணவு தூயதாகிறது. கடவுளுக்கு எதை நைவேத்தியமாகப் படைப்பது என்னும் கேள்வி அடுத்தபடியாக வருகிறது. நாம் விருப்புடன் புசிக்கும் நல்லுணவை நமக்கென்று சமைப்பதற்குப் பதிலாக நாம் போற்றும் தெய்வத்திற்காகவென்று சமைக்கிறோம். அதை அவருக்குப் படைத்தான பின்பு அவருடைய பிரசாதமாகப் பலர்க்கு முதலில் வழங்கிவிட்டுப் பிறகு நாம் ஏற்கிறோம். அப்படிச் செய்வதன் மூலம் உணவு விஷயத்தில் நமக்கு நாம் கட்டுப்பாடு மிகச் செய்துகொள்கிறோம். நமக்குப் பிரியமானதை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளாது கடவுளுக்குச் சொந்தமாக்குவது முதல் கட்டுப்பாடு. மற்ற உயிர்களுக்கு அதை அன்புடன் வழங்கும்படி செய்வது இரண்டாவது கட்டுப்பாடு. பாகிய பூஜை

யில் உள்ள கட்டுப்பாடு மானச பூஜையில் இன்னும் உயர் நிலையை எய்திவிடுகிறது. புறத்தில் ஓர் உருவத்தில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்கு நமது உயிரைப் பேணுகிற உணவை நைவேத்தியமாகக் கொடுக்கிறோம். அதே தெய்வம் நம் உள்ளத்தினுள்ளே எழுந்தருளியிருப்பாராகில் நாம் எதை உணவாக அவருக்கு எப்படி எடுத்துப் படைப்பது என்னும் கேள்வி வருகிறது. மனிதன் வைத்திருக்கிற பற்றுகளிலெல்லாம் உயிர்ப்பற்றே ஒப்பற்றது. உயிரைப் பாதுகாத்தல் பொருட்டு மனிதன் எதை வேண்டுமானாலும் தியாகம் செய்வான். அத்தகைய அரிய உயிரைப் பேணுதற்கு உணவு பயன்படுவதால் அதனிடத்தும் மனிதன் அவ்வளவு பற்று வைத்திருக்கிறான். இனி, தெய்வம் உள்ளே எழுந்தருளியிருக்கிறார் என்று எண்ணும்போது நாம் பற்றிப் பிடித்திருக்கும் உயிர் வாழ்க்கையையே அவருக்கு நைவேத்தியமாகப் படைத்துவிட வேண்டும். உயிரையே கடவுளுக்குரியதாகக் கொடுத்துவிடுகிறவன் அவருக்குத் தனது அனைத்தையும் கொடுத்தவனாகிறான். மானச பூஜை செய்கிறவன் மனதில் வீற்றிருக்கும் தெய்வத்திற்குத் தனது உயிரை நைவேத்தியமாகப் படைப்பது முறை. இக்கோட்பாட்டை உள்உறையில் என் ஆவி நைவேத்தியம் என்று அண்ணல் இயம்புகிறார். ஆவி ஈண்டு உயிர் எனப் பொருள் படுகிறது.

இனி, பாகிய பூஜையில் ஆலயத்திலே எழுந்தருளப் பண்ணியிருக்கும் தெய்வத்துக்கு நைவேத்தியம் படைப்பது போன்று தூப தீபங்கள் காட்டுகிறோம். அச்சடங்கின் அடிப்படைக் கருத்தை ஆராய்வது அவசியமாகிறது. காற்றில் எங்கும் பிராணவாயு கலந்திருக்கிறது. அப்பிராணவாயுவை சுவாசிப்பதால்தான் நாம் உயிர் வாழ்ந்து வருகி

றேம். உயிர்க்கு அது சூக்ஷ்மமான உணவு ஆகிறது. அத்தகைய வாயுவை தூயதாக்குதற்கு ஆலயத்தில் சாம்பிராணி தூபம் போடுகிறேம். அது பிராண வாயுவைத் தூயதாக்குவதுமன்றி மூக்கால் நுகர்தற்கும் இனியதாயிருக்கிறது. அத்தகைய இனிமை கடவுள் வழிபாட்டோடு இணைத்து வைக்கப்பட்டுள்ளது. அடுத்தபடியாக தெய்வத்துக்குத் தீபம் காட்டுகிறேம். அதன் உட்கருத்தையும் அறிந்து கொள்வது அவசியமாகிறது. ஆலயத்தில் இருள் சூழ்ந்ததாக கர்ப்பக்கிரகம் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதனுள் ஏற்றி வைக்கப்பட்டிருக்கிற தீபமோ அல்லது ஆராதனைக்காக காட்டப்படும் தீபமோ மறைந்திருக்கும் மூர்த்தியை விளக்கிக் காட்டுகிறது. பாகிய பூஜையில் இப்படி அமைக்கப் பெற்றுள்ள தூபமும் தீபமும் மானச பூஜைக்குரிய இரண்டு பெரிய கோட்பாடுகளை நன்கு விளக்குகின்றன. உடலெங்கும் வியாபித்திருக்கும் பிராணனானது அதன் செயலுக்கேற்ப பஞ்சப் பிராணன் எனப் பகரப்படுகிறது. பிராண வாயு கலந்த காற்று புறத்தில் எங்கும் வியாபித்திருப்பது போன்று உடல் என்னும் கோயிலினுள் பஞ்சப்பிராணன் எங்கும் வியாபித்திருக்கிறது. அது வியாபித்திருப்பதாலேயே உயிர் வாழ்க்கை நடைபெற்று வருகிறது. அத்தகைய பிராணனை தூபமாக மானச பூஜையில் ஆத்ம சாதகன் உள்ளிருக்கும் தெய்வத்தின்முன் காட்டுகிறுன். இனி, உடலுக்குள்ளே ,நந்தா விளக்காக ஏற்றி வைக்கப்பட்டிருப்பது நல்லறிவு அல்லது விவேகம். இமைப்பொழுதாவது நீங்காது நெஞ்சத்தினுள்ளே எழுந்தருளியிருக்கும் தெய்வத்தை அவர் சொரூபமாயிருக்கும் விவேகம் என்னும் நல்லறிவே விளக்கிக் காட்டுகிறது. ஆக, மானச பூஜையில் தீபமாயிருந்து உதவுவது நல்லறிவு. இக்கருத்துக்களை பிராணன் ஓங்குமதி

தூப தீபம் என்று தாயுமானவர் இயம்புகிறார். மேலும் மேலும் நல்லியல்பிலே ஊறிவரும் பேரறிவை ஓங்குமதி என்று அவர் இயம்புகிறார்.

வெளியுலகிலே கட்டுவிக்கப்பட்டுள்ள கோயிலிலே எழுந்தருளியிருக்கும் தெய்வத்துக்குக் குறிப்பிட்ட காலங்களில் பூஜை நிகழ்கிறது. அப்படிச் செய்வதுதான் பாகிய பூஜையில் சாத்தியப்படுகிறது. ஆனால் நல்ல ஆத்ம சாதகன் ஒருவன் செய்யும் மானச பூஜையில் வழிபாடு குறிப்பிட்ட ஏதோ சில வேளைகளில் நிகழ்வதல்ல. மனிதன் சில வேளைகளில் வாழ்ந்திருக்கிறான், வேறு சில வேளைகளில் மாய்ந்து கிடக்கிறான் என்று நாம் சொல்லுவதில்லை. அப்படி அவன் மாண்டுபோவதுமில்லை. பிறந்தது முதல் இறந்துபோம் வரையில் இடையறாது அவன் வாழ்ந்து வருகிறான். மானச பூஜையில் அவன் செய்யும் ஆராதனையும் அத்தகையதேயாம். அக்கருத்தை ஒரு காலமன்று இது சதாகால பூஜையாய் ஒப்புவித்தேன் என்று தாயுமானவர் சொல்லுகிறார்.

மானசபூஜை, பாகியபூஜை ஆகிய இரண்டுக்கும் பொதுவாயுள்ள இயல்புகள் சில உள. பஞ்சபூதங்களின் துணைகொண்டே பஞ்ச பூதங்களுக்கப்பாலிருக்கும் தெய்வத்தை வணங்குகிறோம். உணவை நைவேத்தியமாக வைக்கிறோம். அது அன்னத்தினின்று உண்டானது. அன்னம் பஞ்சபூதங்களில் ஒன்றாகிய பிருத்வி அல்லது மண்ணின் சொரூபமாகிறது. குளிப்பாட்டுதற்கு உதவுவது அடுத்த பூதமாகிய அப்பு அல்லது நீர். தீபத்துக்கு உதவுவது அக்னி என்னும் பூதம். தூபத்துக்கு உதவுவது வாயு என்னும் பூதம். வீற்றிருப்பதற்கு உதவுவது ஆகாசம் என்னும் பூதம். மானச பூஜையில் சிதாகாசம் பாகிய பூஜையிலுள்ள ஜட ஆகாசத்துக்கு ஒப்பானதாக இருக்கிறது. இங்ஙனம் உள்ளத்தி

னுள்ளும் புறத்திலும் ஐம்பூதங்களின் துணைகொண்டே இறைவனை ஆராதிக்க வேண்டியதாகிறது.

இனி, மானச பூஜையிலும் பாகிய பூஜையிலும் நான்கு யோகங்களும் ஒழுங்காக அனுஷ்டிக்கப்படுகின்றன. சதா காலமும் பூஜை செய்வது கர்மயோகமாகிறது. மனதை அடக்குதல், பிராணனைப் பயன்படுத்துதல் ஆகியவைகள் ராஜயோகத்தின் கூறுகள் ஆகின்றன. அன்பை மஞ்சன நீராகக் கொள்வது பக்தியோகமாகிறது. ஓங்குமதி அல்லது வளர்கின்ற அறிவைத் தீபமாகப் பயன்படுத்துவது ஞான யோகத்தின் இயல்பாகிறது. இப்படி நான்கு யோகங்களையும் தொகுத்துவைத்து இறைவனைப் போற்றுவது சாதகனுக்கு நல்ல அருள் விருந்து ஆகும். பொருத்தமான உண்டியிலே உணவுச்சத்துக்களெல்லாம் முறையாக அமைகின்றன. அதேவிதத்தில் நல்ல ஆத்மசாதனத்தில் இந்த நான்கு விதமான யோகங்களும் பொருத்தமாக இடம் பெறுகின்றன. ஆற்றல், அன்பு, அறிவு ஆகிய மேலாம் இயல்புகளைப் பெறுதற்கு அவை நான்கும் உதவுகின்றன.

நாம் ஒரு மனிதனிடத்து ஏதேனும் உதவியை நாடிப் போகுங்கால் நாம் கேட்கும் உதவிக்கு நாம் முற்றிலும் தகுதி வாய்ந்தவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். இக்கோட்பாடு எல்லாத் துறைகளுக்கும் ஒத்ததாகும். இறைவனிடம் அனுக்கிரகம் வேண்டுமென்று நாம் பிரார்த்திப்பதற்கு முன்பு நமது தகுதியை முயற்சியாலும் ஊக்கத்தாலும் உழைப்பாலும் நாம் வெளிப்படுத்த வேண்டும். அதைத்தான் தாயுமானவர் தமது வாழ்க்கையில் நன்கு செய்துகாட்டுகிறார். இறைவன் வழிபாடு செய்வது நாள்தோறும் குறிப்பிட்ட ஏதோ சில வேளைகளில் அல்ல, சதாகால பூஜையாய் தாம் நிறைவேற்றி வருவதாக அவர் உறுதி கூறுகிறார். அதன்

பிறகு கருணைகூர் என்று அவர் கடவுளிடத்தில் விண்ணப் பிக்கிறார். அருளைப் பொழியவேண்டும் அல்லது அனுக் கிரகம் செய்யவேண்டும் என்பது அதன் பொருள். படுகிற பாட்டுக்கு ஏற்ப பயன் வந்தமைவது வாழ்க்கைத் திட்ட மாகும். இறைவனுடைய கருணை என்னும் பயனைப் பெறு தற்கு தாயுமானவர் முற்றிலும் தகுதி வாய்ந்தவர் என்பது ஈண்டு நன்கு வெளியாகிறது.

வேதத்துக்கு மறை என்பது மற்றொரு பெயர். விஷ யத்தை எது உள்ளபடி விளக்குகிறதோ அது வேதம். எல் லார்க்கும் அது விளங்காது. எது மறைத்து வைத்திருக் கிறதோ அது மறை. வேதம் அல்லது மறை என்று மொழியுங் கால் நாம் இரண்டு கருத்துக்களை வெளியிடுகிறோம். ஐதிக மாக வந்துள்ள நூல்களை வேதமென்கிறோம். பின்பு இயற்கை யையே வேதம் என்று விளம்புவது மரபு. இயற்கை என்னும் வேதம் தன் சொரூபத்தை ஓயாது விளக்கிக் கொண்டிருக் கிறது. அதை அறிந்து கொள்ளாதவர்களிடத்து அது மறைந் தும் இருக்கிறது. எனவே இயற்கைக்கு வேதம் என்னும் பெயரும் மறை என்னும் பெயரும் முற்றிலும் பொருத்த மானவைகளேயாம். இனி, வேதம் அழிவற்றது என்கிறோம். நூலொன்று அழிந்து போகக்கூடும். ஆனால் இயற்கை என் றைக்கும் அழிந்து போவதில்லை. ஆதலால் அதை என்றைக் கும் அழியாத வேதம் என்று சொல்லலாம். எழுதி வைத்த நூல் என்னும் வேதத்தை முறையாக ஆராய்ச்சிசெய்துபார்த் தால் அது அழிவற்றதாயிருக்கும் மெய்ப்பொருளையேவிளக்கு கிறது. அக்காரணத்தை முன்னிட்டு தெள்ளி மறை வடி யிட்ட அமுதப்பிழம்பே என்று தாயுமானவர் போற்றுகிறார். இனி, இயற்கையை வேதமாகக் கருதுகின்ற இடத்தும் இக் கூற்று முற்றிலும் பொருத்தமுடையதாகிறது. இக்காலத்திய

பௌதிக விக்ஞானிகள் இயற்கையைத் தெள்ளித் தெள்ளி ஆராய்கின்றனர்; துருவித் துருவி ஆராய்கின்றனர். அந்த ஆராய்ச்சியின் விளைவு அற்புதமானது. பருப் பொருள்களெல்லாம் நுண் பொருள்களாக மாறுகின்றன. நுண் பொருள்கள் அணுக்களாகக் காட்சியளிக்கின்றன. அணுக்களோ பரமாணுக்களாக வடிவெடுக்கின்றன. இந்தப் பரம அணுக்களும் முடிவில் அழிவையெல்லாம் கடந்துள்ள பேரறிவின் தோற்றங்களாக இருக்கின்றன. தெள்ளிமறை வடியிட்ட அமுதப்பிழம்பே என்னும் கூற்று பௌதிக விக்ஞானிகளுடைய ஆராய்ச்சிக்கும் அவர்கள் கண்டறிந்த முடிவுக்கும் முற்றிலும் ஒத்ததாயிருக்கிறது.

அடுத்தபடியாக தெளிந்த தேனே என்று பரம் பொருளை நம் பெம்மான் போற்றுகிறார். தெளிந்த தேன் முற்றிய தேன் எனப் பொருள்படுகிறது; முற்றிய தேனில் நலமனைத்தும் நிறைந்திருக்கிறது; கேடு ஒன்றுமில்லை. நலமுடையான் கேடு இல்லான் என்று கடவுளைப் பகர்கிறோம். முற்றிய தேனையும் நலமுடையது கேடற்றது என்று கூறலாம். தேனை மது என்று மொழிகிறோம். மது வித்யா என்றால் பரம்பொருளைப்பற்றிய ஞானம் எனப்பொருள்படுகிறது. அந்த ஞானம் தித்திக்கும் தேனுக்கு ஒப்பானது. அது மரணமென்னும் கேடில்லாப் பெருவாழ்வை வழங்க வல்லது.

தேன் ஒருவிதத் திராவகமாக ஒரு பாண்டத்தில் இருக்கிறது. அதனுள் தேனீ வந்துஅமர்ந்தால் தனக்கு நல்லுணவாயிருப்பதிலேயே அது மூழ்கிப்போய்விடும். ஆனால் தெளிந்த தேன் உறைந்து சீனியாய்விடுவதுண்டு. அப்பொழுது அதன்மீது தேனீ அமர்ந்தால் அதற்குக் கேடு ஒன்றும் வாராது. பரவித்தை அச்சீனிக்கு ஒப்பானது என்னும்

கருத்தை விளக்குதற்கு சீனியே என்று இறைவனை அவர் அழைக்கிறார்.

சீனியை மெல்லவோ விழுங்கவோ முடியாதவர்கள் பொருட்டு அதற்கு வெப்பம் தந்து அதைப் பாகாக மாற்றி விடலாம். உணவின் சாரமனைத்தும் அதில் பொருந்தி யிருக்கிறது. பிறவிப்பிணியில் வருந்தும் மனிதனுக்கு பார மார்த்திகப் பெருநிலையை வழங்குவது போன்றது மது. அவன் எந்நிலையிலிருந்தாலும் அதையேற்றுப் பயன்படுத் தக் கூடியவனாகிறான். இக்கருத்துக்களையெல்லாம் திவ்ய ரசம் யாவும் திரண்டொழுகு பாகே என்னும் அடியில் வைத்து அண்ணல் இயம்புகிறார்.

உலகிலுள்ள பொருள்களெல்லாம் உலகத்தவர்களுக்கு ஆனந்தத்தை ஊட்டிக்கொண்டிருக்கின்றன. அனைவர்க்கும் ஒவ்வாதது என்று சொல்லப்படும் பொருள் உலகிலில்லை. பின்பு அத்தனை பேருக்கும் துன்பத்தைத் தரும் பொருள் என்று நாம் எதையும் சொல்லமுடியாது. ஒவ்வொரு பொரு ளும் ஏதேனும் ஒருவிதத்தில் உலகத்தவர்க்கு ஆனந்தத்தை ஊட்டிக்கொண்டிருக்கிறது. ஆனால் அதில் ஒரு குறைபாடு உண்டு. அது தெவிட்டுகிற ஆனந்தம். பஞ்சேந்திரியங்கள் மூலமாக நுகரும் ஆனந்தங்களெல்லாம் ஓரளவுக்கு மேல் போய்விட்டால் அவை தெவிட்டுகின்றன. ஆனால் இறைவ னோடு வைக்கிற இணக்கத்தினின்று ஊற்றெடுத்துவரும் ஆனந்தம் அத்தகையதன்று. அதைத் தெவிட்டாத ஆனந் தமே என்று அண்ணல் அழைக்கிறார். இறைவனும் அவ ரிடத்திருக்கும் தெவிட்டாத ஆனந்தமும் ஒன்றேயாம்.

உலகத்தவர்களோடு நாம் உறவாடுகிறோம். ஆனால் அந்த உறவுக்கு வரம்பு ஒன்று உண்டு. மறதியாலும் மயக்

த்தாலும் உறக்கத்தாலும் மரணத்தாலும் அது பிரிக்கப் படுகிறது. பிறகு அது பிரிவுபட்டுப் போவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஒருவனிடம் வருகின்ற உறவினனை அவன் தொடர்ந்து பல நாளைக்கு மதியாது பராமுகமாயிருந்துவிடுவானாகில் அந்த உறவு பிளவுபட்டுப் போய்விடும். மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம் என்னும் முதுமொழி உலகத்தவர் இயல்பை முன்னிட்டே வந்துள்ளது. ஆனால் இந்த உறவுகளுக்கெல்லாம் மேலான உறவு ஒன்று உண்டு. அந்த உறவையே நாம் இறைவன் என்கிறோம். எங்கும் நிறைபொருளாகிய அவர் நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறார். ஆனால் நாம் அவரை மறந்தும் மறைத்தும் புறக்கணித்தும் வைப்பதால் நாம் கள்ளனாகிறோம். இருக்கிற பொருளொன்றை இல்லை என்று சாதிப்பது கள்ளனுடைய செயல். பல ஜன்மாந்திரங்களில் நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் கடவுளைப் புறக்கணித்தே வந்திருக்கிறோம். அப்படி நாம் செய்கிற கள்ளச் செயலை முன்னிட்டு அவர் நம்மைவிட்டு விலகிப் போய்விடுகிறாரா? அது கிடையாது. நாம் அவரை மதியாது இருக்கிறபொழுதும் நம் உள்ளத்தினுள்ளேயே அவர் குடிகொண்டிருக்கிறார். தக்க தருணங்களும் சந்தர்ப்பங்களும் வாய்க்குங்கால் 'பழம் பொருளாகிய நான் மனச்சாட்சியாக உன் உள்ளத்தினுள்ளே குடிகொண்டிருக்கிறேன்' என்று அவர் நமக்கு ஞாபகமூட்டுகிறார். அதுமட்டுமல்ல, பல்கோடி ஜன்மங்களில் நாம் செய்துள்ள குறைகளையும் குற்றங்களையும் பொருள் படுத்தாது நம்மோடு உறவாட அவர் யாண்டும் ஆயத்தமாயிருக்கிறார். தம்முள் நம்மைக் கலக்கிக்கொள்ள அவர் எப்பொழுதும் காத்துக்கொண்டிருக்கிறார். அத்தகையவரையன்றோ நல்ல உறவு என்று உரைக்கவேண்டும்! அதைத்

தான் கள்ளன் அறிவூடு மெள்ள மெள்ள வெளியாய்க் கலக்க வரும் நல்ல உறவே என்கிறார் தாயுமானவர்.

கனவில் பெரியமலை ஒன்றைக் காண்கிறோம். அந்த மலை பெரியதா? அதைக் காணலுற்ற மனது பெரியதா? கனவில் கண்ட மலை மனதில் அடங்கியது. எனவே அந்த மலையினும் மனதே பெரியது. விழித்திருக்கும்பொழுது பிரபஞ்சத்தை மனதில் காண்கிறோம். ஆதலால் பிரபஞ்சத்திலும் பெரியது மனது. உணரும்தன்மை இந்த மனதுக்கு இருக்கிறது. ஆனால் அத்தகைய உணர்ச்சியை அது ஆத்மாவிடத்திருந்து பெற்றிருக்கிறது. ஆத்மாவுக்கு அன்னியமாக மனதுக்கு இருப்பிடமோ உணர்வோ இல்லை. ஆதலால் ஆத்மா மனதிலும் பெரியது. ஆத்ம சான்னித்தியத்தால் மனது உணரப்படுகிறது. ஆனால் ஆத்மாவை உணரும் வல்லமை மனதுக்கில்லை. கண்கொண்டு ஜீவன் புறஉலகைக் காண்கிறான். ஆனால் அந்தக் கண் ஜீவனைக்காணப் பயன்படாது. அப்படி மனது ஆத்மனைக்காண உதவுவதில்லை. ஆத்மாவுக்கு சிதாகாசம் அல்லது சித்சபை என்பது மற்றொரு பெயர். அந்த சித்சபையில் பிரபஞ்சம் அனைத்தும் ஒடுங்கிவிடுகிறது. அக் காரணத்தை முன்னிட்டு கருதரிய சிற்சபை என்று அதை அண்ணல் அழைக்கிறார். அந்த சித்சபையாகவும் அதில் ஆனந்தத் தாண்டவம் ஆடுபவராகவும் அப்பரம்பொருள் ஒருவரே இருக்கிறார். அவருடைய ஆனந்தம் பிரபஞ்சமெங்கும் பிரதிபலிக்கிறது. அவ்வானந்தத்தைச் சொரிந்து அவர் உயிர்களை உய்விக்கிறார். ஆதலால் ஆனந்த நிர்த்தமிடு கருணாகரக் கடவுளே என்று இறைவனை அவர் விளிக்கிறார். இக்கருத்துக்கள் அடங்கிய பாடல் இதுவாம்.

கருணாகரக் கடவுள் - 9

உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பியூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஓருறவும் உன்னியுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடியா டிக்குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானேயவ் வானிலின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தியேத்துங்
கடல்மடை திறந்தனைய அன்பரன் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

தான் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கேற்ப ஒன்றோடு ஒன்று ஒவ்வாத மூன்று நிலைகளை மனிதன் எய்துகிறான். அம்மூன்று நிலைகளையும் முறையே ரோகம், போகம், யோகம் எனலாம். ரோகம் என்பது நோய் எனப் பொருள் படுகிறது. நோயானது உடலுக்கு உரியதாகவும் உள்ளத்துக்கு உரியதாகவும் இரண்டு வகைப்பட்டிருக்கிறது. உடல் வாழ்க்கையோ உள்ளத்தின் செயலோ முறைதவறிப் போய் விடுங்கால் நோய் தோன்ற ஆரம்பிக்கிறது. பல தடவைகளில் உடலை வாட்டும் நோயைவிட, உள்ளத்தை வாட்டும்

நோய் மிகக் கொடியது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆனால் நோயினின்று தப்பியிருப்பவர் யாரோ மிகச் சிலரேயாம். ரோகம் மனிதனுக்குத் துன்பத்தை விளைவிக்கிறது. துவக்கத்திலும் இடைநிலையிலும் முடிவிலும் பிணியானது மனிதனை அல்லல்படுத்திக் கொண்டேயிருக்கிறது. ரோகத்தை மனிதன் தேடுவதில்லை. ஆனால் தான் இழைத்த தவறுதலின் விளைவாக அது மனிதனைப் பற்றிப் பிடித்துக்கொள்கிறது. இந்த ரோகத்திலும் ஒருபடி மேலானது போகம். ஐம்பொறிகளைக் கருவியாகக்கொண்டு மனிதன் பெறும் இன்பத்துக்கு போகம் என்று பெயர். போகம் இன்பமாகத் துவங்குகிறது. பிறகு அது துன்பமாக முற்றுப் பெறுகிறது. அப்படி அது துன்பமாக முடிந்து விடுகிறபடியால் அது சிற்றின்பம் என்று சொல்லப்படுகிறது. இந்திரிய சுகம் ஒவ்வொன்றும் துக்கமாகவே முற்றுப்பெறுகிறது. ஆக, துக்கம் என்னும் விலைகொடுத்து போகத்தை மனிதன் வாங்குகிறான். விலை எவ்வளவு பெரியதாயிருப்பினும் அதை மனிதன் பொருள்படுத்துவதில்லை. தினையளவு இன்பத்துக்குப் பல தடவைகளில் பனையளவு துக்கம் என்னும் ஈடு கொடுத்தேயாகவேண்டும். அப்படி ஈடு கொடுத்தாவது சிறிது இந்திரிய சுகத்தைப்பெற மனிதன் படாதபாடுபடுகிறான். இந்த போகத்திலும் பெரிய நிலையில் இருப்பது யோகம். இதனிடத்துச் சிறப்பு அனைத்தும் உண்டு; சீர் கேடு ஒன்றும் இதில் இல்லை. யோகத்தில் பிரவேசிக்கும் ஆத்ம சாதகன் துவக்கத்திலும் இடைநிலையிலும் இறுதியிலும் இன்பத்தையே துய்க்கிறான். அந்த இன்பம் தெவிட்டாததாயிருப்பதாலும் ஒருபொழுதும் துக்கமாக வடிவெடுக்காதிருப்பதாலும் அது பேரின்பம் எனப்படுகிறது. இப்படிப்பட்ட ரோகம், போகம், யோகம் ஆகிய மூன்றும் மனித

னுக்கு வாய்க்குங்காலை அவனுடைய உடலிலும் உள்ளத்திலும் பெரும் மாறுதல்கள் உண்டாகின்றன. வெளித்தோற்றத்துக்கு அம்மாறுபாடுகள் ஒரே தன்மையுடையவைகள் போலத் தென்படுகின்றன. ஆனால் அவைகளினின்று விளையும் பயன் ஒன்றோடொன்று சம்பந்தப்படாதவைகள். யோகமானது பக்தியோகம் என்னும் சிறப்பியல்பைப் பெறுவதுண்டு. பக்தியோகத்தில் மூழ்கியிருக்கும் பக்தன் ஒருவனுக்கு மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களில் பெரும் மாறுதல்கள் அமைகின்றன. அதேபோன்ற மாறுதல்கள் போகத்தில் துய்ப்பவனுக்கும் ரோகத்தில் வருந்துகின்றவனுக்கும் வாய்க்கின்றன. ஆயினும் அவைகள் உண்டுபண்ணும் வேறுபட்ட விளைவுகளை விளக்கிக்காட்டுவதற்கேற்ற பாடல் ஒன்றைத் தாயுமானவர் பாடியுள்ளார். அதிலடங்கியுள்ள நுண்ணிய விஷயங்களை ஆராய்வோம்.

உடல் குழைய என்று அவர் துவக்குகிறார். நோய் வாய்ப்படுகின்றவனுக்கு உடல் வாடுகிறது. சிற்றின்பம் துய்க்கின்றவனுக்கு உடல் வாடுகிறது. பக்தி என்னும் பேருணர்வு அடையப் பெறுகிறவனுக்கு உடல் வாடுகிறது. ஆனால் மூவித வாட்டங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படாதவைகள். நோயால் வரும் உடல் வாட்டம் எழிலை அகற்றிவிடுகிறது. போகத்தால் வரும் உடல் வாட்டம் தாற்காலிகமாக உடலுக்கு எழிலைக் கொடுத்துப் பிறகு அதை எடுத்துவிடுகிறது. பக்தியோ உடலைத் திருத்தியமைத்து அதன்கண் பொலிவைப் பெருக்குகிறது. காயானது பழுக்கும்பொழுது சிறிது வாட்டமுற்றதாக ஆய்விடுகிறது. ஆனால் அதில் புதிய அழகும் சுவையும் உருவெடுக்கின்றன. பக்தியோகத்தில் வரும் உடல் வாட்டம் உடலுக்குப் புதிய உறுதியைக் கொடுக்கிறது. கொழுத்த காளை சிறிது மெலியுமானால்

வண்டிச் சவாரிக்கு நன்கு பயன்படுகிறது. கொழுத்த உடல் அருள் உணர்விலே சிறிது மெலியுமாகில் அதில் தேஜஸ் என்னும் சுடர்நிலை உண்டாகிறது. அத்தகைய வாட்டம் ஆத்ம சாதகனுக்கு முற்றிலும் தேவையானது.

என்பு எல்லாம் நெக்கு உருக என்று அடுத்தபடியாக அவர் இயம்புகிறார். நோய் உடலைத் தாக்கும்பொழுது எலும்பே தேய்கிறது. அதன் வலிவு குறைகிறது. போகத்தில் மனிதன் ஈடுபடுகிறபொழுது எலும்பானது குறையவும் வளரவும் மாறி மாறிச் செய்கிறது. போகத்தில் ஈடுபடுவதற்கேற்ப மனிதன் நல்லுணவை வழங்கிக்கொண்டேயிருக்க வேண்டும். நோய்வாய்ப்பட்டிருப்பவன் அளவுக்கு மீறி உணவை ஏற்க முடியாது. போகத்திலிருப்பவன் மிகைபட உண்கிறான். உண்ட உணவு எலும்பு மயமான பிறகும் அது தேய்க்கப்படுகிறது. பின்பு பக்தனோ போகிபோன்று உணவை மிகைபட உண்பதுமில்லை; ரோகிபோன்று குறைபட உண்பதுமில்லை; அளவெடுத்தாற்போன்று அருந்துகிறான். அதிலிருந்து வரும் பிராணசக்தி அவனுடைய எலும்பினுள்ளே ஊடுருவிப் பாய்ந்து அதை அருள் நிறைந்ததாக்குகிறது. வெளித்தோற்றத்துக்கு வாயிற்படியிலிருக்கும் கல்லும் கோயிலினுள் மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் கல்லும் ஒன்றே. ஆனால் வாயிலிலிருக்கும் கல் அருள் சுரந்தது அல்ல, மூர்த்தியாக அமைந்திருப்பது அருள் சுரந்தது என்பது ஆன்றோர்களுடைய அனுபவம். அப்படி அருள் உணர்வின் விளைவாக பக்தனுடைய எலும்புகளெல்லாம் தமது ஸ்தூல வடிவங்களை விளக்குவதைவிட அருள் நிலையை நன்கு விளக்குகின்றன. அருள் மயமாக நெகிழ்ந்து உருகியிருப்பவைகள் போன்று என்புகள் காட்சி கொடுக்கின்றன.

விழி நீர்கள் ஊற்று என வெதும்பி ஊற்ற என்று மேலும் அண்ணல் இயம்புகிறார். ரோகி, போகி, யோகி ஆகிய மூவரும் கண்ணீர் சிந்துகின்றனர். நோயாளி சிந்துவது முற்றிலும் துன்பக்கண்ணீர். நோயின் கொடுமைக்கு ஏற்ப அவன் சிந்தும் துன்பக்கண்ணீரும் அதிகரிக்கிறது. போகி சிந்தும் கண்ணீர் இன்பக்கண்ணீராகத் துவங்கி துன்பக்கண்ணீராக முடிவுறுகிறது. தான் துய்த்த இன்பம் கனவுபோன்று மறைந்து போனதைக்குறித்தும் அவன் கண்ணீர் சிந்துகிறான். அச்சிற்றின்பம் மறுபடியும் தனக்கு வந்து வாய்க்கவேண்டும் என்று கவலையுற்றுத் துன்பக் கண்ணீரைக் கொட்டுகிறான். ஆனால் பக்தியில் திளைத்திருக்கும் யோகிக்கோ யாண்டும் இன்பக்கண்ணீரே வாய்த்துள்ளது. பூமிக்குள்ளிருந்து நன்னீர் ததும்பிக்கொண்டு ஊற்றெடுத்து வெளியே வருவது போன்று பக்தனுடைய இருவிழிகளினின்றும் இன்பக் கண்ணீரானது ஊற்றெடுத்துத் ததும்பிக் கொண்டு வெளியில் தாவுகிறது. உள்ளிருக்கும் துன்பத்தையோ அல்லது இன்பத்தையோ வெளிக்கிளம்பும் கண்ணீர் காட்டிவிடுகிறது. இன்பம் கலவாத துன்பக் கண்ணீர் நோயாளியினுடையது. இன்பமும் துன்பமும் மாறி மாறி அமைந்துள்ளது போகத்தில் பிரவேசிப்பவனுடையது. துன்பம் கலவாத பேரின்பத்தினின்றே பெருக்கெடுத்து வருவது பக்தனுடைய விழிநீர். ஆக, இம்மூன்று நிலையிலிருப்பவர்களுக்கும் விழிநீர் வெளித்தோற்றத்துக்கு வருகிறது எனினும் அவ்விழிநீரின் விளைவுகள் வெவ்வேறு வகைப்பட்டவைகளாம்.

இனி ஊசி காந்தத்தினைக் கண்டு அணுகல் போல என்னும் உபமானம் ஒன்றை அவர் எடுத்துக் கொள்கிறார். தரையில் கிடக்கும் ஊசி ஒன்று தன்போக்கில் எப்படி

வேண்டுமானாலும் கிடக்கும். ஆனால் காந்தக்கல்லை அருகில் கொண்டு வந்ததும் அதன் தன்மை மாறிவிடுகிறது. தன்னிடத்தில் காந்தம் இல்லாததற்கு எப்படியோ காந்தம் புதிதாக வந்துவிடுகிறது. அப்படித் தன்னிடத்துக் காந்தத்தைக் கிளப்பிவிட்ட காந்தக் கல்லோடு ஒன்றுசேர அந்த ஊசி பெருமுயற்சி எடுத்துக்கொள்கிறது. இடையில் எப்பொருள் வந்து குறுக்கிட்டாலும் அதை மீறிக்கொண்டு காந்தத்தோடு சேர்ந்துவிட அது முயலுகிறது. கடவுள் நாட்டம் கொண்டுள்ள மனதுக்கு வருகிற நிலை அத்தகையது.

ஓர் உறவும் உன்னி உன்னி என மேலும் அவர் இயம்புகிறார். மற்ற உறவுகளுக்கெல்லாம் மேலாகி தலைசிறந்த உறவாகவிருக்கும் உன்னை நினைந்து நினைந்து என இச்சொல் தொடர் பொருள்படுகிறது. துன்ப நோயில் வருந்தும் ஒருவன் தன்னைவிட்டு மரணத்தின் வாயிலாகப் பிரிந்துபோன நண்பன் ஒருவனைக் குறித்து அவன் உயிர் வாழ்ந்திருந்தால் தனது நோயை நீக்குதற்குப் பெரிதும் துணைபுரிந்திருப்பான் என்று எண்ணி யெண்ணி வருந்துவதுண்டு. அத்தகைய வருத்தத்தால் அவனுடைய நோய் மேலும் அதிகரிக்கிறதே யொழிய அது நீங்குவதில்லை. இனி, காதலன் ஒருவன் தன் காதலிக்கு நிகரான உறவு உலகில் யாருமில்லையென்று அம்மடந்தையைப் பற்றியே சர்வகாலமும் மனனம் பண்ணிக்கொண்டிருக்கிறான். அதனால் அவன் பந்தபாசத்தை அதிகப்படுத்துகிறான். அதிவேகத்தில் அப்பற்றில் ஆழ்ந்து ஊறிப்போகிறான். அப்படி அவன் எண்ணுகிற எண்ணத்தில் மின்னல் போன்று சிறிதளவு இன்பமும் கார்மேகம் போன்று பெருந்துன்பமும் பொதிந்துள்ளன. பின்பு பக்தனோ தனக்கு ஒப்பற்ற உறவு ஆக கடவுள் ஒருவரையே ஓயாது நினைந்துகொள்கிறான். மற்ற

நண்பர்களெல்லாம் அந்தந்தப் பிறவியில் சேரவும் பிரியவும் செய்கின்றனர். கடவுளோ எண்ணிறந்த பிறவிகளெடுக்கும் உயிர்களுக்கு மாருத பந்துவாக யாண்டும் இருக்கிறார். பிறவிப் பெரும்பிணியைத் தாண்டி பரகதியடையுங் காலையி லும் அவர் ஒருவரே துணையாயிருக்கிறார். துன்பங்களனைத் தையும் துடைப்பதற்கு அவர் ஒருவரே உறுதுணையாகிறார். ஆக, அவர் ஒருவரை மட்டும் ஓர் உறவு என்று உன்னுவது முறை. மற்ற உறவுகளெல்லாம் காலத்தில் தோன்றி காலத் தில் மறைந்துபட்டுப் போய்விடுகின்றன. பக்தனுக்கு சர்வ துக்க நிவர்த்தி செய்து பேரானந்தப் பிராப்தியை நல்கி சர்வகாலமும் அவர் உயிருக்குயிராய் இருக்கிறார்.

படபடென நெஞ்சம் பதைத்து என்று அண்ணல் மேலும் இயம்புகிறார். ரோகி ஒருவன் அச்சங்கொள்கிற பொழுதும் போகி ஒருவன் சிற்றின்பத்தை ஆவலோடு நாடு கிறபோழ்தும் பக்தன் ஒருவன் பரமனை அடைதற்குப் பேரா வல் கொள்ளுகிறபொழுதும் இந்த மூன்று தரத்தாருக்கும் நெஞ்சம் படபடவென்று அடிக்கிறது. ரோகியும் போகியும் அதனால் தளர்வுறுகின்றனர். ஆனால் யோகியோ நெஞ்சில் நிகழும் அச்செயலின் மூலம் உறுதி மிகப்பெறுகிறான்.

உள் நடுக்குற பாடி ஆடிக் குதித்து என்று அவர் மேலும் இயம்புகிறார். நோயைச் சகிக்கமுடியாது துன் பத்தை வெளிப்படுத்தும் பாடல்கள் பாடி வேதனையால் உடல் துள்ளிக்குதித்து ஆடுகிற நோயாளிகளை உலகில் காணலாம். அக்காட்சி காண்பதற்கு இனியதன்று. வாழ்க் கையில் தோல்வியுற்றிருப்பதற்கே அது அறிகுறியாகிறது. போகி ஒருவன் காதலின் மேலீட்டால் உள்ளம் நடுக்குறச் செய்வதும் பாடல்கள் பாடுவதும் மகிழ்ச்சியின் முதிர்ச்சி யால் குதித்து ஆடுவதும் செய்கிறான். இத்தகைய நிகழ்ச்சி

களால் அவன் இன்புறுபவன் போன்று தோன்றி இறுதியில் துன்பத்துக்கே ஆளாகிறான். ஆனால் யோகியின் நிலை அத் தகையதன்று. அவனுடைய உள்ளம் நடுக்குறுங்கால் பரம் பொருளின் தொடர்வு அவனுக்குக் கிட்டுகிறது. பேரானந் தத்தின் மேலீட்டாலேயே உடலின்கண் அத்தகைய நடுக் கம் வருகிறது. உள்ளம் உவகைகொள்ளும்பொழுது அது பாடலாகப் பொங்கி வெளியில் வருகிறது. அதற்குமேல் உடலைக்கொண்டு அவன் புரிகிற ஆனந்தத் தாண்டவம் அவன் எய்தியுள்ள பேரின்பத்தையெல்லாம் நன்கு விளக்கி விடுகிறது. இங்ஙனம் யோகி இயல், இசை, கூத்து ஆகிய மூன்றையும் கையாண்டு பிறவிப் பெரும்பயனை எய்துதலில் உச்ச நிலையில் இருக்கிறான். மற்ற இருவரும் படிப்படியாகக் கீழ்நிலையிலே வீழ்பவர் ஆகின்றனர்.

பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை பரப்பி ஆர்த்து ஆர்த்து எழுந்து என்று தாயுமானவர் இயம்பு கிறார். பனிமதி என்பது குளிர்ச்சி பொருந்திய சந்திரன் என்று பொருள்படுகிறது. அதனிடத்திருந்துவரும் வெளிச் சத்தை நிலவு என்கிறோம். குளிர்ச்சி பொருந்திய சந்திர னுக்கு ஒப்பாக இருக்கிறது யோகியினுடைய முகவிலாசம். அம்முகவிலாசத்தில் தோன்றும் புன்னகையோ, உதயமாகி வருகிற நிறை நிலாவுக்கு ஒப்பாயிருக்கிறது. இன்பத்தை நிறைநிலா வெளிச்சம் எங்கும் பரப்புவது போன்று பக்த னுடைய புன்சிரிப்பும் ஆனந்தத்தை அருகிலிருக்கும் அனைவ ருள்ளத்திலும் பரப்புகிறது. ஆனந்தம் அளவில் அடங்காத தாகிவிடுகிறபொழுது பாடலானது ஆரவாரமாக மாறிவிடு கிறது. ஆடலானது தாளம் முதலியவைகளில் அடங்காத தாகிவிடுகிறது. இந்த நிலை நோயாளிக்கு ஒருபொழுதும் உண்டாவதில்லை. போகத்தின் ஒரு பகுதியாயிருப்பது கள்

குடி. குடிகாரன் ஒருவனுக்கு குடியின்வெறி அதிகரிக்கிற பொழுது அவன் ஆனந்தமாக ஆரவாரம் செய்கின்றான். ஆனால் அவன் முகத்தில் ததும்பும் ஆனந்தம் தெய்விகம் நிறைந்ததன்று. மயக்கத்தின் மேலீட்டால் அது வருகிறது; மற்றவர்கள் உள்ளத்தில் ஒருவிதமான அருவருப்பை அது உண்டுபண்ணுகிறது. ஆனால் பக்தனிடத்துத் தென்படுகிற இந்த அறிகுறிகள் அந்த பக்தன் ஒருவனை மட்டும் உயர் நிலைக்கு உயர்த்துவதன்று; அவனோடு தொடர்புகொள்ளு கிற மற்ற உயிர்களையெல்லாம் அவனுடைய பேரானந்தப் பெருநிலை தூய்மைப்படுத்துகிறது. பக்தியின்கண் மற்றவர் களையும் அது கூட்டிக்கொள்கிறது. பக்தி இன்னதென்று அறியாதவர்களுக்கு அது தெற்றென விளங்கிவிடுகிறது. உலகுக்கு பக்தன் வழங்கும் அருள்விருந்து அதுவேயாம்.

மடல் அவிழும் மலர் அனைய கைவிரித்துக் கூப்பி என்று மேலும் மொழியப்படுகிறது. மடல்கள் குவிந்து ஒட்டியிருக்கும் பொழுது எது அரும்பு என்று அழைக்கப் படுகிறதோ அது மடல் அவிழ்ந்த நிலையில் மலர் ஆகிறது. மலர் என்னும் சொல் விரிந்தது எனப் பொருள்படுகிறது. நல்லாருடைய கையும் தெய்வத்தினுடைய கையும் விரிந்த மலரோடு ஒப்பிடப்படுகின்றன. மடல் அல்லது இதழ் விரிந்திருக்கிறபொழுது மலருக்கு மணமும் அழகும் வந்துவிடு கிறது. சான்றோர்களுடைய கை நலம் புரிதலிலேயே ஈடு பட்டிருப்பதால் அதனிடத்து அழகு அமைவதாகிறது. தெய்வ வழிபாட்டில் தங்களுடைய கைகளை விரிக்கவும் கூப்பவும் அன்னவர் செய்கின்றனர். அத்தகைய அரிய செயல் ரோகி களிடத்தோ போகிகளிடத்தோ நிகழ்வதில்லை. ஆக, இச் சொல்லடுக்கு அவ்விருதரத்தாருக்கும் பொருந்தாது. கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் நல்லார்க்கே இது முற்றிலும்

பொருந்தும். இறைவனுடைய அருளை விண்ணப்பித்து வேண்டும்பொழுது கை விரியச் செய்கிறது. அவரை வணங்கும்பொழுது கைகூப்புதல் நிகழ்கிறது. மனிதன் கையைப் படைத்திருப்பதன் பயன் முழுதையும் கடவுள் வழிபாட்டில் பெறுவதால் கைக்கு இத்தகைய உயர்வு வருகிறது. இனிய உபமானத்தைக்கொண்டு அதன் அரிய செயலை விளக்குவது முற்றிலும் பொருத்தம்.

இனி, வானே அவ்வானின் இன்பமழையே மழைத் தாரை வெள்ளமே என்று இறைவன் சான்றோரால் வாழ்த்தப்படுவது ஈண்டு தாயுமானுரால் மொழியப்படுகிறது. கடவுள் உருவத்திலும் அருவத்திலும் நிலைபெற்றிருக்கிருர். அருவமாயிருக்கும் அப்பெரிய பொருளை வானே என்று விளிப்பது முற்றிலும் பொருத்தமானது. வானமானது யாண்டும் நமது காட்சிக்கு எட்டக்கூடியது. பகலிலும் அதைக் காணலாம். இரவிலும் காணலாம். அதன்கண் பகலில் ஒருவிதப் பண்பு பொலிகிறது. இரவில் மற்ருெரு விதப் பண்பு பொலிகிறது. நம் காட்சிக்கு எட்டும் இயற்கைப் பொருள்களுள் வானம் ஒன்றே அசைவு அற்றதாயும் நிலைபேறு உடையதாகவும் இருந்துவருகிறது. வெட்ட வெளியிலே தமது மனதைச் செலுத்துகிறவர்கள் பரம்பொருளின் பெருநிலையிலே தமது மனதைச் செலுத்துபவர் ஆகின்றனர். ஆகாசத்தைச் சிந்தையில் வைப்பதே ஒருவித வழிபாடு ஆகிறது. இந்த ஜட ஆகாசத்தைப் போன்றது சித் ஆகாசம். சித் ஆகாசத்தைச் சிதம்பரம் என்கிரோம். உருவத்தையெல்லாம் கடந்த அறிவுப் பெருவெளியென அது பொருள்படுகிறது. அது நிர்க்குண நிராகாரப் பிரம்மம். உருவமற்ற வானத்தினின்று திடீரென்று மேகம் தோன்றி இங்கு அது மழையாக மாறுகிறது. மழையாக அது மண்

னுலகுக்கு வருங்கால் உயிர்களுக்கு அது இன்பத்தை அளிக்கிறது. அருவமாயுள்ள பரம்பொருளே உருவமாக எப்படி மாறியமைகிறார் என்பதற்கு வானத்தினின்று பொழியும் இன்பமூட்டும் மழை நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. மழையானது பெருமழையாகப் பொழியுங்கால் தாரை தாரையாக அது தரணியில் வந்து படுகிறது. தரையில் பட்டான பிறகு புரண்டு நீர்ப்பெருக்காகப் பாய்கிறது. அப்படிப் பாய்கிற நீர்ப்பெருக்கானது நிலத்தில் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள உயிர்களை யெல்லாம் உய்விக்கிறது. உ யி ர் க ளை உய்விக்கும் செயலைப் பெய்யும் மழை கண்கூடாகச் செய்து காட்டுகிறது. மற்று, உய்வித்தல் என்னும் செயலை இறைவன் கட்புலனாகாது செய்து வருகிறார். மழையானது உலகுக்கு உயிர் ஊட்டுத லில் ஓரளவு உண்மையிருக்கிறது. ஆனால் இறைவன் செய்கிற உயிர் ஊட்டும் செயலோ ஒப்பற்றது. அவருக்குப் புறம்பாக உயிர் என்பது கணப்பொழுதும் இருக்கமுடியாது. சூரியனிடத்திருந்து வெளிச்சம் யாண்டும் வந்துகொண்டிருப் பது போன்று கடவுளிடத்திருந்தே உயிர்வாழ்வன அனைத் தும் தமது உ யி ரை ப் பெற்றுள்ளன. இக்கருத்துக்கள் யாவும் மழைத்தாரை வெள்ளமே என்னும் சொல்லடுக்கில் புதைந்து கிடக்கின்றன.

நீடூழிவாழி என்று ஆன்றோர்கள் பரம்பொருளைப் போற்றுகின்றனர். கடவுள் நித்தியவஸ்து. அழிவு என்பது அவருக்கு இல்லை. தோன்றுதல் மறைதல் என்னும் நிகழ்ச்சிகளும் அவரிடத்தில்லை. அத்தகையவரைக் குறித்து நீடூழி வாழி என்று திருப்பல்லாண்டு பாடிப் போற்றுதலில் புதுமை என்ன இருக்கிறதென்று நாம் ஐயங்கொள்ளலாம். பரம் பொருள் எத்தகைய நிலையில் இருக்கிறாரோ அதை ஆத்ம

சாதகர்கள் அறிந்துகொள்ளுதலாலும் அறிந்துகொண்டதைச் சொல்லால் விளக்குதலாலும் தாங்களே அந்த அழிவற்ற நிலையை அடையத் தகுதியுள்ளவர் ஆகின்றனர். கடவுளின் சொரூபத்தை இன்னதென்று விளக்குதலே ஒரு வித வழிபாடு ஆகின்றது.

காண்பதற்கரிய கடவுள் யாருடைய காட்சிக்கு எளியவராகிறார் என்னும் கேள்வி எழக்கூடும். அக்கேள்விக்கு விடையாக கடவுளை நீடூழிவாழி என வாழ்த்தி ஏத்தும் கடல் மடை திறந்து அனைய அன்பர் அன்புக்கு எளியை என்று தாயுமானவர் விடை கொடுக்கிறார். ஏதேனும் ஓரிடத்தில் கடலானது உயரத்திலும் தரையானது அதைவிடக் கீழான மட்டத்திலும் இருக்குமாகில் ஆங்குக் கடலைக் கரை கட்டி அணைபோட்டுத் தடுத்து வைத்திருக்கவேண்டும். நீருக்குத் தேவை ஏற்பட்டால் அந்தக் கடலின் மடையைத் திறந்துவிடவேண்டும். பின்பு ஓய்வில்லாது கடலிலிருந்து நீர் பொழிந்துகொண்டிருக்கும். பரம்பொருளைப் பெரியோர்கள் போற்றும் விதம் அத்தகையது. கடவுளின் பெருமையைப்பற்றிய கருத்துக்களும் கடல் போன்றவைகள். அக்கருத்துக்களை விளக்கும் சொற்களும் கடல் போன்றவைகள். சொல்லைக் கருவியாக வைத்துக்கொண்டு கடவுளின் பெருமை ஓயாது விளக்கப்படுகிறது. அப்படி வருகிற விளக்கத்தைக் கடலின் மடையைத் திறந்துவிடுவதோடு தான் ஒப்பிட வேண்டும். உள்ளத்தில் பேரானந்தம் பொங்குவதால் உவகை நிறைந்த சொற்கள் ஓயாது உதித்துக் கொண்டிருக்கின்றன. அத்தகைய பெருநிலையை அடையப் பெற்றவர்களுக்கே கடவுள் எளிதில் கிட்டுகிறார். யார் எதைப் பெறுதற்குப் பக்குவமுடையவர் ஆகிறார்களோ அதை அன்னவர்கள் எளிதில் பெற்றுவிடுவது இறைவ

னுடைய படைப்பில் ஏற்பட்டுள்ள நியதி. உயிர் வகைகள் அனைத்தும் வேறு வேறு நிலைகளில் இருந்துகொண்டு வேறு வேறு பேறுகளை எளிதில் பெற்று வருகின்றன. அதற்கெல்லாம் அவையாவும் தகுதியுடையவைகள் ஆகும்பொழுதே அப்பேறுகள் வந்து வாய்க்கின்றன. உயிர்களாகத் தோன்றியிருப்பவைகள் அடையும் பேறுகளுள் கடவுளை அடைதலே ஒப்பு உயர்வு அற்றது. அதற்கெனத் தங்களைத் தகுதியுடையவர்களாகச் செய்துகொண்டவர்களினுடைய பரிபாகம் இதுவரையில் விளக்கப்பட்டது.

பரிபாகம் அடைந்துள்ள பெருமக்களோடு தாயுமானவர் தம்மை ஒப்பிட்டுப் பார்க்கிறார். கல் நெஞ்சனுக்கு எளிமையோ? கல்லையொத்த ஜட நிலையில் இருக்கும் உள்ளத்தையுடைய அடியேனுக்கு இறைவா, தாம் எப்படி எளியவர் ஆவீர்! தாம் எளியவர் ஆகமாட்டீர். மனபரிபாகம் அடையாதவனுக்குத் தாம் புறம்பாயிருப்பதுவே முறை. உலையில் இட்டு உருக்கிய இரும்புக் குழம்பை எந்தக் கருவில் வேண்டுமானாலும் வார்த்து விதவிதமான வடிவங்களை அதற்குக் கொடுக்கலாம். ஆனால் சுரங்கத்தினின்று வெட்டியெடுத்தபடி கட்டி கட்டியாய்க் கிடக்கும் இரும்புத் தாதுவுக்கு எந்த வடிவத்தையும் கொடுக்க முடியாது. இறைவன்பால் தங்களை ஒப்படைத்து அருளில் இளகியவர்களுக்கு அவர் எளியவர் ஆகிறார். பக்குவப்படாதவர்களுக்கு அவர் எட்டுவதில்லை. இக்கருத்துக்கள் யாவும் இப்பாடலில் அடங்கியுள்ளன.

கருணாகரக் கடவுள்-10

இங்கற்ற படியங்கு மெனவறியு நல்லறிஞர்
எக்காலமும் உதவுவார்
இன்சொல்தவ ருர்பொய்மை யாமிழுக் குரையார்
இரங்குவார் கொலைகள்பயிலார்
சங்கற்ப சித்தரவ ருள்ளக் கருத்திலுறை
சாட்சிநீ யிகபரத்துஞ்
சந்தான கற்பகத் தேவா யிருந்தே
சமஸ்தஇன் பமும்உதவுவாய்
சிங்கத்தை யொத்தெனைப் பாயவரு வினையினைச்
சேதிக்க வருசிம்புளே
சிந்தா குலத்திமிரம் அகலவரு பானுவே
தீனனேன் கரையேறவே
கங்கற்ற பேராசை வெள்ளத்தின் வளரருட்
ககனவட் டக்கப்பலே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

ஒருவரையொருவர் அடையாளம் தெரிந்திருப்பதை நட்பு என்று நவிலலாகாது. அதற்குமேல் ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பேசிப் பழகுவதாலேயே நட்பு வந்துவிட்டது என்றும் சொல்லலாகாது. வாழ்வு பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டது. பிறருடைய சகாயத்தைப் பெறாது உலகில் யாருமே வாழ்ந்திருக்க முடியாது. சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் ஒருவன் மற்றவர்க்கு உபகாரம் செய்ய முன்வரவேண்டும். அப்படி உபகாரம் செய்கின்றவனே நல்ல நண்பன் ஆகிறான். பிறர்க்கு உதவிபுரிவதற்கே

நாம் மானுடப் பிறவியை எடுத்திருக்கின்றோம். செய்கிற உதவி பெரியதாகுமளவு வாழ்வு நன்கு பயன்படுகிறது எனலாம். உதவி செய்ய முன்வருகிறவனிடத்து மற்றொரு சிறப்பும் அமைந்திருக்க வேண்டும். விவேகமில்லாதவன் நல்லெண்ணத்தோடு உதவி செய்வதற்கிடையில் மற்றவர்களுக்கு அறியாமையினால் கேடு விளைவித்துவிடக்கூடும். நோயாளி ஒருவன் விரும்புகிற கேடுடைய பண்டங்களையெல்லாம் அவனுக்குத் தேடிக்கொடுப்பது உதவிபோன்றுதென்படுகிறது. ஆனால் அதன்மூலம் நோய் பன்மடங்கு அதிகரித்துவிடக்கூடும். அறிவு படைத்திருக்கிற ஒருவன் நோயாளி விரும்பியதை அவனுக்குக் கொடுக்கமாட்டான். எது அவனுக்கு நலம் செய்யுமோ அதையே அவன் எடுத்து வழங்குவான். எனவே ஒருவன் பெறும் நட்புகளுள் நல்லறிவு படைத்தவனுடைய நட்பு சாலச் சிறந்ததாகும். நல்லறிஞன் ஒருவன் சில வேளைகளில் உதவிபுரிவதற்கு மாறாக பேரிடைஞ்சலையே உண்டுபண்ணிவிடக்கூடும். அப்படி இடைஞ்சலாகத் தென்படுவது உண்மையில் பேருதவியே என்பது நாளடைவில் புலனாகும். மனிதனுக்குப் பிரியமானதைச் செய்வதுதான் உதவியென்று எண்ணலாகாது. பிரியமில்லாதது பல தடவைகளில் பேருதவியாக அமைந்து விடுவதுண்டு. நல்லறிஞரோ நலம் கேடு ஆகியவைகளைப் பாகுபடுத்தி நன்மை விளைவிப்பவைகளையே மற்றவர்களுக்கு எடுத்து வழங்கி உதவிபுரிவார்கள். அப்படி அவர்கள் செய்கிற உதவி குறிப்பிட்ட ஏதோ சில காலங்களில் மட்டுமல்ல, வாழ்வின் முழுதிலுமேயே மற்றவர்களுக்கு நிலைத்த நலனைத் தரக்கூடியவைகளை நல்கி நல்லுதவி செய்து கொண்டேயிருப்பார்கள். நல்லறிஞர்களுக்கிடையிலும் பாகுபாடு உண்டு. காலம், தேசம், வர்த்தமானம் ஆகியவைகளை

முறையாகப் பொருள்படுத்துகிறவர்களே நல்லறிஞர் ஆகின் றனர். வாழ்க்கையைப் பற்றிய பேருண்மை ஒன்று உண்டு. ஓரிடத்தில் எத்தகைய பண்பு படைத்தவனாக ஒரு மனிதன் விளங்குகிருனோ அவன் மற்றோரிடத்திலும் அதே பண்புடன் மிளிர்கிருன் என்பது உண்மை. இன்றைக்கு எத்தகைய பரிபாகத்துடன் ஒரு மனிதன் இருக்கிருனோ அதே பரிபாகத் துடன் அல்லது அதற்குச் சற்று ஏறத்தாழ நாளைக்கும் இருப்பான் என்று யூகிப்பது முறை. ஒரு சூழ்நிலையில் நல்ல வனாகவோ அல்லது கெட்டவனாகவோ நடந்துகொள்பவன் மற்றொரு சூழ்நிலையிலும் அப்படித்தான் நடந்துகொள்வான் என்று நாம் யூகிக்கவேண்டும். ஒரு மனிதனுடைய வாழ்வு இம்மையில் எப்படி அமைந்திருக்கிறதோ அப்படியே அது மறுமையிலும் அமையும் என்று அறிந்துகொள்ளுதல் நல் லறிவு ஆகும். இம்மையிலே நரக வேதனையை தங்களுக்குத் தாங்களே அறியாமையினால் உண்டுபண்ணிக் கொள்கிற வர்கள் மறுமையிலும் அதே பரிதாபகரமான நிலையில்தான் தங்களை வைத்துக்கொள்வார்கள். இம்மையிலே நிகழ்கிற நிகழ்ச்சிகளை யெல்லாம் நல்ல வாய்ப்புக்களாக ஏற்றுக் கொண்டு அவைகளைப் பயன்படுத்தும் விவேகிகள் மறுமை யிலும் அதே திறமையுடன் திகழ்வார்கள். காலம் எதுவா யினும், இடம் எதுவாயினும், சந்தர்ப்பம் எதுவாயினும் அவை யாவையும் அவரவர் பரிபாகத்துக்கேற்றபடியே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இகலோக வாழ்க் கையை நன்ருக நடாத்தத் தெரிந்துகொண்டவர்களே மறு மையிலும் நலன் அனைத்தையும் அடையப்பெறுபவர் ஆவர். அன்னவர்களையே நல்லறிஞர் என நாம் மொழியலாம். வாழ்க்கையைப்பற்றிய இப்பேருண்மையை நன்கு அறிந் திருப்பவர்கள் பிறர்க்குதவிபுரிய முற்படுங்கால் அவர்

களுக்கு இவ்வுலகிலும் அவ்வுலகிலும் நிலைத்த நலனைத் தரக்கூடியவைகளையே கொடுத்து உதவுவார்கள். இக் கோட்பாடுகள் யாவையும் தொகுத்து இங்கற்றபடி அங்கும் என அறியும் நல்லறிஞர் எக்காலமும் உதவுவார் என்று தாயுமானவர் இயம்புகிறார்.

செயல் மூலமாகப் பிறரோடு தொடர்வு வைப்பது போன்று பேச்சின் மூலமாகவும் மக்கள் பிறரோடு தொடர்வு வைக்கின்றனர். ஒருவரை யொருவர் அறிந்துகொள்ளுதற்கும் ஒருவரோடு ஒருவர் தொடர்வுகொள்ளுதற்கும் பேச்சு எவ்வளவுதூரம் பயன்படுகிறது என்பது சொல்லாமலேயே விளங்குகிறது. உடலுக்குச் சிகிச்சை செய்யுமளவு உடல் நோய் ஒழிகிறது. ஆனால் சிலவேளைகளில் உடலுக்கு ரண வைத்தியத்தின் மூலம் முதலில் துன்பத்தை அதிகப்படுத்தி பிறகு அது அறவே அகற்றப்படுகிறது. நல்லறிஞர் ஏதோ சில வேளைகளில் கடுஞ்சொற்களைக் கையாளவேண்டிய நெருக்கடி ஏற்படலாம். அவர்கள் வாயினின்று வரும் கடுஞ் சொற்களும் காலக்கிரமத்தில் மற்றவர்களுக்கு நலத்தையே உண்டுபண்ணும். ஆனால் பொதுவாக அவர்கள் வாயினின்று வரும் சொற்களெல்லாம் இனியவைகளாகவே இருக்கும். இவ்வுண்மையை, இன்சொல் தவறார் என்று தாயுமானவர் இயம்புகிறார்.

விரதங்களுள் மிகக்கடினமானது சத்தியவிரதம். சத்தியம் பேசுதலிலும் படித்தரங்கள் பல இருக்கின்றன. உலக வாழ்க்கையை ஒட்டிய சத்தியம் ஒருவிதமானது. மனிதனுக்கு நலத்தை விளைவிக்கக்கூடிய சத்தியம் அதிலும் ஒருபடி மேலே இருக்கிறது. மனிதன் கடவுளை அடைவதற்கு ஏதுவாயிருப்பது சத்தியத்தின் படித்தரங்களுள் உச்சத்தில் இருப்பதாம். உலக வாழ்க்கையை முற்றிலும்

நேர்மையாக நடாத்தித் தனது நலத்தில்கண்ணுங்கருத்துமாயிருப்பது போன்று பிறர் நலத்திலும் பிறர் ஊதியத்திலும் கண்ணுங்கருத்துமாயிருப்பது உலக வாழ்க்கையை ஒட்டிய சத்தியமாகும். ஐம்பொறிகளை மனிதன் முற்றிலும் நம்பிவிடலாகாது. அவைகளின் வாயிலாக வரும் இன்பங்கள் நிரந்தரமான இன்பங்கள் அல்ல என்பதைப்பற்றித் திரும்பத் திரும்ப வற்புறுத்துவதும் வாழ்க்கையில் அவ்வுண்மையைப் பழகுவதும் அறநெறியைப்பற்றிய சத்தியமாம். எக்காலத்திலும் உள்ளபடி இருப்பவர் கடவுள் ஒருவரே. ஏனைய யாவும் காலதேச வர்த்தமானத்தில் அடிபட்டுப் போய்விடுகின்றன என்பதை வாழ்க்கையில் நிலைநாட்டுவதும் சத்தியத்தைப் பின்பற்றுவதாகும். சத்தியத்துக்கு எதிரிடையாயிருப்பது பொய்ம்மை. மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களிலும் சத்தியத்தை அல்லது மெய்ம்மையை நிலை நிறுத்தவேண்டும். மெய்ம்மையோ வாழ்வைக் கோது இல்லாதது ஆக்குகிறது. அதற்கு மாருயுள்ள பொய்ம்மையோ வாழ்வைக் குற்றமுடையதாக்கிவிடுகிறது. நல்லறிஞர் பொய்ம்மைக்கு ஒருபொழுதும் உட்படுவதில்லை என்னும் கருத்தை பொய்ம்மையாம் இழுக்கு உரையார் என்று அண்ணல் இயம்புகிருர். திரிகரணங்களுள் வாய்க்கு உரியதை இயம்புகின்ற இடத்து காயத்துக்கும் மனதுக்கும் உரியவைகள் அதில் அடங்கிவிடுகின்றன.

நல்லறிஞரிடத்து மற்ருெரு சிறப்பு உண்டு. தங்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் இடையில் எந்தவிதமான வேற்றுமையையும் அவர்கள் உண்டுபண்ணுவதில்லை. உயிர்கள் பலப்பல எனினும் அவ்வுயிர்களுக்கிடையில் அவர்கள் வேற்றுமை பாராட்டுவதில்லை. ஓருயிர்க்கு நலனையும் இன்பத்தையும் தருவது மற்ற உயிர்களுக்கும் அதே நலத்தையும்

இன்பத்தையும் தருகிறது என்று அன்னவர் நன்கு உணருகின்றனர். தன்னைத்தானே கெடுத்துவிட யாரும் முற்படுவதில்லை. அவரவர் நலத்தில் எல்லோரும் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். நல்லறிஞர் நலம் செய்வதில் அதற்குமேல் ஒருபடி போகின்றனர். மற்ற உயிர்கள் அறிந்தோ அறியாமலோ தங்களுக்குத் தாங்களே கேடு சூழ்ந்து கொள்வார்களாகில் நல்லறிஞர் அதைப் பார்த்துச் சகிக்கமாட்டார்கள். மற்ற உயிர்களையும் நல்வழிக்குக் கொண்டுவர அவர்கள் முயலுவார்கள். பிறருடைய நலத்தில் பேரூக்கம் மிக அவர்கள் கொள்கின்றனர். அன்போடு இரங்குவர். அக்கருத்தை இரங்குவார் என்று தாயுமானவர் இயம்புகிறார்.

கொலைத் தொழில் ஒருபொழுதும் நல்லார்க்குரிய தன்று. கொலையில் பல படித்தரங்கள் இருக்கின்றன. ஸ்தூல உடலை அழித்துவிடும் செயல் ஒன்றை மட்டும் கொலையெனக் கருதுவார் உளர். ஆனால் நல்லறிஞர் கருத்துப்படி ஸ்தூல உடலை அழித்துவிடுவது பெருங் கொலையல்ல. ஒரு ஸ்தூல உடல் போனால் மற்றொரு ஸ்தூல உடல் வினைப்பயனாக வந்து வாய்ப்பது திண்ணம். ஒரு மனிதனுடைய மனதைக் கெடுத்துவிட்டால் அது பெரிய கொலைத் தொழில் ஆகிறது. கெட்டுப்போன மனது பல பிறவிகளில் கேடுடையதாகவே தொடர்ந்து போய்க்கொண்டிருக்கும். பிறர் முன்னேற்றத்திற்குத் துணைபுரியாதிருப்பதே கொலைத்தொழிலாகிறது. ஏனென்றால் முன்னேற்றமடையாது இருந்தபடி இருப்பதும் கீழ்நோக்கிப் போவதும் சாவதற்கு ஒப்பானவைகளாகின்றன. பிறர்க்கு நலன் செய்யாது தங்கள் சொந்தக் காரியத்தை மட்டும் கவனித்துக்கொண்டிருப்பவர்கள் இயற்கைத் திட்டத்தை அறியாது கொலைபுரிபவர்கள் ஆகிறார்கள்.

ஆனால் நல்லறிஞரோ பிறர்க்கு உபகாரம் செய்யாது ஒரு கணப்பொழுதும் இருக்கமாட்டார்கள். இக்கருத்தை **கொலைகள் பயிலார்** என்று தாயுமானவர் தெரிவிக்கின்றார். இவை யாவிலும் மேலாக, நல்லறிஞரிடத்து மற்றொரு சிறப்பு உண்டு. அந்தச் சிறப்பை முன்னிட்டே அவர்களை **சங்கல்ப சித்தர்** என்று அண்ணல் இயம்புகிறார். இதன் உட்கருத்தை அறிந்துகொள்ளுவது அவசியமாகிறது. மனதில் கொள்ளுகிற தீர்மானத்திற்கு சங்கல்பம் என்று பெயர். நல்லறிஞர் எப்பொழுதும் நல்ல சங்கல்பங்களை மனதில் கொள்வார்கள். பின்பு சங்கல்பம் ஒன்று செய்துகொண்டால் அதை நிறைவேற்றும் வரையில் அச்சங்கல்பத்தை உறுதியாக மனதில் வைத்திருப்பர். அச்சங்கல்பத்தை நிறைவேற்றுதல் பொருட்டே அவர்கள் யாண்டும் முயன்று வருவர். சர்வேசுவரனுக்கு சத்திய சங்கல்பன் என்பது ஒரு பெயர். அதாவது எதை இறைவன் திருவுள்ளம் கொள்ளுகிறாரோ அது ஒருநாளும் பொய்யாய்விடுவதில்லை. சர்வேசுவரனை அடைய விரும்புகிறவர்களும் இறைவனுக்கு அருகில் வரவர சத்திய சங்கல்பர்கள் ஆகின்றனர். சங்கல்ப சித்தன் சத்திய சங்கல்பனுக்கு ஒருபடி கீழே இருக்கிறான். எண்ணியதை எண்ணியாங்கு எய்தும் வரையில் முயற்சியில் அவன் பின்வாங்குவதில்லை. தொடுத்த கருமத்தை நிறைவேற்ற வல்லவன் சங்கல்ப சித்தன். இறைவனுடைய அருளைத் துணையாகக்கொண்டு அதை நிறைவேற்றுமிடத்து சங்கல்பம் சித்தியாய்விடுகிறது. இறைவனை அடைந்தான பிறகு சித்தனுடைய சங்கல்பமும் இறைவனுடைய சங்கல்பமும் ஒன்றுபட்டு விடுகின்றன. அந்நிலையில் சங்கல்ப சித்தன் சத்திய சங்கல்பனாய்விடுகிறான். அறிவிலிகள் நிலையற்ற பொருள்களைப் பெறுதல் பொருட்டு சங்கற்பங்கள் செய்துகொண்

டிருக்கின்றனர். நல்லறிஞரோ நிலையற்ற உலகப்பொருள்களில் நாட்டம் வைப்பதில்லை. யாண்டும் நித்தியமாயுள்ள பரம்பொருள் ஒருவரையே அடையவேண்டுமென்று சங்கல்பித்துக்கொண்டு அந்த மேலாம் சங்கல்பத்தில் அவர்கள் வெற்றியடைந்துவிடுகின்றனர். ஆதலால் நல்லறிஞராகிய அப்பெருமக்களே சங்கல்ப சித்தர் என்று முறையாக அழைக்கப்படுகின்றனர்.

சூரிய வெளிச்சம் பூமியிலுள்ள பொருள்கள் அனைத்தின் மீதும் தாரதம்மியமின்றி சமனாகப் படிகிறது. ஆனால் பூமியில் பொருள்களிடத்துள்ள வேற்றுமையை முன்னிட்டு அச்சூரிய வெளிச்சத்தின் பிரதிபிம்பத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. ஒரு சான்றின் மூலம் இக்கருத்தை விளக்குவோம். கருமணல், செம்மணல், மஞ்சள்மணல், வெள்ளை மணல், கரடு முரடான கண்ணாடி, ஒப்பமான கண்ணாடி, பாதரசம் பூசப்பெற்ற ஒப்பமான கண்ணாடி ஆகியவைகளைப் பக்கம் பக்கம் வரிசையாக வெட்ட வெளியில் வைப்போம். அவைகளின்மீது சூரிய வெளிச்சம் படுகிறது. சமமாக வந்து படிகிற சூரிய வெளிச்சம் இத்தனை பொருள்களில் இத்தனை விதமான படித்தரங்களில் பிரதிபிம்பிக்கும். ஈண்டு இயம்பியுள்ள வஸ்துக்களெல்லாம் ஒரே இனத்தைச் சேர்ந்தவைகள். ஆனால் சூரிய வெளிச்சத்தை வாங்குதலில் அவைகளுக்கிடையில் வேற்றுமையுண்டு. அந்த வேற்றுமை பரிபாகத்தைப் பொருத்ததாகும். பாதரசம் பூசிய கண்ணாடியின்மீது சூரியன் நேரே எழுந்தருளியிருப்பது போன்று பிரகாசிக்கிறது. கருமணலில் அதன் பிரகாசம் கடைநிலையெய்துகிறது. இதேவிதத்தில் எங்கும் நிறைபொருளாகிய கடவுள் எல்லார் உள்ளத்திலும் இருக்கிறார். பின்பு யாருடைய உள்ளத்தில் அவருடைய சான்னித்தியம் மேன்மை

யுற்று மிளிர்கிறது என்றால் அதற்கு விடை தாயுமானவரிட மிருந்து வருகிறது. சங்கல்ப சித்தர்; அவர் உள்ளக் கருத்திலுறை சாட்சி நீ. சாட்சி என்னும் சொல்லுக்கு பார்க்கவல்ல கண்ணோடு கூடியிருப்பது என்பது பொருள். அனைத்தையும் பார்த்தவண்ணமாயிருப்பவர் பரம்பொருள். நமது மனதில் இருந்துகொண்டு உள்ளே நிகழ்வதையெல் லாம் அவர் பார்க்கிறார். ஆதலால் அவருக்கு மனசாட்சி என்னும் பெயர் வந்துள்ளது. பரம்பொருளில் உள்ள சைதன்னியம் அல்லது பேருணர்வு எத்தகையதென்று அறிந்துகொள்ள விரும்புகின்றவர்கள் மனபரிபாகம் அடைந் துள்ள மேலோர்களிடத்திலேயே அதை நன்கு கண்டு கொள்ளலாம். பாதரசம் பூசிய கண்ணாடியின்மீது சூரியன் ஒளிர்வதுபோன்று நல்ல ஆத்ம சாதனங்கள்புரிந்து மனதை முற்றிலும் தூயதாக்கியுள்ள நல்லறிஞரிடத்துப் பரம்பொரு ளின் சான்னித்தியம் மேலோங்கி மிளிர்கிறது.

உயிர் வாழ்ந்திருப்பவர்களில் பலர் இகத்தில் பெரும் பற்று வைத்திருக்கின்றனர். ஏனென்றால் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்னும் அவா அவர்களிடத்திருக் கிறது. தாங்கள் நாடுகிற இன்பத்தின் பெரும்பகுதிக்கு நிலைக்களமாக இவ்வுலகம் இருக்கிறது. இதை விட்டுப் பிரிந்துபோக அவர்களுக்கு மனம் வருவதில்லை. மற்றொரு கூட்டத்தார் இகலோகத்தில் மூப்பு, பிணி, மரணம் முதலிய கேடுகள் இருப்பதால் மறுமை இன்பத்தை அவர்கள் நாடு கின்றனர். அவர்களுடைய நாட்டம் யாவும் இகத்தில் இருக்கும்பொழுதே மறுமையைப்பற்றிய தாய் விடுகிறது. இம்மை மறுமை ஆகிய இரண்டுக்கும் காலாந்தரத்தில் முடிவு உண்டு என்பதை நல்லறிஞர் அறிகின்றனர். இம்மை, மறுமை ஆகிய இரண்டுக்கும் அப்பாலுள்ள பரத்தில் அவர்

கள் நாட்டம் கொள்கின்றனர். சாசுவதமான இன்பம் பரத்தினிடத்துத்தான் இருக்கிறது என்பது அவர்களுடைய துணிபு. பரம்பொருளாகிய தெய்வம் இவ்வுலகில் இருக்கிறாரா அல்லது அவ்வுலகில் இருக்கிறாரா என்னும் கேள்வி வருகிறது. அப்பெரிய பொருளோ அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் மிளிர்ந்துகொண்டிருக்கிறார். இம்மையிலே இன்பத்தை நாடுகிறவர்களுக்கு இம்மைப் பொருள் வடிவெடுத்திருந்து அவர் இன்பத்தை நல்குகிறார். மறுமையில் இன்பத்தை நாடுகிறவர்களுக்கு சுவர்க்கம் முதலிய மறுமை வடிவெடுத்திருந்து அவர் இன்பத்தை அளித்து உதவுகிறார். பின்பு இவை யாவையும் கடந்த நிலையில் தமது நிஜசொரூபத்தில் உயிர்களை முற்றிலும் தம்மயம் ஆக்கி விடுகிறார். இனி, சொர்க்கத்தை நாடுகிறவர்கள் கொண்டுள்ள கருத்து ஒன்று உண்டு. சொர்க்கத்திலே பஞ்ச விருக்ஷங்கள் இருக்கின்றன என்பது கோட்பாடு. ஐந்து மரங்கள் என்பது அதன் பொருள். அவ்வைந்தினுள் சந்தான விருட்சம், கற்பக விருட்சம் ஆகிய இரண்டும் முக்கியமானவை. மாந்தருடைய குடும்பப் பரம்பரையானாலும் சரி, ஆத்ம சாதகர்களுடைய குரு சிஷ்ய பரம்பரையானாலும் சரி இவைகளுக்குத் தடை ஒன்றும் ஏற்படாது நீடூழி நீடூழி நிலைத்திருப்பதற்கு சந்தான விருட்சம் துணைபுரிகிறது. அம் மரத்தினடியில் வசிப்பவனுக்குக் குலநாசமோ, மரபு நாசமோ உண்டாவதில்லை. அடுத்தபடியாகக் கற்பகவிருட்சமானது அதன் கீழிருந்து யார் எதை விரும்புகிறானோ அதையெல்லாம் விரும்பியவாறு அது எடுத்துக் கொடுத்துவிடுகிறது. விரும்பியதையெல்லாம் விரும்பியவாறு பெறுவதற்கே உயிர்கள் அனைத்தும் முயன்று வருகின்றன. ஆகவே சந்தான விருட்சத்தடியிலும் கற்பக விருட்சத்தடியிலும்

வாழ்ந்திருக்க எவ்வுயிர்க்குத்தான் விருப்பம் உண்டாகாது! புராண பூர்வமாகப் பார்க்குமிடத்து சந்தான விருட்சமும் கற்பக விருட்சமும் தேவலோகத்தில் இருக்கின்றன. பின்பு தத்துவ பூர்வமாகப் பார்க்குமிடத்து இவ்விருட்சங்கள் இரண்டும் பரம்பொருளை உருவகப்படுத்தி இயம்பப்பெற்றவைகளாம். பரம்பொருளுக்கே இச்சொற்கள் பொருத்தமானவைகளாக அமைந்துள்ளன. அப்பரம்பொருளோ நமது உள்ளத்தினுள் யாண்டும் நிலைத்துள்ளார். அப்படி உள்ளத்தினுள்ளே வீற்றிருந்துகொண்டு உயிர்கள் இன்பத்தை என்னென்ன விதங்களிலும் வடிவங்களிலும் பெற விரும்புகின்றனரோ அந்தந்த முறைகளிலெல்லாம் இன்பத்தை அவர் அப்போதைக்கப்போது பரிபாகத்துக்கேற்றவாறு வழங்கிவருகிருர். மண்ணுலகில் வாழும் உயிர்கள் பெறுகிற இன்பங்கள் எல்லாம் உண்மையில் பரமாத்மாவிடத்திருந்துவரும் இன்பமேயாம். விண்ணுலகிலிருக்கிறவர்கள் எய்துகிற இன்பங்களெல்லாம் உண்மையில் பரமாத்மாவினிடத்திருந்து வரும் இன்பமேயாம். இவ் இருமைகளையும் கடந்த பாரமார்த்திகப் பெருநிலையில் திகழும் இன்பமும் பரம்பொருளினின்று ஒளிரும் இன்பமேயாம். இக்கருத்துக்களை இகபரத்தும் சந்தான கற்பகத் தேவாயிருந்தே சமஸ்த இன்பமும் உதவுவாய் எனத் தாயுமானவர் தொகுத்துரைக்கின்ருர். சமஸ்த இன்பம் என்பது எல்லா விதமான இன்பமும் எனப் பொருள்படுகின்றது.

மனிதனுக்கு ஜீவபோதம் இருக்கும் வரையில் வினையும் தொடர்ந்து இருந்துவருகிறது. ஆதலால் அவன் கருமி எனக் கூறப்படுகிருன். பிறவிதோறும் மனிதன் தன் கர்மத்தைப் பெருக்கிக்கொண்டே போகிருன். அக்கர்மங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்காகப் புதிய பிறவிகளும்

அமைவனவாகின்றன. மனிதனைப்பற்றிய விபரீத நிலை ஒன்று உண்டு. அவன் வினையாளனாக இருக்க விரும்புகின்றான். அதாவது வினைக்கு அதிபதியாயிருக்க அவன் திட்டமிடுகிறான். பிறகு அவன் வினைக்கு அடிமையாவதே உண்மையில் நிகழ்வதாம். ஆளவந்தவன் ஆளப்படுபவன் ஆகிறான். வினை அவன்மீது ஆதிக்கம் செலுத்தி அவனை ஆண்டு வருகிறது. ஓயாது அவனை அல்லல்படுத்துவதும் வினையே. தூங்கும்பொழுது மனிதன் கனவு காண்கிறான். அக்கனவிலே சிங்கம் ஒன்று தோன்றி அவன்மீது பாய்ந்து அவனைக் கொல்ல முயலுகிறது. அப்பொழுது அவன் கோவென்று கதறி விழித்தெழுந்திருக்கிறான். அவனை விழுங்கவந்த சிங்கம் எதுவென்று இனி ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படித் தோன்றிய சிங்கம் அவனுடைய மனதினால் கற்பிக்கப்பட்டது. அந்தக் கற்பனை அவனுடைய வினையின் வேகத்தால் வந்தது. ஆக, தான் செய்த வினையே தூக்கத்தில் ஒரு சிங்கமாக வடிவெடுத்து அவனைக் கொல்ல வந்தது. இனி, ஜாக்கிரதாவஸ்தையில் அவன் அத்தகைய ஆபத்தினின்று விலகியிருக்கிறானா வென்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஜனக்கூட்டம் நிறைந்துள்ள பட்டணம் ஒன்றில் வாழுகின்றவனைக் கானகத்தில் வாழும் சிங்கம் வந்து தாக்குதற்கு சந்தர்ப்பம் ஏற்படாது என்று நாம் உறுதி கூறலாம். ஆனால் அவனுடைய வினைப்பயன் என்னும் சிங்கம் ஓயாது அவன்மீது பாய்ந்து அவனைத் துன்புறுத்திக்கொண்டிருக்கிறது. கனவில் மட்டுமல்ல, விழித்திருக்கும் வேளையிலும் எத்தனையோ துன்பங்களுக்கும் அல்லல்களுக்கும் மனிதன் ஆளாகிறான். அத்துன்பங்களும் அல்லல்களும் அவன் தனக்குத்தானே உண்டுபண்ணிக் கொண்ட வினையின் விளைவாம். அத்தகைய வினையின்

வாழ்ந்திருக்க எவ்வுயிர்க்குத்தான் விருப்பம் உண்டாகாது! புராண பூர்வமாகப் பார்க்குமிடத்து சந்தான விருட்சமும் கற்பக விருட்சமும் தேவலோகத்தில் இருக்கின்றன. பின்பு தத்துவ பூர்வமாகப் பார்க்குமிடத்து இவ்விருட்சங்கள் இரண்டும் பரம்பொருளை உருவகப்படுத்தி இயம்பப்பெற்றவைகளாம். பரம்பொருளுக்கே இச்சொற்கள் பொருத்தமானவைகளாக அமைந்துள்ளன. அப்பரம்பொருளோ நமது உள்ளத்தினுள் யாண்டும் நிலைத்துள்ளார். அப்படி உள்ளத்தினுள்ளே வீற்றிருந்துகொண்டு உயிர்கள் இன்பத்தை என்னென்ன விதங்களிலும் வடிவங்களிலும் பெற விரும்புகின்றனரோ அந்தந்த முறைகளிலெல்லாம் இன்பத்தை அவர் அப்போதைக்கப்போது பரிபாகத்துக்கேற்றவாறு வழங்கிவருகிருர். மண்ணுலகில் வாழும் உயிர்கள் பெறுகிற இன்பங்கள் எல்லாம் உண்மையில் பரமாத்மாவிடத்திருந்துவரும் இன்பமேயாம். விண்ணுலகிலிருக்கிறவர்கள் எய்துகிற இன்பங்களெல்லாம் உண்மையில் பரமாத்மாவினிடத்திருந்து வரும் இன்பமேயாம். இவ் இருமைகளையும் கடந்த பாரமார்த்திகப் பெருநிலையில் திகழும் இன்பமும் பரம்பொருளினின்று ஒளிரும் இன்பமேயாம். இக்கருத்துக்களை இகபரத்தும் சந்தான கற்பகத் தேவாயிருந்தே சமஸ்த இன்பமும் உதவுவாய் எனத் தாயுமானவர் தொகுத்துரைக்கின்ருர். சமஸ்த இன்பம் என்பது எல்லா விதமான இன்பமும் எனப் பொருள்படுகின்றது.

மனிதனுக்கு ஜீவபோதம் இருக்கும் வரையில் வினையும் தொடர்ந்து இருந்துவருகிறது. ஆதலால் அவன் கருமி எனக் கூறப்படுகிருன். பிறவிதோறும் மனிதன் தன் கர்மத்தைப் பெருக்கிக்கொண்டே போகிருன். அக்கர்மங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்காகப் புதிய பிறவிகளும்

அமைவனவாகின்றன. மனிதனைப்பற்றிய விபரீத நிலை ஒன்று உண்டு. அவன் வினையாளனாக இருக்க விரும்புகின்றான். அதாவது வினைக்கு அதிபதியாயிருக்க அவன் திட்டமிடுகிறான். பிறகு அவன் வினைக்கு அடிமையாவதே உண்மையில் நிகழ்வதாம். ஆளவந்தவன் ஆளப்படுபவன் ஆகிறான். வினை அவன்மீது ஆதிக்கம் செலுத்தி அவனை ஆண்டு வருகிறது. ஓயாது அவனை அல்லல்படுத்துவதும் வினையே. தூங்கும்பொழுது மனிதன் கனவு காண்கிறான். அக்கனவிலே சிங்கம் ஒன்று தோன்றி அவன்மீது பாய்ந்து அவனைக் கொல்ல முயலுகிறது. அப்பொழுது அவன் கோவென்று கதறி விழித்தெழுந்திருக்கிறான். அவனை விழுங்கவந்த சிங்கம் எதுவென்று இனி ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படித் தோன்றிய சிங்கம் அவனுடைய மனதினால் கற்பிக்கப்பட்டது. அந்தக் கற்பனை அவனுடைய வினையின் வேகத்தால் வந்தது. ஆக, தான் செய்த வினையே தூக்கத்தில் ஒரு சிங்கமாக வடிவெடுத்து அவனைக் கொல்ல வந்தது. இனி, ஜாக்கிரதாவஸ்தையில் அவன் அத்தகைய ஆபத்தினின்று விலகியிருக்கிறானா வென்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஜனக்கூட்டம் நிறைந்துள்ள பட்டணம் ஒன்றில் வாழுகின்றவனைக் கானகத்தில் வாழும் சிங்கம் வந்து தாக்குதற்கு சந்தர்ப்பம் ஏற்படாது என்று நாம் உறுதி கூறலாம். ஆனால் அவனுடைய வினைப்பயன் என்னும் சிங்கம் ஓயாது அவன்மீது பாய்ந்து அவனைத் துன்புறுத்திக்கொண்டிருக்கிறது. கனவில் மட்டுமல்ல, விழித்திருக்கும் வேளையிலும் எத்தனையோ துன்பங்களுக்கும் அல்லல்களுக்கும் மனிதன் ஆளாகிறான். அத்துன்பங்களும் அல்லல்களும் அவன் தனக்குத்தானே உண்டுபண்ணிக் கொண்ட வினையின் விளைவாம். அத்தகைய வினையின்

வினைவைப் பாயவரும் ஒரு சிங்கத்தோடு ஒப்பிடுவது பொருந்தும். சிங்கத்தைக் கொல்ல சாதாரண மனிதனுக்கு முடியாது. விலங்குகள் பலவற்றிற்கும் சிங்கத்தைக் கொல்ல முடியாது. அது மிருகேந்திரனுக கானகத்தில் வாழ்ந்திருக்கிறது. மற்று எலியைப் பூனை தாக்கித் தூக்கிக்கொண்டு போவது போன்று சிங்கத்தைத் தாக்கித் தூக்கிக்கொண்டு போகக்கூடிய பறவை ஒன்று உண்டு என்பது ஐதீகம். அப்பறவைக்கு சரபம் அல்லது சிம்புள் என்பது பெயர். சிம்மத்தைக் கொன்று தின்னும் புள் என்பது அதன் பொருள். புள் என்னும் சொல் பறவை எனப் பொருள்படுகிறது. அப்பறவைக்கு எட்டுக் கால்கள் இருக்கின்றன. அக்கால்களுக்கிடையில் அகப்பட்டுக்கொள்ளும் சிங்கமானது எளிதில் அப்பறவைக்கும் அதன் குஞ்சுகளுக்கும் இரையாய் விடுகிறது. அந்த சிம்புளுக்கு ஒப்பானவர் பரமாத்மா. ஈசனை அடையப் பெறுபவர்க்கு கர்மங்களெல்லாம் இருக்குமிடம் தெரியாது அழிந்துபட்டுப் போய்விடுகின்றன. ஆக, வினையை ஒழிப்பதற்குக் கடவுளைச் சார்ந்திருந்து கடவுளை அடைவது ஒன்றே உற்ற உபாயம். இக்கருத்தை சிங்கத்தையொத் தெனைப்பாயவரும் வினையினைச் சேதிக்க வரும் சிம்புளே என்று தாயுமானவர் இயம்புகிறுர். சேதித்தல் என்றுல் கிழித்துவிடுதலாம்.

அடுத்தபடியாக சிந்தாகுலத் திமிரமகல வருபானுவே என்று அவர் இயம்புகிறுர். இச்சொல்லடுக்கைப் பிரித்துப் பகருங்கால் சிந்தா ஆகுல திமிரம் அகல வருபானுவே என்று அமைகிறது. சிந்தை என்னும் சொல் மனம் அல்லது உள்ளத்தைக் குறிக்கிறது. ஆகுலத்துக்குப் பொருள் குழப்பம் அல்லது கலக்கம். இருளுக்குத் திமிரம் என்பது மற்ஞெரு பெயர். அகலுதல் என்றுல் நீங்குதல். பானு என்

னும் சொல் சூரியன் எனப் பொருள்படுகிறது. புறவுலகில் இருள் சூழ்ந்து கிடக்குங்கால் எல்லாம் ஒரே மறைவு மயம். ஒரு பொருளினின்று மற்றொன்றைப் பிரித்துப் பார்ப்பதற்கு இருள் இடந்தருவதில்லை. உண்மையை உள்ளபடி அறிதற்கோ செயலைச் சரியாகச் செய்தற்கோ இருள் இடந்தருவதில்லை. ஆனால் சூரியோதயமானதும் பொருள்களெல்லாம் உள்ளபடி புலனாகின்றன. செயலை எப்படிக்கொண்டு செலுத்துதல் என்பதும் பொழுது புலர்ந்த பிறகு நன்கு விளங்குகிறது. சூரியனில்லாதபொழுது புறவுலகில் இருள் சூழ்ந்து இருப்பதற்கு நிகராக மனிதனுடைய உள்ளத்தினுள் இருள்நிலையொன்று உண்டு. அவன் அக்ஞானத்தில் ஆழ்ந்துகிடப்பதே அந்நிலையாம். அக்ஞானத்தை இருள் என்கிறோம். மனிதனுடைய மனதில் கிலேசங்களும் குழப்பங்களும் வந்துகொண்டிருப்பதெல்லாம் அக்ஞானத்தின் விளைவேயாம். ஞானோதயம் அடையப்பெறுகிறவனுக்கு மனக் கவலைகளெல்லாம் பறந்தோடிவிடுகின்றன. ஞானோதயம் வருவதும் இறைவனை சாக்ஷாத்கரிப்பதும் ஒன்றேயாம். ஞானத்தைப் பொழுது புலர்வதோடு ஒப்பிடலாம். பரம்பொருளை சூரியநாராயணனாகவே கருதலாம். ஆதலால் தான் சிந்தாகுலத் திமிரம் அகலவரு பானுவே என்று அண்ணல் இயம்புகிறார்.

மனிதனொருவன் ஆழ்கடலிலே தத்தளித்துக்கொண்டிருக்கும் நிலைக்குத் திடீரென்று எப்படியோ வந்துவிடுகிறான். அவனுக்குச் சிறிது நீந்தத் தெரியும். நெடுநேரம் நீந்தினால் கால் கைகளெல்லாம் சோர்ந்துபோம். உடல் உறுதி இன்னும் சிறிது எஞ்சியிருக்கிறது. ஆனால் கடலோ கரை காணாதது. எப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும் கண்ணுக்கு எட்டுமளவு நெடுங்கடலே தென்படுகிறது. ஆயினும்

ஏதேனும் ஒரு திக்கில் மரக்கலம் ஒன்று தென்படுமாகில் அதை எட்டுதல் பொருட்டு மனிதன் கொள்ளுகிற பேராசையை யாருமே மாற்றிவிட முடியாது. எப்படியாவது அவன் அம்மரக்கலத்தை அணுகி அதில் ஊர்ந்துகொள்வானுகில் கவலை நீங்கப் பெற்றவனுகிருன். எப்படியாவது பல நாளைக்குப் பிறகாவது ஏதாவது ஒரு கரையில் ஒதுக்கப் படுவதைப்பற்றிய நம்பிக்கை அவனுக்கு வருகிறது. பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கிற மனிதன் ஒருவன் அதே பரிதாபகரமான நிலையிலிருக்கிருன். பரம்பொருள் என்னும் மரக்கலம் அம்மனிதனுக்குக் கிட்டுமாகில் பிறவிப் பெருங்கடலைத் தாண்ட அவன் வல்லவனுவான். இக்கருத்தை **தீனனேன் கரையேறவே கங்கற்ற பேராசை வெள்ளத்தின் வளர் அருள் ககனவட்டக் கப்பலே** என்று தாயுமானவர் இயம்புகிருர். தீனனேன் என்னும் சொல் எளியேன் எனப்பொருள் படுகிறது. முக்தியடைவது கரையேறுதலுக்கு ஒப்பாகிறது. கங்கற்ற பேராசை வெள்ளம் என்பது அளப்பரிய பேரின்பக் கடல். வளர் அருள் ககன வட்டக்கப்பல், என்பது பேரின்பக்கடலில் சஞ்சரிக்கிற மரக்கலத்தைக் குறிப்பிடுகிறது. அருள் நிறைந்த சித் ஆகாசமானது அகண்டமாக விரிந்து கொண்டு இருக்கிறதென்ருலும் மனிதனுடைய தலைக்கு மேலே அது ஒரு பெருவட்டமாகத் தென்படுகிறது. அந்தச் சிதாகாசத்தில் சித் சொரூபமாய் எழுந்தருளி யிருக்கும் சித்சபேசனே பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கிற ஜீவனுக்குப் பேரின்பத்தை ஊட்டும் மரக்கலம் போன்று அமைந்துள்ளார். இக்கருத்துக்கள் யாவும் மேலே உள்ள பாடலில் அடங்கியுள்ளன.

தபோவனத் தொடர் 58

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை—639 115
திருச்சி ஜில்லா

விலை ரூ. 2—00